Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

27°C 26°C

பக்கம் 24 ■ சுடர்: 28 ■ கதிர்: 307 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 14, திங்கள் 30.09.2013

## போரால் பாதிக்கப்பட்டோரை சந்திக்க இலங்கை என்னை அனுமதிக்கவில்லை

### குற்றம் சாட்டுகிறார் நவிப்பிள்ளை

கொழும்பு, செப். 30
போரால் உறவுகளையும் உடைமைகளையும் இழந்த தமிழ் - சிங்கள மக்களை சந்திக்கவும் பாதிக்கப்பட்ட இடங்களை பார்க்கவும் தன்னை இலங்கை அரசு அனுமதிக்கவில்லை. சர்வதேச உதவிகளை பெற்று கண்ணுக்கு தெரியும் வீதிகளையும் கட்டடங்களையும் கட்டிவிட்டு இலங்கை அரசு பெருமைப்படுவதால் மனித உரிமைப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டன என்று கருத முடியாது. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர்நவநீதம்பிள்ளை.
ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு (ஏபிசி) வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில்



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
வடக்கு தமிழ் மக்கள் அரசுக்கு எதிராக ஆதாரம்மிக்க முறைப்பாடுகளை கொண்டுள்ளனர். முக்கியமானதாக இராணுவத்தினரின் படைப் பிரசன்னம் அவர்களை அச்சத்தில் ஆழ்த்தி உள்ளதை அவதானிக்க முடிகிறது.
அரசசார்பற்ற நிறுவ

21

## நவிப்பிள்ளை இலங்கைக்கு காலக்கெடு வழங்க முடியாதாம்

கொழும்பு, செப்.30
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீ தம்பிள்ளை காலக்கெடு எதனையும் தமக்கு விதிக்கவில்லை என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.
இது குறித்து கருத்து வெளி யிட்டுள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம மேலும் தெரித்துள் ளதாவது:
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள்தொடர்பில்நடவடிக்கை எடுப்பதற்கு நவநீதம்பிள்ளை காலக்கெடு எதனையும் விதிக்கவில்லை.
அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் நவநீதம்பிள்ளை, இலங்கை தொடர்பில் சமர்ப்பித்த வாய்மொழி மூல அறிக்கையை ஊடகங்கள் பிழையாக அர்த்தப் படுத்தியுள்ளன.
இலங்கை அரசு உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்தினால் அதனை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத்

21

# மாவட்டத்துக்கு ஓர் அமைச்சு நபர்கள் இன்னும் முடிவில்லை

## கொழும்புக் கூட்டத்திலேயே இறுதித் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 30
வடமாகாண சபையின் 4 அமைச்சுப் பதவிகளையும் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுக்கு போதிய பிரதிநிதித்துவமும் அதேநேரத்தில் சகல மாவட்டங்களுக்கான பிரதிநிதித்துவமும் கிடைக்கும் வகையில் பகிர்வது என்று நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் யார் யாருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது என்று கொழும்பில் நடைபெறும் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படவுள்ளதாகவும், போனஸ் ஆசனங்கள் முன்னரே தெரிவிக்கப்பட்டதைப் போன்று முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு வழங்குவதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.
வடமாகாணசபைத் தேர்தலில் பெருவெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாணத்



(ஆவணப் படம்)

தின் ஆட்சியை அமைக்கவுள்ளது. மாகாணசபையின் 4 அமைச்சுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற இரு போனஸ் ஆசனங்களை யாருக்கு வழங்குவது என்பது குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளிடையே தொடர் கலந்துரையாடல் இடம் பெற்று வந்தது.
இந்தநிலையில்போனஸ் ஆசனம் தொடர்பில் தேர்தல்கள் ஆணை

21

மீண்டும் ஜெயலலிதா கடிதம் 06

சிரியாவுக்கு எதிராக ஐ.நாவில் தீர்மானம் 07

முல்லைத்தீவு பாடசாலைகளில் மதிய உணவு நிறுத்தப்படுமா? 15

சமபோஷ உதைபந்து காலிறுதி முடிவுகள் 22

அரை இறுதிக்குச் சென்னை 23

## காணி அதிகாரம் தொடர்பில் தெரிவுக்குழுவுக்கு யோசனை

### நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வாசுதேவ திட்டம்

கொழும்பு, செப்.30
காணிஅதிகாரங்களைமாகாண சபைகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற யோசனையை எதிர்வரும் 3 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் விசேட தெரிவுக் குழு முன்னிலையில் சமர்ப்பிக்க உள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.
மத்திய அரசுக்கு மாத்திரம் அல்லாது காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கும்வழங்க வேண்டும் என கோரியே அவர் தனது யோசனையை சமர்ப்பிக்க வுள்ளதாக கூறியுள்ளார்.
இது தனது தனிப்பட்ட யோசனை அல்ல எனவும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வக்கட்சி பிரதிநிதிகள் குழுவில் 90 வீத மானவர்கள் இந்த யோசனைக்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
காணி அதிகாரங்கள் மத்திய அரசுக்கு மட்டுமே உடையது என்று உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியிருந்தது. எனினும்மாற்றுயோசனை ஒன்றை கொண்டு வர நீதிமன்ற தீர்ப்பு தடையாகாது எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## மஹிந்தவை ஐ.நாவில் சந்திக்க விரும்பாத இந்தியப் பிரதமர்

### தாமதமாகவே கூட்டத்துக்கு வந்தார்

கொழும்பு, செப். 30
ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் கலந்துகொள்ள சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்க திட்டமிட்டிருந்தார். மன்மோகன் சிங் கூட்டத்துக்கு தாமதமாகவே வந்ததால் மஹிந்தவின் முயற்சி தோல்வியில் முடிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.
ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்கக் கூடாது என்பதற்காகவே தாமதமாகவே வந்தார் என்று கூறப்படுகிறது. எனினும் வோஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்து விட்டு 3 மணி நேரம் தாமதமாக நியூயோர்க்சென்றதாலேயேஇலங்கை ஜனாதிபதியை சந்திக்கமுடியாது போன தாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.
(ஐ)

# ஒன்றரை இலட்சம் தமிழர்கள் சாவுக்கு வழிவகுத்தோர் மஹிந்தவும் விமலுமே

### பொது எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 30
"நாட்டின் நலனுக்காக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் ரணில் விக்கிரசிங்க செய்து கொண்ட சமாதான ஒப்பந்தத்தைக் குழப்பியடித்து மீண்டும் போர் ஆரம்பமாக காரணமாக இருந்தவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சர் விமல் வீரவன்ஸவுமே. இவர்களின் இந்தச் செயற்பாட்டின் காரணமாகத் தான் நாட்டில் ஒன்றரை இலட்சம் தமிழர்களும், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் காவு கொள்ளப்பட்டனர்."
இவ்வாறு பொது எதிரணியினர் நேற்று குற்றம்சுமத்தியது.
ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கப்பணிமனையில் நேற்று இடம்பெற்ற இவ்வமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.
இதன்போது நவசமசமாஜக் கட்சி யின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தவை வருமாறு:
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரசிங்கவை பதவியிலி ருந்து விலகக்கோரி பல எதிர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. ரணிலை உடனடியாக பதவியிலிருந்து விலக்க வேண்டும் என வலியுறுத்தி தெற்கிலிருந்து கொழும்பு வரையிலான பாதயாத்திரை ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஆனால், இவர்களைப் போன்றவர்கள் ரணிலைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன. ரணில் நாட்டின் நலனுக்காகப் பாடுபட்ட ஒரு மனிதர். கட்சியின் மீதும் மக்களின் மீதும் அளவு கடந்த அன்பும், மரியாதையும் வைத்திருக்கும் ஒரு நபர்.
நாட்டு மக்களின் நலனை கருத்திற் கொண்டு விடுதலைப்

21

## நல்லூர் பிரதேச சபையின் ஊழியர்கள் மீது தாக்குதல்

### மூன்றுபேர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப்.30
சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த நல்லூர் பிரதேச சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று தொழிலாளர்கள் படுகாயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் கோண்டாவில் கலாசாலை வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.
இது குறித்து மேலும் தெரியருவதாவது-
வழமைபோல குறித்த பகுதியில் நல்லூர் பிரதேசசபையைச் சேர்ந்த

21

உதயன்
30/09/2013

# இலங்கைக்கு எதிராக போராட்டம் நடத்திய தமிழக மாணவர்கள் பொலிஸாரால் கைது






சென்னை, செப். 30
சிங்கள கிரிகெட் வீரர்களை இந்தியாவில் முழுமையாகத் தடை செய்யக்கோரி சென்னையில் தமிழக மாணவ அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது நூற்றுக் கணக்கானோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
நேற்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அருகில் கூடிய மாணவர்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது சிங்கள வீரர்கள் சம்பியன்ஸ் லீக் மற்றும் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடுவதற்கு தடைவிதி, இலங்கையுடன் ஒருநாள் தொடர், டெஸ்ட் மற்றும் 20/20 போட்டிகளை நடத்தாதே, ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் வரை இனப்படுகொலை நாடான இலங்கையுடனான எல்லா விளையாட்டு போட்டிகளையும் புறக்கணி போன்ற கருத்துக்களை வலியுறுத்தி மாணவர்கள் போராட்டத்தில் குதித்திருந்தனர். இதன்போது அங்கு கூடிய பொலிஸார் மாணவர்களை கடுமையாகத் தாக்கி கைது செய்தனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் மீது வழக்குபதிவு செய்ய தமிழக பொலிஸார் நடவடிக்கை மேற் கொண்டு வருவதாகவும் இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

## விபத்தில் இருவர் படுகாயம்



யாழ்ப்பாணம், செப். 30
அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்த விபத்தில் நேற்று பி.ப. 3 மணியளவில் நடைபெற்றுள்ளது.
சம்பவத்தில் குளமங்கால், மல்லாகத்தைச் சேர்ந்த தங்கவடிவேலு உதயசங்கர் (வயது -24), மோகனதாஸ் கபிலன் (வயது -19) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:
மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகே அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு கொங்கிறீட் கற்கள் மீது மோதி வீதிக்கு வெளியே தூக்கி வீசப்பட்டனர்.
சம்பவத்தில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (ஐ-36)

## 75 ஆயிரம் கோடி கடன்

தேசிய சேமிப்பு வங்கி நூற் றுக்கு ஒன்பது வீத வட்டிப்படி 750 மில்லியன் டொலர்களை கடன் பெற்றுள்ளது.

இலங்கை அரசுக்கு தற்போது 75 ஆயிரம் கோடி ரூபா கடன் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயா கமகே தெரிவித் துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேசிய சேமிப்பு வங்கி நூற்றுக்கு ஒன்பது வீத வட்டிப்படி 750 மில்லியன் டொலர்களை கடனாக பெற்றுள்ளது.
இதேவேளை, பொதுநலவாய மாநாட்டுக்காக 500 கோடி செலவு செய்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள், மாநாடு முடிந்ததன் பின்னர் அவை அமைச்சர்களின் உறவினர்களுக்கு வழங்கப்பட்டு விடும். இவையெல்லாம் தேவையற்ற செலவுகளே - என்றார். (ஐ)

## மாகாணசபை உறுப்பினர்களுக்கு வாகன இறக்குமதி சலுகை இல்லை

கொழும்பு, செப்.30
மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வாகன அனுமதிப்பத்திர சலுகை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இனிவரும் இரண்டரை ஆண்டு காலத்துக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு வரி விலக்குடன் கூடிய வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது என தெரியவருகிறது.
இதன்படி புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 145 மாகாணசபை உறுப்பினர்களுக்கும் எதிர்வரும் இரண்டரை ஆண்டு காலப் பகுதிக்கு வாகன அனுமதிப்பத்திரம் கிடைக்காது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.
வெற்றியீட்டிய சில மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வாகன அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெற்றுள்ளது.
மாகாணசபை உறுப்பினருக்கு 45000 அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனமும், முதலமைச்சர்களுக்கு 55000 அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனமும் இறக்குமதி செய்ய இந்த அனுமதிப்பத்திரத்தின் ஊடாக சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சோடாப் போத்தலுக்குள் எறும்பு குழந்தை வைத்தியசாலையில்

வலி.வடக்கு, செப்.30
சோடாப் போத்தலினுள் எறும்புகள் இருப்பதை அறியாது அதனை எடுத்த அருந்திய ஒன்றரை வயதுப் பெண் குழந்தை தொண்டை வீங்கிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கட்டுவன் வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த ரஜித் கபின்ஜா என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே கடி எறும்பினால் கடியுண்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.
வீட்டில் உள்ளவர்கள் சோடா வாங்கிக் குடித்துவிட்டு எஞ்சிய சோடாவை போத்தலுடன் அப்படியே வைத்து விட்டனர். இதன் போது எறும்புகள் சோடாப் போத்தலினுள் நுழைந்து விட்டன. இதனை அறியாத பெண் குழந்தை எறும்புகள் உள்ள சோடாவை எடுத்துக் குடித்துள்ளது. எறும்புகள் குழந்தையின் தொண்டைப் பகுதியில் கடித்ததால் அது வீறிட்டு அழத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து குழந்தையை அவதானித்த பெற்றோர் உடனடியாக தெல்லிப்பழைஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசென்றனர். பின்னா அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு குறித்த பெண் குழந்தை சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளார். (ங-86)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க

## யாழ். கிளைச் சங்க செயற்பாடுகள் நேற்றுமுதல் இடைநிறுத்தப்பட்டது

**பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு விரோதமாகச் செயற்படுவதாலும் யாழ்ப்பாணத்தில் சுகாதார சேவைகள் பாதிக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது.**

யாழ்ப்பாணம், செப்.30
அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். கிளையின் செயற்பாடுகளை தாய்ச்சங்கம் நேற்றுத் தொடக்கம் இடைநிறுத்தியுள்ளது. அத்துடன் யாழ். கிளை தாய்ச் சங்கத்துடனான இணைப்பாளராக வைத்திய நிபுணர் எஸ்.நிமலனை நியமித்துள்ளதாக தாய்ச்சங்கம் அறிவித்துள்ளது.
தாய்ச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதன்போதே பொதுச்சபை இந்த முடிவை எடுத்துள்ளது.
யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ளக இடமாற்றம் பெற்றுச் செல்லத் தகுதியுடைய மருத்துவர்கள் சிலரின் சுயநலன் காரணமாக இடமாற்றத்துக்கு விரோதமாகச் செயற்படுவதனாலும், யாழ்.மாவட்டத்திலுள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ள மருத்துவர்களை தடுத்து வைத்திருப்பதாலும் பொதுக்குழுவில் முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு விரோதமாகச் செயற்படுவதாலும் யாழ்ப்பாணத்தில் சுகாதார சேவைகள் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாலேயே யாழ். கிளையின் செயற்பாடுகளை இடைநிறுத்தியதாக தாய்ச் சங்கம் அறிவித்துள்ளது.
எதிர்காலத்தில் தாய்ச் சங்கத்தில் பொதுச் சபை முடிவு எடுக்கும் வரை யாழ். கிளையின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-4)



கிளிநொச்சியில் இருந்து காங்கேசன்துறை வரையான ரயில் பாதை அமைக்கும் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது கிளிநொச்சியில் இருந்து ஆனையிறவு வரையான பகுதிக்கு கற்கள் பறிக்கப்பட்டு பரவப்பட்டுள்ளதுடன் தண்டவாளங்கள் பொருத்தும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. (ஐ-86)

## சவாரிப்போட்டியில் விபத்து ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 30
எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாட்டுவண்டி சவாரியின் போது ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த ஒருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
புத்தூர் மேற்கைச் சேர்ந்த அப்புத்துரை மௌலேஸ்வரன் (வயது-33) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
எழுதுமட்டுவாழில் நேற்று நடைபெற்ற மாட்டுவண்டிச் சவாரியின் போது பாய்ந்து சென்ற வண்டில் மாடு பள்ளத்தில் வீழ்ந்தது. இதன்போது வண்டிலைச் செலுத்தி வந்த நபர் தூக்கி வீசப்பட்டுள்ளார்.
இதன்போது பின்னால் வந்த மற்றொரு வண்டிலின் சில்லு, குறித்த நபரின் இடுப்புப் பகுதியால் ஏறிச்சென்றது.
விபத்தில் சிக்கியவர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ-10)

## மத்திய கிழக்கில் போலியான நாணயத் தாள்கள்

மத்திய கிழக்கு நாடுகளில் போலி நாணயத் தாள்களின் புழக்கம் அதிகரித்திருப்பதால் அங்கு பணி புரியும் இலங்கையர்கள் தமது சம்பளத்தை வங்கிகள் மூலம் பெற்றுக்கொள்ளுமாறு இலங்கையின் வெளிநாட்டு சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது.
மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவ்வாறான போலி நாணயத் தாள்களுடன் இலங்கைக்கு வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ங-22)

## பொலிஸாரின் அடாவடியால் வீட்டுத் திட்டப் பணிகள் பாதிப்பு?

மாங்குளம், செப்.30
வீட்டுத் திட்டத்துக்காக மணல், மரம் என்பவற்றைக் கொண்டு செல்வோரிடம் மாங்குளம் பொலிஸார் அடாவடிச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
மல்லாவி, பாலிநகர் பகுதிகளில் இந்திய வீட்டுத் திட்டம் உட்பட வீடமைப்புப் பணிகளுக்கென மணல் மற்றும் மரங்களைக் கொண்டு வரும் வாகனச்சாரதிகளை இடைமறிக்கும் பொலிஸார் அவற்றை சட்டவிரோதமானவை என்று கூறி பறிமுதல் செய்வதுடன் வாகனச் சாரதிகளையும் கைது செய்கின்றனர்.
அது மட்டுமல்லாது வீட்டுத் திட்டத்துக்கான மரத்தள பாடங்களை உற்பத்தி செய்யும் நபர் ஒருவரின் இயந்திரத்தையும் பறிமுதல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
அதேவேளை வவுனிக்குளம் பகுதியில் மணல் ஏற்றச்சென்ற உழவு இயந்திர சாரதி ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு திருப்பி அனுப்பப் பட்டதாகவும் கூறப்படுகிறது.
நடைபெற்று முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு ஆதரவளித்ததற்காகவே பொலிஸாரும், இராணுவத்தி னரும் இந்தக் கெடுபிடிகளை செய்து வருவதாக அப்பகுதி மக் கள் தெரிவிக்கின்றனர். (ஐ-400-6)

வன்முறைகளால் உடல், உள ரீதியாக

## பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் பெண்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

**சாவகச்சேரி ஆஸ்பத்திரி புள்ளி விவரம் தகவல்**

தென்மராட்சி,செப்.30

பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

வன்முறைகளால் பாதிக்கப்பட்ட நிலையில் இதுவரை 18 பேர் விடுதிகளில் த்ங்கி சிகிச்சை பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதியில் சிகிச்சை பெறுபவர்களுக்கு சிகிச்சையுடன் வன்முறைக்கான அடிப்படைப் பிரச்சினைகளைக் கண்டறியும் முகமாக குழுவொன்றால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

வாரத்தில் ஒரு தடவை நடத்தப்படும் மனநோய் சிகிச்சைப் பிரிவுக்கு சில பெண்கள் அழைத்துச் செல்லப்பட்டு வைத்திய அதிகாரியால் சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கப்படுகிறது.

வன்முறைகளால் பாதிப்புக்குள்ளாகி மன உழைச்சலுக்கு உள்ளாகி பெண்கள் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு வருவதையும் காண முடிகிறது.

இவ்வாறான மன உழைச்சலுக்கு உள்ளாகும் பெண்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய உளவள அலுவலர், பெண்கள் விவகார அலுவலர், பொலிஸார், சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரைக் கொண்ட குழு விசாரணைகளை நடத்திவருகிறது.

வைத்தியசாலையில் நிரந்தர மனநோய் சிகிச்சை வைத்திய அதிகாரி கடமையாற்றினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொள்ள பயந்து வீடுகளில் தங்கியிருப்போரையும் அழைத்து அறிவுரைகள் வழங்கி வன்முறைகளின் தாக்கத்தைக் குறைக்க முடியுமென நோயாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நிரந்தர மனநோய் சிகிச்சைப் பிரிவுக்கு நிரந்தர வைத்திய அதிகாரியொருவரை நியமிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-9)

# திருநெல்வேலி இழைய வளர்ப்பு நிலையம் இனியாவது செயற்படுமா?

**கேள்வி எழுப்பும் விவசாயிகள்**



அச்சுவேலி, செப்.30

திருநெல்வேலி இழைய வளர்ப்பு நிலையம் எப்போது செயற்படும். மத்திய அரசின் கீழ் செயற்படும் குறித்த நிலையத்தை செயற்பட வைப்பதில் உயர் அதிகாரிகள் ஏன் அக்கறை கொள்ளாமல் அசமந்த நிலையில் உள்ளனர். யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு அதன் மூலம் கிடைக்கக் கூடிய நன்மைகளைக் கிடைக்காமல் செய்வதா? உள்நோக்கம் என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

திருநெல்வேலி விவசாய ஆராச்சிப் பிரிவின் கீழ் உள்ள இழைய வளர்ப்பு நிலையம் உரிய முறையில் செயற்படாமல் வருடக் கணக்கில் காத்துக்கிடக்கின்றது.

பல மில்லியன் ரூபா செலவில் இதனை நிறுவுவதற்கு காட்டப்பட்ட அக்கறை செயற்பட வைப்பதில் செலுத்தப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

இழைய வளர்ப்பு நிலையத்தை உரிய முறையில் செயற்பட வைப்பதற்குப் பயிற்சி பெற்ற அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை. அதனால் தான் செயற்படாமல் ஆண்டுக்கணக் காக மூடப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

விவசாய ஆராய்ச்சிப் பிரிவு மத்திய அரசின் கீழ் உள்ளது. விவசாய ஆராய்ச்சிப் பிரிவின் கீழ்தான் இழைய வளர்ப்பு நிலையமும் அமைந்துள்ளது.

பல்மில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட்ட இழைய வளர்ப்பு நிலையம் கணினிமயப்படுத்தப்பட்ட கருவி சாதனங்களையும் உயர்தர இரசாயனங்களையும் இலத்திரனியல் கருவிகளையும் உள்ளடக்கியது.

நிலையம் உரிய முறையில் நீண்ட காலமாகச் செயற்படாமல் இருப்பதால் இரசாயனப் பொருள்கள் காலாவதியாகி இருப்பதோடு கருவி சாதனங்களும் பழுதடைந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இழைய வளர்ப்பு முறை மூலம் வாழை உட்பட பழவகை உற்பத்திக்காக பயிர் நாற்றுக் களை உற்பத்தி செய்ய முடியும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நாற்றுக்கள் நோய்த் தாக்கம் இல்லாமல் வளர்வதோடு கூடிய விளைச் சலையும் தரக்கூடியதாக இருக்கும்.

இந்த வகையில் தரமான நாற்று வகைகளை யாழ்.மாவட்ட விவசாயிகள் பெற்று பயன் அடையாத நிலையில்தான் இழைய வளர்ப்பு நிலையத்தை உரிய முறையில் செயற்பட வைக்காமல் முடக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-11)

## ருசி கண்ட திருடன் மீண்டும் மூன்றாம் நாள் வந்து சிக்கினான்

**அச்சுவேலி வடக்கில் சனி இரவு சம்பவம்**

அச்சுவேலி,செப்.30

நள்ளிரவு வேளையில் இரண்டாவது தடவையாக பலசரக்கு கடையைப் பிரித்து பொருள்களை அள்ளிச் செல்ல முயன்ற உள்ளூர் வாசி ஒருவன் கையும் மெய்யுமாக பிடிபட்டான்.

அச்சுவேலி வடக்கு முருகன் கோயிலுக்கு அண்மையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது:-

மூன்று தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட வியாபார நிலையத்தைப் பிரித்து குறித்த திருடன் பொருள்களைக் களவாடிச் சென்றிருந்தான். இது தொடர்பாக கடை உரிமையாளர் சாத்திரம் கூறும் சாமியார் ஒருவரை அணுகி இருந்தார். அந்தச் சாமியார் "விழிப்போடு இருந்துகொள். கள்வன் மீண்டும் வருவான்" எனக் கூறி அனுப்பினார்..

அதை அடுத்து இளைஞர்கள் சிலர் இரவில் மறைந்திருந்து கவனித்து வந்தனர். மூன்றாவது நாளும் இரண்டாவது தடவையாக கடையைப் பிரிப்பதற்கு வசதியாக அலவாங்கு சகிதம் வந்தான் அந்தத் திருடன். அவன் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட போது காத்திருந்த இளைஞர்கள் கையும் மெய்யுமாக அவனை மடக்கிப் பிடித்தனர். அதன் பின்னர் எல்லோரும் கள்வனுக்கு தரவேண்டிய 'கவனிப்பு'களைக் கொடுத்தனர். அத்துடன் உள்ளூரில் குடியிருக்கும் சம்பந்தப்பட்ட நபரின் வேஷத்தையும் கண்டுகொண்டனர். (ஓ-11)

## 82 விவசாயக் கிணறுகள் மட்டுவிலில் புனரமைப்பு

தென்மராட்சி,செப்.30

மட்டுவில் வடக்குப் பகுதியில் உள்ள 82 விவசாயக் கிணறுகள் வேல்ட் விஷன் நிறுவனத்தினரால் சுமார் 2 மில்லியன் ரூபா செலவில் புனரமைத்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். கத்தரிக்காய் உற்பத்திக்குப் பெயர்பெற்ற மட்டுவில் வடக்குப் பகுதி தோட்டங்களில் காணப்பட்ட கிணறுகள் கோடை காலத்தில் நீர் வற்றி காணப்படுவதால் தொடர் விவசாய நடவடிக்கையை மேற்கொள்ள முடியாதுள்ளதாக அந்தப் பகுதி கமக்கார அமைப்பு சுட்டிக்காட்டி அவற்றை புனரமைத்துத் தருமாறு கோரியிருந்தனர்.

அதனையடுத்து தோட்ட நிலங்களில் காணப்பட்ட 82 கிணறுகளை 20 லட்சத்து 64 ஆயிரம் ரூபா செலவில் புனரமைத்து வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தனர். (வ-9)

## தேர்தலில் வாக்களிக்க சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை

யாழ்ப்பாணம்,செப்.30

வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக வவுனியாவிலிருந்து தனது இடமான கோப்பாய்க்கு தேர்தலுக்கு முன்னர் புறப்பட்ட ஆசிரியரைக் காணவில்லை என்று வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் மத்தி, கிளவானை ஒழுங்கையைச் சேர்ந்த கார்த்திகேசு நிரூபன் (வயது-38) என்பவரே காணாமற்போனவராவார்.

வவுனியா நேரியகுளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் அவர் தேர்தலில் வாக்களிப்பதற்காக கடந்த 19 ஆம் திகதி வவுனியாவிலிருந்து கோப்பாய்க்குப் புறப்பட்டுள்ளார். இன்றுவரை அவர் வீடுவந்து சேரவில்லை. வவுனியாவில் வீடு ஒன்றில் தங்கியிருந்து வார இறுதியில் கோப்பாய்க்குத் திரும்புவது வழமை என்று அவரின் பெற்றோர் தெரிவித்தனர்.

> தேர்தலில் வாக்களிப் பதற்காக கடந்த 19 ஆம் திகதி வவுனியாவிலிருந்து கோப்பாய்க்குப் புறப்பட்டுள்ளார். இன்றுவரை அவர் வீடு வந்து சேரவில்லை.

கோப்பாய்க்குச் செல்வதாகப் புறப்பட்டவர் கடந்த வாரம் பாடசாலைக்குச் செல்லவில்லை. வவுனியாவில் அவர் தங்கியிருக்கும் வீட்டுக்கும் செல்லாததால் அந்த வீட்டிலிருப்பவர்கள் கோப்பாயில் உள்ள ஆசிரியரின் வீட்டாருக்கு கடந்த வியாழக்கிழமை அழைப்பை ஏற்படுத்திக் கேட்டபோதே அவர் காணாமற்போனமை தெரிய வந்ததாக பெற்றோர் மேலும் தெரிவித்தனர். வவுனியா பொலிஸில் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (வ-4)

# அரசியல்சார் இடமாற்றம், நியமனங்கள் நீதியான வகையில் நடைமுறைப்படுத்துக

**இலங்கை ஆசிரியர் சங்க வடமாகாணப் பிரதிநிதி வலியுறுத்து**

யாழ்ப்பாணம், செப். 30

வடமாகாணக் கல்வித் துறையில் இனிமேலாவது நீதி, சமத்துவம் பேணப்பட வேண்டும். அரசியல் சார்பான நியமனங்கள், இடமாற்றங்கள் பழிவாங்கல் இன்றி நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வடமாகாணப் பிரதிநிதியும், மத்திய குழு உறுப்பினருமான க.சக்திதரன் தெரிவித்தார்.

சங்கத்தின் 56 ஆவது பேராயர் மாநாடு திருகோணமலை ஸ்ரீமாதுமை அம்பாள் மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு வடமாகாண கல்வி வளர்ச்சிக்கான தடைகள் தொடர்பில் பிரேரணையை முன்வைத்து உரையாற்று கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரேரணையில் அவர் தெரிவித்ததாவது:-

சமூக ரீதியான ஒடுக்கு முறைகள் அற்ற சுயாதீன, நேர்மையான நியமனங்கள், இட மாற்றங்கள் வழங்கப்படல் வேண்டும். இடமாற்ற சபைகள் அதற்குரிய ஒழுங்குமுறையில் கூட்டப்படுதல் வேண்டும்.

பாடசாலைகளில் ஆசிரியர் ஆளணி பூர்த்தியாக்கப்பட்டிருந்தாலும் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர் தரங்களில் கற்கின்ற மாணவர்களை பாடங்களுக்கு ஏற்ப பொருத்தமான ஆசிரியர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

அதிபர், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் தமது கடமைகளைச் செவ்வனே செய்யும் போது அவற்றுக்கு மேலதிகாரிகள் இடையூறு செய்வதோ, பழிவாங்கி இடமாற்றம் செய்வதோ உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

கல்வித் திணைக்களங்களில் கல்விசார் ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்கள் தகைமைக்கு ஏற்ப நிரப்பப்பட்டு தத்தமது கடமைகளைத் தாமே செய்ய வழிப்படுத்த வேண்டும். ஆசிரியரின் வாண்மை விருத்திக்கு எவரும் தடையாக இருத்தல் கூடாது. புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு சேவை முன்பயிற்சி உரிய காலப்பகுதியில் முழுமையாக வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படாது ஆசிரியர்கள் பலர் உள்ளனர்.

ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் சுதந்திரமாக தமது நிறைவான சேவையை வழங்க எவரும் தடையாக இருத்தலாகாது. பிரதான பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் இரண்டு பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்டு அதன் மூலமாக இரண்டு பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியும் பாதிக்கப்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

வேறு எந்த மாகாணத்திலும் இல்லாது வடமாகாணத்தில் இடம்பெறும் 2 வருட இடமாற்றம் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். ஆசிரியர்களுக்கான மேலதிக மொழிக் கொடுப்பனவு ஏனைய மாகாணங்களைப் போன்று வடக்குக்கும் வழங்கப்படல் வேண்டும்.

5 ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் புதிதாக ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளில் தற்காலிக கொட்டகைகளில் வாடும் சிறுவர்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படல் வேண்டும். வடமாகாண கல்வியை வளர்க்கக்கூடிய திட்டங்களை வடமாகாண சபை உருவாக்க வேண்டும்.

முல்லைத்தீவு வலய அதிபர் இடமாற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும். யாழ்.வலயத்தில் பெண்கள் பாடசாலை ஒன்றில் அதிபர் நேர்முகத் தேர்வு கடந்த ஜூனில் நடைபெற்றது. அதில் குறைந்த புள்ளி பெற்றவரே அரசியல் செல்வாக்கின் மூலமாக அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். எனவே தகுதி அடிப்படையில் நியமனம் வழங்கப்பட வேண்டும். தேசிய கல்வி நிறுவனத்தால் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற கல்விமாணிப் பட்டம் இன்றுவரை அங்கீகரிக்கப்படவில்லை. அது அங்கீகரிக்கப்படல் வேண்டும். வசதியான பாடசாலையிலிருந்து கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு பதிலீட்டு இடமாற்றம் செய்யப்படல் வேண்டும்- என்று பிரேரணை முன்வைக்கப்பட்டது. (வ-4)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சபை உறுப்பினர்

### வயிரன் தியாகராசா

கடந்த 16.08.2013 அன்று அகால மரணமான தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

தவிசாளர், செயலாளர்,
உறுப்பினர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## ஜெகநாதன் லோகினி



காளி கோவிலடி மல்லாகத்தைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகநாதன் லோகினி நேற்று (29.09.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேஸ் மற்றும் அன்ன லட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் ஜெகநாதனின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற நடேசு மற்றும் இராசேஸ்வரி தம்பதியரின் மருமக ளும்,வேணுஜன்,கஜனா, ஆகியோரின் பாசமிகு தாயரும், மோகன தாஸ்,ரஜனி பிறேமதாஸ் ஆகியோரின் அன்புச் சசோதரியும் கௌரி, பாலச்சந்திரன், சுந்தர வதனி,ரகுநாதன்,புஸ்பதேவி,கிரிஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோயிலடி மல்லாகம்
0776000652

தகவல்:
குடும்பத்தினர்

## அன்ரனி பேர்னாந்து பிரான்சிஸ் சேவியர்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)



கரம்பன் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாளை நிரந்தர வசிப்பிட மாகவும் திருத்தணி, குளப்பிட்டி றோட், கொக்குவில் மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி பெர்னாந்து பிரான்சிஸ் சேவியர் நேற்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்ரனி பெர்னாந்து-எலிசபெத் தம்பதியரின் அன்பு மகனும், இந்திராவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமக னும், வாணிசிறி, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தை யும், தயாபரனின் அன்பு மாமனும் பிரவீன், பிறேமிகா, பிரத்திகா, பிரி யங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(30.09.2013) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(32163)
(7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
FX பிரதீபன் (மகன்)
021 321 0221, 075 945 0838

திருத்தணி
குளப்பிட்டி றோட்,
கொக்குவில் மேற்கு.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## ஆறுமுகம் கந்தையா (ஆசாரியார்)

முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தையா (ஆசாரியார்) நேற்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தப்பு- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம், சிவசிதம்பரம், பராசக்தி, ஜெயக்கொடி, மகாலிங்கம், சரஸ்வதி, கோவிந்தராசா, சிவவடிவேல் ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி புஸ்பவதி, பாலசிங்கம், மாலோகமலர், யோகராணி, சறோஜாதேவி, உதயசிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2013) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

(32152-23-14)

தகவல்:
குடும்பத்தினர்.

# மீனவர் மீதான தாக்குதல் கண்டனத்துக்குரியது

### சரத்குமார் தெரிவிப்பு



சென்னை, செப்.30

இலங்கைக் கடற் படையினர் தமிழக மீனவர்களை கைது செய்து சித்ரவதைக்கு உட்படுத்தி விடுவித்து விட்டு அவர்களின் படகுகளை மட்டும் அவர்களே கைப்பற்றிக்கொள்ளும் ஒரு முடிவை எடுத் திருப்பது மிகப் பெரிய கண்டனத் துக்குரியது என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் ஆர்.சரத்குமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வாறான தீர்ப்புகளை நீதிமன்றங்கள் வழங்கும் சூழ்நிலையை உருவாக்கி தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தையே அழித்து விடும் சதித்திட் டத்தை இலங்கை தீட்டியுள்ளது.

படகுகளைக் கைப்பற்றிக் கொண்டால் மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்க வரமாட்டார்கள் என்ற கொடூர புத்தியுடன் இலங்கை செயற்படுகிறது.

தமிழக மீனவர்கள் பல நூறு பேர் கொல்லப்பட்ட நிலையிலும் நமது மீனவர்களின் உடைமைகள் சூறையாடப் பட்ட போதிலும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் மத்திய அரசின் நிலையை உணர்ந்துதான் இலங்கை மேலும் தவறுகளை செய்து கொண்டிருக்கிறது.

தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை இலங்கையின் தேசிய சொத்து என அறிவித்திருப்பது மிகப்பெரிய மோசடியாகும். இதை ஒரு போதும் நாம் அனுமதிக்கக் கூடாது. மத்திய அரசு இதுபோன்ற நிலையை உருவாக்க விடாமல் தடுத்த நிறுத்த வேண்டும்- என்றுள்ளது. (வ)

பொதுநலவாய மாநாட்டில்
பிரதமர் பங்கேற்பதை எதிர்த்து

# உண்ணாவிரதம் இருக்க அனுமதி கேட்ட வழக்கின் தீர்ப்பு இன்று

சென்னை, செப்.30

பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் பங்கேற்க கூடாது என்று மெரினா கடற்கரையில் கால வரையறையற்ற உண்ணா விரதப் போராட்டம் நடத்த அனுமதி கேட்டு தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னைஉயர்நதிமன்றத்தில், தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தியாகு தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:-

பாகிஸ்தான், பிஜி ஆகிய நாடுகளில் இராணுவ ஆட்சி நடை பெற்றதால், அந்த நாடுகளை பொது நலவாய மாநாட்டில் பங்கேற்க முன்பு அனுமதிக்க வில்லை. பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தாமல் வேறு நாட்டில் இந்த மாநாட்டை நடத்தவேண்டும்.

ஒருவேளை இலங்கையில் மாநாடு நடைபெற்றால், அதில் இந்தியப் பிரதமர் மற்றும் பிரதி நிதிகள் கலந்துகொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்தி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள திருவள்ளுவர் சிலை முன்பு காலவரையற்ற உண்ணாவிரதம் போராட்டம் நடத்த முடிவு செய்தேன். இந்த போராட்டத்துக்கு அனுமதி கேட்டு பொலிஸ் ஆணையாளரிடம் மனு கொடுத்தேன். ஆனால் எனக்கு அனுமதி வழங்க பொலிஸ் ஆணையாளர் மறுத்து விட்டார்.

காலவரையறையற்ற உண்ணா விரதம் இருப்பது சட்டவிரோதம் என்றும் இந்த போராட்டத்தால், சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று பொலிஸ் ஆணையாளர் கூறியுள்ளார்.

எனவே காலவரையறையற்ற உண்ணா விரதம் போராட்டம் நடத்த எனக்கு அனுமதி வழங்க பொலிஸ் ஆணையாளர் உத்தரவிடவேண்டும். அனுமதி மறுத்த ஆணையாளர் உத்தரவை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு இருந்தது. (வ)

# காணவில்லை



கிளுவானை லேன்,
கோப்பாய் மத்தி,
கோப்பாயைச் சேர்ந்த

### கார்த்திகேசு நிருபன்

(வயது-38)- (ஆசிரியர் அல் ஹாமியா மகாவித்தியாலயம், நேரியகுளம்-வவுனியா) என்பவர் கடந்த 19.09.2013 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கூமாங்குளம், வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போது காணாமல் போயுள்ளார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 0212230159 - 0776252527

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் நினைவுதின அழைப்பும்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19.03.1946 | 11.10.2012 |

### அமரர் பொன்னம்பலம் கந்தையா (சின்னையா)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் கிளிநொச்சியில் வசித்து வந்தவருமாகிய பொன்னம்பலம் கந்தையா தென்னிந்தியாவில் அமரராகிய ஒருவருடப் பூர்த்தியை முன்னிட்டு இன்று 30.09.2013 திங்கட்கிழமை இலக்கம் 127, D-10 உருத்திரபுரத்தில் நினைவு அஞ்சலி நடைபெறும். அன்னாரது இழப்பை முன்னிட்டு தொலைபேசி மூலமும் நேரிலும் ஆறுதல் கூறியவர்களையும் பல வழிகளில் உதவி செய்தவர்களையும் அன்னாரின் அஞ்சலியிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[32155-23-14]

குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை எலிசபேத் (வெள்ளையம்மா)



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை எலிசபேத் நேற்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஞானப்பிரகாசம் (வெள்ளை), மரியபுஸ்பராணி (லைசா- கனடா), காலஞ்சென்ற ஜஸ்ரின் மற்றும் டெய்சி வனஜா, ஆன் பத்மினி (இத்தாலி), ஜேன் லலிதா (ஜேர்மனி), யூலியற் நிர்மலா (யூலி- இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற மரியயூலியற், முடியப்பு பிரான்சிஸ் (கனடா), ஆரோக்கியராணி, தேவதாஸ் (லண்டன்), அன்ரனி மரியதாஸ் (இத்தாலி), ஜோசப் பீற்றர் (ஜேர்மனி), அழகேஸ்வரன் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியும் பெலிசிற்றம்மா, காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, பெனடிற் துரைசிங்கம் மற்றும் சிசிலியா ஞானமலர் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.10.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு 27/23A, ஈச்சமோட்டையிலிருந்து கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/23A, 1ஆம் ஒழுங்கை,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

(32158-23)

தகவல்:
பிள்ளைகள். 0779865193

## துன்னாலைப் பகுதி இளைஞர்களின் தறிகெட்ட போக்கால் விசனம்


### கண்டும் காணாமல் பெற்றோர்

துன்னாலை, செப்.30
வீரமறவர்கள் நடமாடி திரிந்து மடிந்த மண்ணான வடமராட்சியில் குறிப்பிட்ட சில பகுதிகளில் கலாசார சீரழிவுகள் காணப்படுவது குறித்து அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
குறிப்பாக வடமராட்சி, துன்னாலைப் பகுதி இளைஞர்களின் நடவடிக்கைகள் குறித்து பலரும் எரிச்சல் அடைந்துள்ளனர். இளைஞர்கள் சிலரின் அட்டகாசம் எல்லை மீறிக் கொண்டிருப்பதாகவும் இது குறித்து அவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் கண்டும் காணாமல் நடந்து கொண்டுள்ளனர் என்றும் ஊர்ப் பெரியவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.
துன்னாலையில், சாவகச்சேரி வீதியிலுள்ள மித்திரன் அம்மன் கோயில் சந்தியில் இருந்து தாமரைக்குளம் வரையான பகுதி வரை இத்தகைய இளைஞர்களின் மோசமான செயற்பாடுகள் அதிகரித்து வருவது குறித்துப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.
தெருவோரங்களிலும் ஒழுங்கைகளின் முகப்புப் பகுதிகளிலும் இவர்கள் கூடி நிற்பதும் பெண்களைக் கண்டதும் மோசமான - அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதுடன் சேட்டைகளில் ஈடுபடுவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பெண்கள் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர். இத்தகைய இளைஞர்களில் சிலர் பாடசாலை மாணவர்களு மாக உள்ளனர். மேலும் வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த இளைஞர்களும் இந்தப் பகுதியிலுள்ள இளைஞர்களுடன் சேர்ந்து இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் தெரிய வருகின்றது.

> "வடமராட்சி, துன்னாலைப் பகுதி இளைஞர்களின் நடவடிக்கைகள் குறித்து பலரும் எரிச்சல் அடைந்துள்ளனர்.

மேலும் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று வரும் மாணவிகள் மற்றும் அந்தப் பகுதியில் செல்லும் இளம் பெண்களைக் குறி வைத்து இவர்களின் அநாகரிகமான செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக குறிப்பிட்ட இளைஞர்களின் பெற்றோரிடம் பாதிக்கப்படுபவர்கள் முறையிட்ட போதிலும் அவர்கள் அலட்சியப்போக்குடன் செயற்படுவதுடன் தமது பிள்ளைகளை நல்வழிப் படுத்துவதற்கான எந்தவிதமான நடவடிக்கையையும் எடுப்பதில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.
இளைஞர்களின் இத்தகைய செயல்களால் இங்குள்ள குடும்பங்களுக்கிடையில் வீணான மோதல்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகி வருவதாகவும் தெரிய வருகின்றது.
எனவே, பொலிஸார் இதில் உடனடியாகத் தலையிட்டு இந்த இளைஞர்களின் அட்டகாசத்தை அடக்குவதோடு பாடசாலை மாணவிகளும் இளம் பெண்களும் அச்சமின்றி நடமாடுவதற்கான நல்லதொரு சூழலை ஏற்படுத்துமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-7)

## கைதடியில் ஓட்டோ தரிப்பிடம் இடமாற்றம்



கைதடியிலுள்ள ஓட்டோக்கள் தரிப்பிடமாக ஏ-9 வீதியின் கிழக்குப் பக்கம் தற்போது உள்ளதாக ஓட்டோ உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாக தனியார் காணி ஒன்றில் குறித்த தரிப்பிடம் இருந்ததாகவும் அந்தக் காணி வேறு தேவைக்குப் பயன்படுத்தப்படவுள்ளதால் தற்போது ஏ-9 வீதியில் தரிப்பிடம் உள்ளது. இங்கு அமைக்கப்பட்டதனால் பயனாளிகள் எதுவித சிரமமுமின்றி தம்மிடம் வருவதாகவும் ஓட்டோக்களின் உரிமையாளர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (வ-288)

## கைதடியில் முதியோர் தின நிகழ்வு

கைதடி, செப்.30
சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சமூகசேவைத் திணைக்களமும் கைதடி அரச முதியோர் இல்லமும் இணைந்து நடத்தும் முதியோர் தின நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.
வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நாளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு. ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர். (வ-288)

### சட்டவிரோத உபகரணங்கள் மூலம்

# மீன்பிடிப்போரை கண்காணிக்கும் நீரியல் வளத் திணைக்களம்

யாழ்ப்பாணம், செப்.30
குடாக்கடலில் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுதல் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.
தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால் மீன்பிடி வளங்கள் பாதிக்கப்படுவதுடன் கடல் வளங்களும் அழிவடைகின்றன. இதனால் சாதாரண மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.
சாதாரண மீனவர்களது வாழ்வாதாரம் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின் றது. இதற்கான நடவடிக்கையாக மீன்பிடி உபகரணங்கள் கையாளப்படுவது குறித்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.
குடாக்கடலில் நாளாந்தம் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் அரசால் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது இனங்காணப்பட்டால் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (வ-14-17)



தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால் மீன் பிடி வளங்கள் பாதிக்கப்படுவதுடன் கடல் வளங்களும் அழிவடைகின்றன.

## தனியார் பஸ் சங்கத்துடன் இணைந்து சேவையாற்றுக

### பருத்தித்துறை டிப்போவுக்கு வேண்டுகோள்

பருத்தித்துறை, செப்.30
இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலையினர் வடமராட்சி பருத்தித்துறை தனியார் பஸ் சங்கத்துடன் இணைந்து சேவையாற்ற வேண்டும் என்று தனியார் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
பருத்தித்துறை தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் அன்ரன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-
"எமது தனியார் சங்கத்தின் சேவையானது காலை முதல் மாலை வரை 12 நிமிடங்களுக்கு ஒரு சேவை என்ற முறையில் நடத்தி வருகின்றோம். இதேபோல் இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் அரை மணித்தியாலத்துக்கு ஒருமுறை தமது சேவையை நடத்துகின்றனர். இதனால் சில வேளைகளில் இரு சேவைகளும் சொற்ப நேரத்தில் நடைபெறுவதால் பயணிகளை ஏற்றுவதில் போட்டித்தன்மை ஏற்படுகின் றது. இந்தப் போட்டித் தன்மையைக் குறைப்பதற்கு பருத்தித்துறை இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் தமது சேவையை ஒவ்வொரு 25 நிமிடங்களுக்கும் நடத்தும் போது தாமும் சேவையை நிறைவாக நடத்த முடியும்"- என்றார். (வ-422)




### வாசிப்பு மாதத்தையொட்டி

# நூலகங்களில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், செப்.30
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சகல பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பொது நூலகங்களிலும் நூலக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் படவுள்ளன.
நவீன சாதனங்களின் பாவனைகள் அதிகரித்த பின்னர் நூல்களைப் பயன்படுத்துவோர் அருகிவரும் சூழலில் வாசிப்பின் முக்கியத்துவம், நூல்களின் பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
சகல பிரதேச சபைகளுக்கும் உட்பட பொதுநூலகங்கள் மற்றும் உபநூலகங்களிலும் வாசிப்பு மாத நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. குறிப்பாக முன்பள்ளி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், நூலக வாசகர்கள் இடையே போட்டிகளை நடத்தி நூலகப் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிப்படுத்தப்பட்டு வருகின்றன.
பொது நூலகர்கள் ஊடாக நூலகம் சார்ந்த பிரதேசங்களில் உள்ள முன்பள்ளிகள், பாடசாலைகள் போன்றவற்றுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. (வ-14)

> நூல்களின் பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.



## அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்கள் வசதிக்காக பஸ்தரிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம், செப்.30
அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதி மக்களின் வசதி கருதி யாழ்ப்பாணம்- ஊர்காவற்றுறை பிரதான பாதையில் இரண்டு பஸ் தரிப்பு இடங்களை வேலணை பிரதேச சபை அமைத்து வருகின்றது. இந்த வழித் தடத்தில் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும் மக்கள் வெயில், மழைகளில் தரிப்பிடமின்றிச் சிரமப்படுவதால் ரூபா 100 கோடிக்கான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தத் தரிப்பிடங்கள் அமைக்கப்படுகின்றன.
மணிமாறன் வீதி புனரமைப்பு உட்படப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராஜா தெரிவித்தார். (வ-7)

## உர விநியோகம்

தென்மராட்சி, செப்.30
தென்மராட்சி பிரதேசத்தில் கால போக நெற்செய்கை மேற் கொள்வதற்கு மானிய உரத் துக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அடிக்கட்டு உரவகைகள் அந் தந்த கமநல சேவைகள் நிலையத்தின் ஊடாக வழங்கப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இது பெரும் கௌரவம்



நியூயோர்க், செப்.30
தம்மைச் சந்தித்துச் சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை வாசல்வரை வந்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வழியனுப்பி வைத்தமை சிறப்புக் கௌரவம் என்று இந்திய ஊடகங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

வெள்ளை மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுக்களை முடித்து விட்டு பிரதமர் மன்மோகன் சிங் கிளம்பிய போது அவரை கார் நிறுத்துமிடம் வரை வந்து ஒபாமா வழியனுப்பினார்.

இது அரிதான நிகழ்வாகவும், மன்மோகன் சிங்குக்கு ஒபாமா அளித்த சிறப்பு கௌரவம் என்றும் இந்திய ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. அண்மைக் காலங்களில் எந்த அமெரிக்க ஜனாதிபதியும் வெளிநாட்டுத் தலைவர் ஒருவரை இவ்வாறு மிகுந்த மரியாதையுடன் வழியனுப்பியதில்லை என்றும் அவை மேலும் குறிப்பிடுகின்றன.

மன்மோகன் சிங் ஒரு பெரிய தலைவர் மற்றும் ராஜதந்திரி என்பது மட்டுமின்றி ஒரு பொருளாதார மேதை என்ற முறையிலும் அவரிடம் ஒபாமா மிகுந்த மரியாதை கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது. (ற)

# மீண்டும் ஜெயலலிதா கடிதம்

## தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமருக்கு வலியுறுத்து

சென்னை, செப்.30
இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.

இந்த விடயம் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவர் எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும். மீனவர்களின் படகுகளை இலங்கை அரசு விடுவிக்காதது அதிருப்தியளிக்கிறது. தமிழக மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும் திரும்பப் பெற ஆவன செய்ய வேண்டும். மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வது தொடர்கதையாகி வருகிறது. இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களைக் கைது செய்வதை தடுக்காவிட்டால் இந்தப் பிரச்சினைக்குத்தீர்வுஏற்படாது"-என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ற)

கடிதம் எழுதுவதால் காரியம் முடிந்துவிடுமா? கடந்த 27 மாதங்களில் 27 முறை மீனவர் பிரச்சினைக் குறித்து இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ள தமிழக முதலமைச்சர் இனியாவது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்குவாரா? அல்லது 28 ஆவது முறையும் கடிதம் எழுதிவிட்டு அமைதியாகி விடுவாரா?

*- பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கடந்த வாரம் விடுத்திருந்த காட்டமான அறிக்கையில்.*



மும்பையில் கடந்த வெள்ளிக்கிழமை அடுக்குமாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது. மும்பை மாநகராட்சிக்குச் சொந்தமான இந்தக் கட்டத்தில் சுமார் 21 குடும்பங்கள் வசித்து வந்தன என்று கூறப்படுகின்றது. மீட்புப் பணிகள் இதுவரை நிறைவுறாத நிலையில் காயங்களுடன் 42 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்று மீட்புக் குழுவினர் கூறுகின்றனர்.

## இலங்கை வீரர்களை விளையாட விடோம்

### மாணவர்கள் போராட்டம்

சென்னை, செப்.30
தற்போது நடைபெற்றுவரும் சம்பியன் லீக் '20/20' கிரிக்கெட் தொடரில் விளையாடும் இலங்கை வீரர்களை தொடரில் இருந்து நிறுத்துமாறு கோரி இந்திய கட்டுப்பாட்டுச் சபைக் (பி.சி.சி.ஐ.) கூட்டம் நடைபெற்ற விடுதியை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியுள்ளனர் மாணவர்கள்.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த மாணவர்கள், "பி.சி.சி.ஐ. நிறுவனம் இலங்கை ஆட்டக்காரர்களை இந்தியாவில் விளையாட அனுமதித்தால்தமிழகத்தில்எந்தபி.சி.சி.ஐ. நடத்தும் எந்த கிரிக்கெட் போட்டியையும் நடத்த அனுமதியோம். விரட்டி அடிப்போம்" என்று தெரிவித்துள்ளனர்.

பார்க் செரட்டன் விடுதியில் பி.சி.சி.ஐயின் கூட்டம் நடைபெற்றது. அதன் முன் திரண்டிருந்த மாணவர்கள் பி.சி.சி.ஐ. ஒழிக, சீனிவாசன் ஒழிக என்று கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## பல அதிகார மையங்கள்

### குற்றஞ்சாட்டுகின்றார் மோடி

புதுடில்லி, செப்.30
இந்திய மத்திய அரசில் பல அதிகார மையங்கள் செயற்பட்டு வருகின்றன என்று பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி குற்றஞ்சாட்டியுள்ளார்.

"நாட்டின் வளர்ச்சிக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பெரும் தடையாக இருக்கின்றது.

வறுமையை பற்றி அமெரிக்கா சென்று பேசுகின் றார் பிரதமர் மன்மோகன் சிங். அது ஏன்?" என்று மோடி. மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## இலங்கை அரசுக்கு விஜயகாந்த் கண்டனம்

சென்னை, செப்.30
சிங்கள அரசு கடந்த 30 ஆண்டுகளாக தமிழக மீனவர்களைத் தாக்கி வருகின்றது. அதற்கு புலிகளை முதலில் காரணம் கூறியது. தற்போது புலிகள் இயக்கத்தை அழித்து விட்டோம் என்று மார்தட்டிக்கொள்ளும் இலங்கை அரசு தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களை நிறுத்திக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் தமிழர்கள் என்பது மட்டுமே - என்று கூறியுள்ளார் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"தமிழக கடலோர மீனவர்களின் தற்போதைய நிலை, அவர்களின் வாழ்வாதாரத்தையே கேள்விக்குறியாக்கும் நிலையில் உள்ளது.

இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டிணம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களில் மட்டும் சுமார் 34 விசைப்படகுகளும், சுமார் 180 மீனவர்களும் இலங்கைக் கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டு, இலங்கைச் சிறையில் குற்றவாளிகளாக அடைக்கப்பட்டுள்ளனர். இது இலங்கை அரசு தமிழக மீனவர்கள் மீது எடுத்துள்ள மோசமான நடவடிக்கையாகும்.

ஆனால் இதையும் மீறி இலங்கை நீதிமன்றம் தமிழக மீனவர்களின் 5 விசைப்படகுகளை இலங்கையின் தேசிய சொத்தாக கருதலாம் என்று அறிவித்துள்ளது.

இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. இச்செயல் இலங்கை அரசினுடைய சர்வாதிகார போக்கிற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழக மீனவர்களின் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்திய மத்திய அரசு காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் எடுப்பதாக இல்லை. உடனடியாக இந்திய மத்திய அரசு இதில் தலையிட்டு, தமிழக மீனவர்களின் வாழ்வாதரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம்" என்றுள்ளது. (ற)

## விசாரணையை வரவேற்கின்றேன்

### தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறுகின்றார்

சென்னை, செப்.30
செம்மொழி மாநாட்டுக்கு செய்யப்பட்ட செலவுகள் பற்றி விசாரணை நடத்துவதை வரவேற்கிறேன். வழக்குகள் குறித்து யாரும் அஞ்சப்போவதில்லை - என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

செம்மொழி மாநாட்டுக்காக செய்யப்பட்ட செலவில் முறைகேடு நடந்திருப்பதாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பாக உங்களுக்கு அழைப்பாணை அனுப்பப்படவுள்ளது என்று கூறப்படுகின்றதே என்று அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"வழக்குக்கு யாரும் அஞ்சப்போவதில்லை. செம்மொழி மாநாட்டிற்காக செலவு செய்யப்பட்ட தொகை பற்றி விசாரணை நடத்துவதை நான் வரவேற்கிறேன். இதுபோல அரசு நடத்தும் மாநாட்டிற்கான செலவை முதல்வரோ, அமைச்சர்களோ, உறுப்பினர்களோ கையில் வைத்துக் கொண்டு செலவு செய்வதில்லை. அதிகாரிகள் தான் செலவு செய்வார்கள். மாநாடு நடைபெற்ற நேரத்தில் நிதித்துறை செயலாளராக யார் இருந்தாரோ அவர்தான் தற்போதும் செயலாளராக இருக்கிறார். மாநாடு நடைபெற்றபோது கோவை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்து செயல்பட்டவர் தற்போது நிதித்துறையில்தான் பணியாற்றுகிறார்.

இந்த மாநாட்டிற்காக செலவு செய்யப்பட்ட தொகை குறித்து அப்போது மாநாட்டை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டவர்களுக்கு எந்தத் தொடர்பாவது இருந்ததா என்பதை இந்த மூத்த அதிகாரிகளிடத்திலும் அவர்கள் கையாண்ட கோப்புகளை பார்த்தும் தெரிந்து கொள்ளலாம்.

எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் நீதிமன்றத்தின் நேரத்தையும், பொலிஸாரின் பணி நேரத்தையும் வீணடிக்கின்ற வகையில் இப்படி வழக்குகளைத் தொடுப்பவர்கள் மீது, இந்த வழக்கில் எதுவும் உண்மையில்லை என்று தெரியுமேயானால், உரிய நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் முன்வருவது நல்லது." என்று தெரிவித்தார். (ற)

## தீவிரவாதிகள் சூடு

### ஸ்ரீநகரில் பதற்றம்

ஸ்ரீநகர், செப்.30
ஜம்மு-காஷ்மீரின் ஸ்ரீநகர் அருகே இராணுவ வாகனங்கள் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். அதையடுத்து அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்து இராணுவத்தினர் தேடுதல் நடத்தி வருகின்றனர். அதனால் ஸ்ரீநகர் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.



கடந்த வியாழக்கிழமை இராணுவ முகாம் மற்றும் பொலிஸ் நிலையம் என்பற்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது அந்தப் பகுதி எங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்தத் துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஸ்ரீநகரை அடுத்த சனத்நகர்-ஹைதர்போரா வீதி வழியாகப் பாதுகாப்புப் படையின் வாகனங்கள் சென்று கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அந்தப்பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் குறித்த பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலுக்கு ஷோகடா பிரிகேட் என்ற தீவிரவாத குழு பொறுப்பேற்றுள்ளது. (ற)



ஈரான் ஜனாதிபதி அப்துல் ரௌஹானி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் தொலைபேசியில் சுமார் 30 நிமிடங்கள் கலந்துரையாடியுள்ளார். கடந்த 30 ஆண்டுகளில் இருநாட்டுத் தலைவர்களும் இவ்வாறு நேரடியாகப் பேசுவது இதுவே முதல்முறை. அதையடுத்து நியூயோர்க்கில் இருந்து நாடு திரும்பிய ரௌஹானிக்கு, அவரின் இராஜதந்திர நகர்வுகளைப் பாராட்டி அமோக வரவேற்பு வழங்கப்பட்டது. நாடு திரும்பிய அவரை, விமான நிலையத்தில் நாட்டின் அதியுயர் மதத் தலைவர் அயோத்துல்லா அலி கமனேயின் பிரதிநிதி வரவேற்றார். இது அவரது நடவடிக்கைகளுக்கு, நாட்டின் அதியுயர் தலைவரின் ஆதரவு உள்ளது என்பதையே காட்டுகிறது என்று நோக்கர்கள் கூறுகிறார்கள்.

# அமைதியடையா நிலம்

## பாகிஸ்தானில் தொடரும் அதிர்வுகள்

இஸ்லாமாபாத், செப்.30

பாகிஸ்தானில் சிந்து மற்றும் பலுசிஸ்தான் மாகாணங்களில் மீண்டும் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. ரிச்டர் அளவுகோலில் 7.2 அலகுகளாகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் கராச்சி, குவெட்டா, நசீராபாத், உள்ளிட்ட நகரங்களில், இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

கடந்தவாரம் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். தொடர்ச்சியாக ஏற்படும் அதிர்வுகளால் அச்சமடைந்துள்ள பொதுமக்கள் வெளியான இடங்களில் தங்கியுள்ளனர். (ற)

# 10 பேர் சிதறிச் சாவு

## ஈராக்கில் தொடரும் குண்டு வெடிப்புகள்

பாக்தாத், செப்.30

ஈராக் தலைநகர் பாக்தாத் மற்றும் அதனருகே உள்ள பகுதிகளில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 10 பேர் உயிரிழந்தனர்.

தோரா பகுதியிலுள்ள சன்னி பிரிவினருக்குச் சொந்தமான அல்-தவ்ஹீத் பள்ளி வாசலைக் குறிவைத்து நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் 8 பேர் உடல் சிதறி உயிரிழந்ததுடன் 12 பேர் காயமடைந்துள்ளனர். மோசூல் நகரத்தில் வெடிகுண்டு நிரப்பப்பட்ட வாகனத்தை சோதனைச் சாவடியில் மோதி தற்கொலைப் படைத் தீவிரவாதி நடத்திய தாக்குதலில் 2 இராணுவத்தினர் உயிரிழந்ததுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர். பாக்தாதுக்கு வடக்கே உள்ள மற்றொரு நகரமான ஹவிஜாவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் ஒருவர் உயிரிழந்துள்ளார். (ற)

ஏப்ரலில் இருந்து இதுவரை நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களில் 4,500 பேர் உயிரிழந்துள்ளனர்.

### உலக அழகியாக மேகன் யங் தெரிவு




இந்தோனேஷியாவில் நடைபெற்ற உலக அழகிப் போட்டியில் பிலிப்பைன்ஸ் அழகி மேகன் யங் பட்டம் வென்றார். இந்தப் போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 126 அழகிகள் பங்கேற்றனர். இறுதிச்சுற்றின் முடிவில் பிலிப்பைன்ஸ் அழகி மேகன் யங் உலக அழகியாகத் தெரிவானார். பிரான்ஸ் அழகி மரின் லோர்பெலின் 2ஆவது இடத்தையும், கானா நாட்டைச் சேர்ந்த நா ஒகைலி மூன்றாவது இடத்தையும் பிடித்தனர். கடந்தாண்டு உலக அழகிப் பட்டம் வென்ற சீனாவின் வென்ஷியா புதிய உலக அழகிக்கு கீரிடம் அணிவித்தார்.

# சிரியாவுக்கு எதிராக ஐ.நாவில் தீர்மானம்

டமாஸ்கஸ், செப்.30

சிரியா வசமுள்ள இரசான ஆயுதங்களைச் சர்வதேச கண்காணிப்பில் அழிக்க வேண்டும் என்று ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிரியாவில் அரசுக்கு எதிராக மக்களில் ஒரு பகுதியினர் போராடி வருகின்றனர். அவர்கள் மீது சிரிய அரசு இரசாயன ஆயுதத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதையடுத்து அமெரிக்கா அந்த நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது.

ஆனால் சிரியாவுக்கு ஆதரவாக ரஷ்யா களம் இறங்கியது. சிரியா மீதான எந்த தாக்குதலையும் எதிர்ப்போம் என்று அந்நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் பகிரங்கமாக அறிவித்தார். அதன்பின்னர் சிரியாவில் இருக்கும் இரசாயன ஆயுதங்களை, உலக நாடுகளின் முன்னிலையில் அழிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. ரஷ்யா, அமெரிக்கா வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நடத்திய பேச்சுக்களில் இந்த முடிவு எட்டப்பட்டது.

அந்த இணக்கப்பாட்டுக்கு வலுச் சேர்க்கும் வகையில் தற்போது ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன்,

"நீண்ட நாள்களுக்கு பின்னர் சிரியா தொடர்பான முதல் நம்பிக்கையான செய்தி இது. அரபு நாடுகளில் ஒன்றான சிரியாவில் மீண்டும் அமைதியை கொண்டு வருவது தொடர்பான மாநாடு நவம்பர் மாத மத்தியில் நடைபெறும் என்று நம்புகிறேன்" என்று தெரிவித்தார். (ற)

### போதை தந்த உற்சாகம்

# தண்டவாளத்தில் கார் ஓட்டியவர் பொலிஸாரின் கவனிப்பில்

போச்சும், செப்.30

குடிபோதை தந்த உற்சாகத்தில் தண்டவாளத்தில் காரோட்டிச் சென்றவர் இப்போது பொலிஸாரின் கவனிப்புடன் கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றார். இந்தச் சம்பவம் ஜேர்மனியின் போச்சும் நகரில் நடந்துள்ளது.

போச்சும்நகரைச்சேர்ந்தவர் 27 வயதுடைய மார்ட்டின் ஹூபர். அவருக்கு மது மீது அலாதி பிரியம். தினமும் குடித்துவிட்டு ஏதாவது சேட்டை பண்ணி பொலிஸாருக்குத் தொல்லை கொடுப்பதுதான் அவரது பொழுதுபோக்கு.

வழக்கம் போன்று நேற்றுமுன்தினம் மாலையும் தனது அன்றாட வேலைகளில் ஒன்றான 'குடி'யை ஆரம்பித்தார் ஹூபர். நேரமோ போய்க்கொண்டிருந்தது. ஹூபருக்கோ நன்றாகப் போதையேறிவிட்டது. சரி இனி வீட்டுக்குச் செல்லுவோம் என்று புறப்பட்டார் ஹூபர். அதன் பின்னர்தான் ஆரம்பித்தது பிரச்சினை.

நிறைந்த போதையில் இருந்த ஹூபர் தனது காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். அவரின் கண்களுக்கு எல்லா வீதிகளும் தனது வீட்டுக்குப் போகும் வீதி போன்று இருந்ததோ என்னவோ. வீட்டுக்குச் செல்லும் பாதை என்று காரைத் திருப்பினார் ஒரு வீதிக்குள். அது சுரங்க ரயில் பாதை. ஹூபர் அதைப்பற்றிக் கவலைப் படாது தனது வீட்டுக்குச் செல்வதிலேயே மும்முரமாக இருந்தார்.

கார் சுரங்க ரயில் பாதைக்குள் இறங்கியவுடன் எச்சரிக்கை மணி ஒலிக்கத் தொடங்கியது. அதையடுத்து ரயில் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு. ஹூபரைத் துரத்திப் பிடித்தனர் பொலிஸார். அதனால் பல மணி நேரம் ரயில் சேவைகள் தாமதமாகின. தற்போது பொலிஸாரின் 'நல்ல கவனிப்பில் இருக்கின்றாராம்' ஹூபர். (ற)

# 92 குழந்தைகள் மீட்பு

## சீனப் பொலிஸார் அதிரடி: 301 கடத்தல்காரர்கள் கைது

பீஜிங், செப்.30

சீனப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் குழந்தைகளைக் கடத்தி விற்கும் கும்பலிடம் இருந்து 92 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகளைக் கடத்தி விற்கும் செயற்பாடு சீனாவில் அதிகரித்து வருவதை அடுத்து, பொலிஸார் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தநிலையில் பொலிஸாரின் அதிரடிசோதனை நடவடிக்கையின் போது 92 குழந்தைகள் மற்றும் இரு பெண்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது. எனினும் இந்த நடவடிக்கை எப்போது, எங்கு நடைபெற்றது என்பதைத் தெரிவிக்கப் பொலிஸார் மறுத்துவிட்டன.

சீனாவில் சீனாவில் ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை என்ற விதிமுறை கடுமையாக நடைமுறைப்படுத்துவதாலேயே குழந்தைகளை விற்கும் செயற்பாடுகள் அதிகரிக்கின்றன என்று அங்குள்ள பொது அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன. (ற)

# பாடியதால் 6 மாதச் சிறை

## டுனீஷிய நீதிமன்றம் தீர்ப்பு

ஹம்மெட், செப்.30

பாடல்கள் மூலம் அரசுக்கு அவமரியாதை செய்தார் என்று கூறி பாடகர் ஒருவருக்கு டுனீஷிய நீதிமன்றம் 6 மாத சிறைத் தண்டனை விதித்துள்ளது.

புகழ்பெற்ற பொப் பாடகரான கிளே பிபி ஜே அவரது சக பாடகருடன் இணைந்து பாடி சில பாடல்களை வெளியிட்டிருந்தார். அதில் அரசை அவமதிப்பதாகவும் சமூக கோட்பாடுகளை மீறும் விதமாகவும் இருவரும் பாடியதாக அரசுத் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதையடுத்தே அவருக்கு 6 மாத சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ற)

# ஆற்றில் கவிழ்ந்தது படகு

## 42 பேர் சாவு: 100க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை

## நைஜீரியாவில் பரிதாபம்

மலில்லி, செப்.30

நைஜீரியாவில் ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 42 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டவர்கள் காணாமற்போயுள்ளனர்.

நைஜர் மாகாணத்திலுள்ள மலில்லி கிராமத்திலிருந்து நைஜர் ஆற்றில் 150 பேர் பயணம் மேற்கொண்டிருந்தனர். புறப்பட்ட சிறிது நேரத்தில் திடீரென படகு இரண்டாக உடைந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

"இந்த விபத்தில் 42 பேர் உயிரிழந்தனர். 100 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது. படகில் பயணிகளுடன் சேர்த்து அதிக பாரம் ஏற்றியதே விபத்துக்குக் காரணம்" என்று நைஜர் மாகாண அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேற்கு ஆபிரிக்காவில் ஓடும் ஆறுகளில் மூன்றாவது நீளமான ஆறு நைஜர். இந்த ஆற்றில் அண்மையில் பெய்த மழையால் நீரின் அளவு அதிகரித்துள்ளது. (ற)

# ஆட்சி பிடிக்கவில்லை: விலகினேன்

## உஸ்பெகிஸ்தான் ஜனாதிபதியின் மகள் அதிரடி



உஸ்பெகிஸ்தான், செப்.30

தந்தையின் ஆட்சிமுறைக் கோட்பாடுகள் எனக்குப் பிடிக்கவில்லை. எனவே அவருடனான உறவுகள் அனைத்தையும் முறித்துக் கொண்டேன் என்று கூறியுள்ளார் உஸ்பெகிஸ்தான் ஜனாதிபதியின் இரண்டாவது மகளான கரி மோவா தில்யாவ்வா.

"ஆட்சிமுறையால் வேலையில்லா பிரச்சினையும், தீவிரவாதமும் அதிகரிக்கின்றது. அது எனக்குப் பிடிக்கவில்லை. அதனாலேயே விலகினேன். ஜனாதிபதியின் மகள் என்று அழைக்கப்படுவதை நான் விரும்பவில்லை" என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

# மீண்டும் மெக்ஸிக்கோவில் மழை


மெக்ஸிகோ, செப்.30

மெக்ஸிக்கோவில் மீண்டும் கன மழை பெய்யத் தொடங்கியுள்ளது. அதனால் மீண்டும் வெள்ள அபாயம் தோன்றியுள்ளது. இரு வாரங்களுக்கு முன்பு ஏற்பட்ட மழை மற்றும் புயலுக்கு 139 பேர் உயிரிழந்துள்ள நிலையில் மீண்டும் கன மழை பெய்யத் தொடங்கியுள்ளது. அதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லத் தொடங்கியுள்ளனர். (ற)

# யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்

## அதிபர் குட்டி ஜெகநாதன் (B.A.Dip.in Ed.Sc.Tr.) SLPS அவர்களின்

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும் – 30.09.2013



### வாழ்த்துச் செய்தி



அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டுவதிலும் ஓர் ஏழைக்கு எழுத்தறிவிக்கும் கல்விப்பணி மேலான புண்ணியச் செயலாகும். இதனாலேயே சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் அளவெட்டிப் பகுதியிலே புகழ்பூத்த கல்விக் கூடங்கள் அமைக்கப் பெற்று நூறாண்டுகளுக்கு மேலாகவும் கல்விச் சேவையாற்றுகின்றன.

ஆசிரியராக, அதிபராக கடமையாற்றி அறுபது வயதில் ஓய்வு பெறும் அதிபர் அவர்கள் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் நலம்பெற்று வாழ, எல்லாம் வல்ல கும்பழாவளைப் பிள்ளையாரின் திருவருள் சித்திக்கப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

**திருவருட் துணையுடன்,**
**சோம.குமாரதாஸக் குருக்கள்**
**பிரதமகுரு, அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் தேவஸ்தானம்.**

### ஆசிச் செய்தி



அறிவுக்கும், திறமைக்கும், ஆளுமைக்கும் விருட்சமாக நின்று பல விழுதுகளை உருவாக்கியவர் குட்டி ஜெகநாதன் அவர்கள் என்று கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அவ்விழுதுகளில் நானும் ஒருவர் என்பதை எண்ணிப் பெருமையடைகிறேன். எனக்கு கல்வியறிவூட்டிய மணிவிழா நாயகனை வாழ்த்தி, மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி பெருமகிழ்வடைகிறேன். குட்டி ஜெகநாதன் அவர்கள் நீடித்த வாழ்வும் நிறைந்த செல்வமும் பெற்று மேன்மேலும் புகழ்பெற எனது வாழ்த்துக்களையும் இறையாசிகளையும் வழங்கி நிற்கின்றேன்.

**வணபிதா.க.ஜேம்ஸ் சிங்கராயர்**
**அதிபர், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.**

### வாழ்த்துச் செய்தி



கு.ஜெகநாதன் அவர்களை இம் மணிவிழா நன்நாளில் வாழ்த்துவதில் பெருமிதமடை கின்றேன்.

கடந்த 20 வருடங்களாக இவரது செயற்பாடுகளை நான் நன்கறிவேன். சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் சிறந்த விஞ்ஞான ஆசிரியராக முதலில் நான் இவரைச் சந்தித்தேன். அன்று இவ் வித்தியாலயத்தின் விஞ்ஞான பாட வளர்ச்சிக்கும் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கும் சிறந்த பங்காற்றினார். இதுவரை கல்வித்துறைக்கு ஆற்றிய பணிகளுக்காக நன்றி கூறுவதுடன், ஓய்வு காலத்தில் குடும்பத்தினருடன் சந்தோஷமாக வாழ இறையருள் கிடைப்பதாகுக.

**ப. விக்னேஸ்வரன்**
**பிரதிச் செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம்.**

### பணிசிறக்க வாழ்த்து



இயற்கை வனப்புமிக்க அளவெட்டிக் கிராமத்தில் சைவசமயப் பண்பாட்டின் கலைக்கூடமாக விளங்கும் யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் அவர்கள் இன்று தனது அறுபதாவது அகவையில் தடம் பதிக்கிறார். இன்றைய நாளில் அவர் செய்த பணிகளை நினைவு கூருவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய நாளில் அவரது பணி சிறக்க வாழ்த்தி இனி வரும் காலங்களிலும் அவர் புகழ் பரவவேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**வ.செல்வராசா**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்.**

### மணிவிழா நாயகனின் பசுமை நிறைந்த நினைவுகள்



30.09.2013 ஆம் திகதியில் ஓய்வு பெறும் கு.ஜெகநாதன் அவர்களுக்கு மணிவிழா கொண்டாடப்படும் செய்தி கேட்டு பேருவகையடைகின்றேன்.

பாடசாலைக் கல்விச் சமூகத்தின் மனதிலே என்றும் நிலைத்து நிற்பாரென உவகையடைகின்றேன்.

நீண்டகால சேவையின் பின் ஓய்வுபெறும் இந்த அதிபருக்கு மணிவிழாக் கொண்டாடும் பாடசாலை சமூகத்தைப் பாராட்டுவதோடு அதிபரும் அவரது குடும்பத்தினரும் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழப் பிரார்த்திக்கின்றேன்.

**வி.இராசையா,**
**(ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்)**
**மாகாண இணைப்பாளர்.**

### வாழ்த்துச் செய்தி



திருவாளர் கு.ஜெகநாதன் அவர்கள் தமது சேவைக் காலத்தில் ஓர் ஆசிரியராக, சேவைக் கால ஆலோசகராக, அதிபராக எனப்பல படி நிலைகளில் கடமை புரிந்தவர். இவர் மேன்மேலும் சிறப்புகளும் நலமும் பெற்று தம் குடும்பத்தவருடன் மகிழ்வுடன் வாழ வாழ்த்துவதுடன், அதற்கு இறை வனும் அருள் புரிய வேண்டுகின்றேன்.

**அ.இரங்கநாதன்**
**தலைவர், அதிபர் சங்கம், தெல்லிப்பழை கல்விக் கோட்டம்.**

### குட்டி ஜெகநாதன்

(B.A Dip. in Ed. Sc.Tr) SLPS

பிறப்பு - 01.10.1953

| | |
|---|---|
| **கல்வி - ஆரம்பக்கல்வி** | - யா/சங்கானை கிழக்கு, விக்கினேஸ்வர வித்தியாசாலை |
| **இடைநிலைக் கல்வி** | - யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி |
| | - யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி |
| **உயர்கல்வி** | - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| | - யா/விக்ரோறியாக் கல்லூரி |
| பட்டப்படிப்பு | - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளிவாரி |
| **பட்டப்பின் கல்வி டிப்ளோமா** | - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |

**சேவை விபரம்**

| | |
|---|---|
| 02.07.1977 - 11.01.1981 | - நுவரெலியா இராகலை தமிழ் ம.வித். |
| 12.01.1981 - 30.06.1982 | - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை |
| 01.07.1982 - 30.04.1985 | - கிளி/கண்டாவளை ம.வித். |
| 01.05.1985 - 30.08.1995 | - யா/சங்கானை சிவப்பிரகாச வித். |
| 01.09.1995 - 06.06.2002 | - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம் |
| 07.06.2002 - 30.09.2013 | - யா/அருணாசலம் வித்தியாலயம் அளவெட்டி |

### பணி நயப்புச் செய்தி



ஆசிரியர், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர், அதிபர் எனப் பல பதவி நிலைகளில் கடந்த 36 வருடங்களாக கல்விப் பணி ஆற்றி அகவை அறுபதில் இளைப்பாறிச் செல்கின்ற குட்டி ஜெகநாதன் அவர்களை நெஞ்சாரப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன். எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சு. சுந்தரசிவம், பிரதிக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்.**

### பெரும் பங்காற்றிய அதிபர்



இலங்கைத் தீவின் வடபாலமைந்த யாழ் நகரின் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள பாடசாலைகளில் யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் ஒன்றாகும். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ள பாடசாலையின் அதிபராகப் பணியாற்றிய கு.ஜெகநாதன் அவர்களது பணிகள் மேலும் சிறக்க எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சு. முரளிதரன்**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம்,சண்டிலிப்பாய்.**

### அருணாசல அன்னையின் மணி மகுடம்



அருணாசல அன்னையின் அதிபராக பொறுப்பேற்று சுமார் 10 வருடங்கள் சேவையாற்றி 01.10 .2013 அன்று ஓய்வு பெறும்எங்கள் அதிபர் கு.ஜெகநாதன் அவர்கள் தமது கடமையை அர்ப்பணிப்புடனும் சேவை மனப்பான்மையுடனும் திறம்பட ஆற்றிய ஒரு பெருந்தகையாவார். ஓய்வு காலத்திலும் சகல செல்வங்களும் பெற்று நீடூழிகாலம் பல்லாண்டு பெருவாழ்வு வாழ வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிவாராக.

"வாழ்க வளமுடன் பல்லாண்டு காலம்"

**ச.நித்தியானந்தன்**
**உப அதிபர், யா/அளவெட்டி அருணாசலம் வித்தி.**

### மாணவர் மனம் புரிந்த மகான்



வான் ஓங்கு புகழ் படைத்த அருணாசல அன்னையின் நல்முத்துக்களில் ஒன்றாக திகழ்பவர் எங்கள் அதிபர். மாணவர்களது மனங்களை புரிந்து கொண்டு அவர்களுக்கேற்ப தன்னை உருமாற்றி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்பவர். அத்தகைய சிறப்புக்கள் பெற்ற எமது அதிபர் தனது அறு பதாம் வயதில் ஓய்வு பெறுவது மன நெருடலை ஏற்படுத்தி னாலும் கூட அவரது வாழ்வு மேன்மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.

**செயலாளர், பாடசாலை அபிவிருத்தி சங்கம்**
**யா/அள.அரு.வித்தி.**

### செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் அதிபர் பீடத்தை அலங்கரித்த அதிபர் குட்டி ஜெகநாதன் அவர்களின் மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். பல வளர்ச்சிக்கு அயராது உழைத்தமை குறித்து நன்றி தெரிவித்து விழா எடுக்கும் விழாக் குழுவினரையும் வாழ்த்துகிறேன்.

மணிவிழாக் காணும் அதிபர் சகல செல்வங்களோடும் சீரும் சிறப்புமாக வாழ துர்க்காதேவியைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர்,ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.**

### வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றிய குட்டி ஜெகநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன்.

அவர் நீண்ட ஆயுளுடன் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திடவும் எல்லாம் வல்ல பரம்பொருளின் அருட்கடாட்சம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**சி. சத்தியசீலன்,**
**செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி



யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்திலே கடந்த ஒரு தசாப்த காலமாக அதிபராகக் கடமையாற்றிப் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய கு.ஜெகநாதன் அவர்கள் மணிவிழாக் காண்பதையிட்டுப் பெருமகிழ்வடைவதுடன் ஜெகநாதன் அவர்கள் தனது ஓய்வுகாலத்தின் பின்னரும் தனது வாழ்வினை கல்விச் சமூகத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும். இவர்கள் தன் ஓய்வு காலத்தில் சகல வளங்களும் பெற்று குடும்பத் தினருடன் பல்லாண்டு காலம் இனிதே வாழ வாழ்த்துகின்றேன்.

**செ.சந்திரராஜா**
**வலயக்கல்விப்பணிப்பாளர், வலிகாமம்.**

### முன்னாள் துணைவேந்தர் வாழ்த்து



கல்வியே ஒரு சமூகத்தின் பெருஞ்செல்வமாகும். அதனைக் காத்தும் வளர்த்தும் நிற்கின்ற கல்வியாளர்கள் நாம் போற்றுதலுக்குரியவர்கள். இந்த வகையில் அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலையின் அதிபராக அர்ப்பணிப்பான தன் பணிகளால் உயர்ந்த கு.ஜெகநாதன் அவர்களின் சேவை நலத்தினைப் பாராட்டும் இவ்வேளை பெறுமதியானது.

என் துணை வேந்தர் காலத்து பாடசாலையின் நூற்றாண்டு விழா வேளை முதன்மை விருந்தினராக அவர் பணிகளின் மேன்மைகளை அருகிருந்து காணும் வாழ்த்தும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. அவரும் அவர் குடும்பத்தினரும் நல்லன யாவும் பெற்று நிறை வாழ்வில் நிறைந்திட எல்லையிலா என் அன்பு வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்,**
**முன்னாள் துணைவேந்தர்-சமூகவியல் பேராசிரியர்,**
**சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### சிறந்த சேவையாளர்



கு.ஜெகநாதன் அவர்கள் தலைசிறந்த சேவையாளர். இவர் எனது நீண்ட கால நண்பராவார். எளிமையான சுபாவமும் தன்னடக்கமும் உடையவர். எந்த வேலையைக் கொடுத்தாலும் மறுப்பில்லாமல் செய்பவர். இது தவிர தாமா கவே முன்வந்து செயற்படும் சிந்தனையும் கொண்டவர்.

சிறந்த நிருவாகி, சிறந்த பாடகர், சிறந்த பேச்சாற்றல் மிக்கவர், பிறருக்கு உதவும் பழக்கம் உடையவர். இவரின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**க. சண்முககுலகுமாரன்**
M.Ed, B.A, Dip in Edu, Sc.Trd.S.L.P.S
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,தெல்லிப்பழை.**

### உள்ளத்திலிருந்து மலர்ந்தவை....



அறியாமை அகற்றி அறிவை வளர்க்கும் எதுவும் ஞானத்திற்கு இட்டுச் செல்லும் வாயிலாக அமையும். முன்னோர் எண்ணும் எழுத்தும் கண் ணெனப் போற்றி வாழ்ந்தார்கள். இயற்கையறிவுக்கு ஏற்றவாறு தம் வாழ்வோடு இணைந்து கல்வியை வளர்த்தார்கள். எந்த ஒரு நிறுவனத்தினதும் விளைதிறன் மேம்பாட்டிற்கும் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானது என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப தன்னால் இயன்ற பணி களை ஆற்றி இன்று ஓய்வுபெறும் எமது அதிபரின் ஓய்வுக் காலம் ஆனந்தமாக குடும்பத்தவர்களுடன் நீடூழி காலம் சீரும் சிறப்புடனும் வாழ இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி ச.கௌரிதரன், ஆசிரியர் நலன்புரிசங்கம்,**
**யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.**

### பண்பாளனின் சேவை தொடரட்டும்



அன்பும் பண்பும் அளவான பேச்சும் கனி வான பேச்சும், இன்முக வரவேற்பும் நிறைந்த கு.ஜெகநாதன் அவர்கள் தனது அதிபர் சேவையில் இருந்தும் எமது பாடசாலையில் இருந்தும் ஓய்வு பெறும் இந்நாளில் அவரைப் பற்றி சிறியேனாகிய யானும் சில விடயங்கள் பகிர்ந்து கொள்வதில் பேருகை அடைகின்றேன். சுகதேக நீண்டஆயுள் வழங்க இரு கரம் கூப்பி நாராயணப் பெருமானின் பாதார விந்தங்களைப் பிரர்த்திக்கின்றேன்.

**செல்வி சின்னராசா ஜஜிதா.**

## பொது அறிவுப் போட்டி


யாழ்ப்பாணம், செப்.30
ஒக்ரோபர் மாத தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பொது அறிவுப் போட்டி இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என்று கோண்டாவில் பொதுநூலகத்தின் நூலகர் அறிவித்துள்ளார்.
இதேவேளை கோண்டாவில் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு முகாமும் நூல் அறிமுக விழாவும் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் பொதுநூலகத்தில் இடம்பெறவுள்ளது. (வ-14)

## ஆங்கில தின போட்டி

பருத்தித்துறை, செப்.30
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப் போட்டியின் இரண்டாம் கட்டப் போட்டிகள் எதிர்வரும் 10, 11, 12 ஆகிய திகதிகளில் மன்னார் புனித சபேஸ்ரியார் பெண்கள் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



வடமாகாணத்திலுள்ள 12 வலயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட முதல் இரு இடங்களையும் பெற்ற போட்டியாளர்களே மாகாண மட்ட போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளதாக வடமாகாண ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சோமஸ்கந்தராசா தெரிவித்துள்ளார். (வ-422)



## இந்தக் கழிவு வாய்க்கால் கண்ணில்படவில்லையா?

டெங்கு வாரம் அனுஷ்டிக்க சுகாதாரத் திணைக்களம் மாநகர, பிரதேச சபைகள், திணைக்களங்கள் முனைப்புடன் தினமும் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் குறித்த ஒவ்வொரு தடவையும் தகவல்களை வெளியிட்டுவரும் நிலையில் யாழ்ப்பாணத்தின் முக்கிய வடிகால்கள் நீர்தேங்கி குப்பைகூளங்கள் நிறைந்து சேறும் சகதியுமாக டெங்கு உற்பத்தி மையங்களாகவே காணப்படுகின்றது. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் குடியிருப்புப் பகுதியொன்றில் சேறும் சகதியுமாகக் காணப்படும் ஒரு வடிகாலின் நிலை இதுவாகும். (வ-7)

## உக்காத குப்பை அனைத்தும் வாகனங்கள் மூலம் அகற்றல்


சாவகச்சேரி நகர சபை ஏற்பாடு

தென்மராட்சி, செப்.30
சாவகச்சேரி நகரசபை சுகாதாரக் குழுவினர் அனைத்து வட்டாரங்களிலும் சேகரிக்கப்படும் உக்காத குப்பைகளை வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்துவதென முடிவு செய்துள்ளனர்.
பின்வரும் திகதிகளில் வட்டார ரீதியாக நகரசபையின் குப்பை அகற்றும் வாகனங்கள் வரவுள்ளதால் அன்றைய தினம் வாகனம் வரும் வீதிகளில் உக்காத பொருள்களை பைகளில் இட்டு வைக்குமாறும் குறித்த திகதிகளில் வட்டாரத்துக்கு குப்பை அகற்றும் வாகனம் வராதுவிடின் அறிவிக்குமாறும் சுகாதாரக் குழுவின் தலைவர் த.சுதர்சன் தெரிவித்தார்.
பிரதி மாதமும் பின்வரும் திகதிகளில் வாகனம் வருகை தரும் என்பதால் வரியிறுப்பாளர்களை ஒத்துழைக்குமாறும் தெரிவித்தார்.
வட்டார இல. 1- 1, 12, 23 ஆகி திகதிகளில், வட்டார இல.2- 2, 13, 24 ஆகிய திகதிகளில், வட்டார இல.3 - 3,14,25 ஆகிய திகதிகளில், வட்டார இல.4 - 4,15,26 ஆகிய திகதிகளில், வட்டார இல. 5- 5,16,27 ஆகிய திகதிகளில், வட்டார இல. 6 - 6,17 ஆகிய திகதிகளில், வட்டார இல. 7- 7,18,29 ஆகிய 'திகதிகளில், வட்டார இல. 8 - 8,19, 30 ஆகிய திகதிகளில், வட்டார இல. 9- 9,31 ஆகிய திகதிகளில், வட்டார இல.10- 10,20,31 ஆகிய திகதிகளில், வட்டார இல. 11- 11,22, 28 ஆகிய திகதிகளில் குப்பைகள் வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தப்படவுள்ளன. (வ-9)

## எழுதுமட்டுவாழ் தெற்கில் மின் விநியோகப் பணிகள்

தென்மராட்சி, செப்.30
எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதிக்கான வடக்கின் வசந்தம் திட்டத்திலான மின்விநியோகவேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
கடந்த 2011 இல் எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் (ஜே/333) மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு வீடமைப்புத் திட்டங்கள் மூலமும் தனிப்பட்ட மூலமும் வீடுகள் அமைத்தும் மின்சாரம் கிடைக்காத நிலையில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (வ-9)

## சட்டவிரோத சாராய விற்பனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.30
அரச சாராயத்தை சட்டவிரோதமாக வீடுகளில் வைத்து விற்பனை செய்யும் குற்றச் செயல்கள் குடாநாட்டில் அதிகரித்துள்ளது என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.
கடந்த வருடம் குடாநாட்டில் கசிப்பு உற்பத்திச் செயல்கள் அதிகமாக இருந்தன. இதற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை பொலிஸாரின் உதவியுடன் மதுவரித் திணைக்கள கட்டுப்பாட்டு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வந்ததையடுத்தும் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் தண்டப் பணம் நீதிமன்றால் விதிக்கப்பட்டதையடுத்து கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.
எனினும் இந்த வருடம் அரசால் அனுமதிக்கப்பட்ட மதுபான வகைகள் குடாநாட்டுக்குள் அதிகபுழக்கத்துக்கு வந்துள்ளமையால் அரச சாராயங்களை சட்டவிரோதமாக வீடுகளில் வைத்து விற்பனை செய்து வருகிறார்கள்.
**அரச சாராய வகைகள் மதுவரித் திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் மற்றும் ஹோட்டல்களில் மட்டுமே விற்பனை செய்ய முடியும்.**
அவற்றை மீறி விற்பனை செய்யப்பட்டால் அது சட்டவிரோதமானதாகக் கருதப்படுவதால் மதுவரித் திணைக்களத்தினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.
பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் மதுப்பிரி



யர்களது அட்டகாசத்தைக் குறைக்கும் நோக்குடனும் பொலிஸாரும்இணைந்துகண்காணிப்பை மேற்கொண்டுள்ளனர்.
குறிப்பாக மதுபான விற்பனை நிலையங்கள் தூரமாக உள்ள பிரதேசங்களில் இவ்வாறான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. அந்தந்த மதுவரித் திணைக்களங்களது பிரிவுகள் ஊடாக பிரதேச ரீதியாக மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கண்காணித்து வருகின்றனர். (வ-14)

# மானிய கட்டணத்தில் மண் பரிசோதனை

## விவசாய ஆராய்ச்சிப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவிப்பு

அச்சுவேலி,செப்.30
யாழ்.மாவட்ட விவசாயிகள் தமது பயிர்ச் செய்கை நிலங்களின் மண்ணை மானிய கட்டணத்தில் 'மண்பரிசோதனை" செய்து கொள்ளலாம். தமது பிரிவு விவசாய விரிவாக்க அலுவலரின் உதவியுடன் மண் மாதிரியைப் பெற்று திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சிப் பிரிவில் அலுவலக நேரத்தில் சமர்ப்பித்து மண்பரி சோதனை செய்து கொள்ளலாம். மண் பரிசோதனைக்கான மானிய கட்டணமாக 290 ரூபாவை செலுத்தினால் போதும்.
-இவ்வாறு திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி பிரிவு பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரத்தினம் அறிவித்துள்ளார்.
யாழ்.மாவட்ட விவசாயிகள் மண்ணின் வகைப்பாடு அதற்கேற்ற பயிர்வகை மற்றும் மண்ணில் சமகாலத்தில் ஏற்பட்டுள்ள வேதியல் மாற்றம் மற்றும் இரசாயனத் தாக்கம் தொடர்பான நிலை அறியாமல் பயிர்ச்செய்கை மேற்கொள்வதால் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் தொடர்பாக விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப் பதிகாரியுடன் தொடர்பு கொண்டு வினாவியபோது;
அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்;
யாழ்.மாவட்ட விவசாயிகளின் அளவுக்கு அதிகமான உரப் பாவனை, அளவுக்கு அதிகமான கிருமிநாசினி பாவனை போன்ற செயற்பாடுகளால் மண்ணில் இரசாயனத் தாக்கம் மற்றும் வேதியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றை உரிய முறையில் கண்டுகொண்டு பயிர்ச் செய்கையை மேற்கொள்வதும் மண்ணின் தன்மையை விவசாயிகள் அறிந்து கொள்வதும் நன்மை அளிக்கும்.



**மண்ணில் இரசாயனத் தாக் கம் மற்றும் வேதியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை உரிய முறையில் கண்டு கொண்டு பயிர்ச் செய் கையை மேற் கொள்வதும் மண்ணின் தன் மையை விவசாயிகள் அறிந்து கொள்வதும் நன்மை அளிக்கும்.**

மண்ணின் மாதிரியை அறிந்து கொண்ட நிலையில் அதற்கு அமைய பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதும் மண் மாதிரியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் விவசாயிகளுக்கு நன்மை அளிப்பதோடு, பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஏற்படும் பாதிப்புக்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும். விவசாயிகள் நன்மை அடைய முடியும்.
மண் பரிசோதனை செய்வதற்கு 3 ஆயிரம் ரூபா மட்டில் செலவு ஏற்பட்ட போதிலும் விவசாயிகளிடம் இருந்து மானியக் கட்டணமாக 290 ரூபா மட்டும் பெறப்படுகின்றது.
மண் பரிசோதனை செய்ய விரும்பும் விவசாயிகள் தமது பிரிவு விவசாய விரிவாக்க அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் மூலம் மண் மாதிரியை தோட்ட நிலத்தில் இருந்து பெற்றுக் கொள்வதோடு அதற்குரிய விண்ணப்பப் படிவத்திலும் விரிவாக்க அலுவலரின் கையொப்பத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.
உரிய விண்ணப்பப் படிவம் மற்றும் மண்மாதிரி 290 ரூபா கட்டணம் என்பனவற்றை திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சிப் பிரிவில் அலுவலக நேரத்தில் சமர்ப்பித்து மண் பரிசோதனையை மேற்கொள்ள முடியும்.
மண் பரிசோதனை அறிக்கை விவசாயிகளுக்கு கையளிப்பதோடு அது தொடர்பான தெளிவான விளக்கமும் அளிக்கப்படும் எனத் தெரிவித்தார். (வ-11)

## தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் 238 பேருக்கு இதுவரை சிகிச்சை

யாழ்ப்பாணம், செப்.30
**யாழ்.போதனா வைத்தியசாலையின் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் இந்த வருடம் 238 பேர் இதுவரை சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் பிரதான தொழில் வழிச் சிகிச்சையாளர் இ.கணேசலிங்கம் தெரிவித்தார்.**
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அங்கங்கள் பலவீனமடைந்த குழந்தைகள், சத்திர சிகிச்சைகளால் பாதிப்புற்றோர், தொடர் மருத்துவம் பெற்றோர் என தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் நாளாந்தம் சிகிச்சை வழங் கப்பட்டு வருகிறது.
மருந்து மாத்திரைகள் அல்லாத உடலைப் பலப்படுத்தக் கூடிய உடற்பயிற்சி முறையிலான சிகிச்சைகள் குறித்த பிரிவில் வழங்கப்பட்டு வரும் நிலையில் இந்த வருடம் இதுவரை குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் 127 பேரும் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட 42 பேரும் மருத்துவ ரீதியான சிகிச்சையில் 69 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். இதனூடாக நோயாளர்கள் பலர் நன்மையடைந்துள்ளனர்.
யாழ்.மாவட்டம் அல்லாத வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது- என்றார். (வ-14)

# நள்ளிரவில் புகுந்த காட்டு யானைகள்

## மக்கள் திகிலடைந்து ஓட்டம்



வெல்லாவெளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள திக்கோடைக் கிராமத்தில் நள்ளிரவில் காட்டு யானைகள் புகுந்ததால் மக்கள் திகிலடைந்து அல்லோலகல்லோலப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை நள்ளிரவு கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் சனிக்கிழமை அதிகாலையிலேயே கிராமத்தை விட்டு நகர்ந்து சென்றன என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

இரவு 11 மணிக்கு இரண்டு காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்துள்ளன. காட்டு யானைகள் பயிர்களையும் மரங்களையும் துவம்சம் செய்த அரவம் கேட்டபொழுதுதான் ஊருக்குள் காட்டு யானைகள் புகுந்திருப்பது கிராம மக்களுக்குத் தெரியவந்துள்ளது.

யானைகள் புகுந்த திக்கோடை கிராமத்தில் மின்சாரமில்லை.அதனால் கிராம மக்கள் தீ மூட்டியும், மத்தளம் அடித்தும் பட்டாசு வெடிகளைக் கொளுத்தியும் ஊருக்குள் புகுந்த யானைகளை விரட்டியடித்துள்ளனர்.

இதேவேளை பயப்பீதியால் இரவுப் பொழுது முழுவதும் தாங்கள் விழித்திருந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர்.(ச)

# கல்வியை கைவிடும் மாணவர்கள் அதிகம்

## ஆயர் ஜோசப் பொன்னையா கவலை

மட்டக்களப்பு. செப்.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் 42 வீதமான மாணவர்கள் 6 ஆம் வகுப்போடு கல்வியை நிறுத்தி விடுகின்றார்கள் என்று மாவட்ட மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட கல்வி மேம்பாடு தொடர்பாக சனிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

20 வயதுக்குக் குறைந்த இளம் பெண் பிள்ளைகள் கர்ப்பமடைவதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.

தேசிய ரீதியில் 6.5வீதம் 20 வயதுக்கும் குறைந்த இளம் பெண் பிள்ளைகள் கர்ப்பமடையும் நிலையில், அது மட்டக்களப்பு மாவட்டத்தில் 10.6 வீதமாக அதிகரித்துள்ளது. இது அவர்களது கல்வியினை பாதிக்கச் செய்கின்றது.

இது மாவட்டத்தின் கல்வி நிலையை பாதிக்கச் செய்வதுடன் கல்வியில் ஆர்வமின்மையும் காட்டுகின்றது. மனித வள மேம்பாட்டுக்கு துணை நிற்பது கல்வியாகும்.



**ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும், அடிப்படையானது கல்வி.**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும், அடிப்படையானது கல்வியாகும்; நாட்டில் அறியாமையும், வறுமையையும் அழிக்ககூடிய கருவி கல்வி.

பல்லின, பலமத, பல மொழி கலாசாரங்களைக் கொண்ட சூழலில் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் தலைத்தோங்க கல்வி அடிப்படைக் காரணமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி நிலையை மேம்படுத்தவும் கல்வியை ஊக்கவிக்கவும் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். -என்றார். (ச)

# டெங்கை அழிக்க விழிப்புணர்வு



மட்டக்களப்பு. செப்.30

மட்டக்களப்பு நகரில் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கும், வீட்டுக் கிணறுகளில் கப்பி இன மீன்களை இடும் நடவடிக்கையும் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுவீடன் கூட்டுறவு நிலையத்தின் நிதியுதவியுடன் வீடு வீடாகச் சென்று டெங்கு விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

திமிலைதீவு. புதூர், வீச்சுக்கல் முனை, சேத்துக்குடா ஆகிய கிராமங்களில் டெங்கு விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நுளம்புக் குடம்பிகளை அழிப்பதற்காக இயற்கை உயிரியல் வழிமுறையாக ஒரு கிணற்றுக்கு 2 கப்பி இன மீன்களும் 2 திலாப்பியா மீன்களும் விடப்பட்டுள்ளன.

அத்துடன் வீட்டையும் அயல் பிரதேசங்களையும் சுத்தமாக வைத்திருப்பது குறித்து குடியிருப்பாளர்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டன என்று திமிலைதீவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் எம்.நவரஞ்சன் தெரிவித்தார். (ச)

# இளைஞர் பரிமாற்ற வேலைத்திட்டம்

அம்பாறை, செப்.30

2013ஆம் ஆண்டுக்கான இளைஞர் பரிமாற்ற வேலைத் திட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்று வருகின்றது.

இளைஞர் விவகாரத்திறன் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடன் இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை ஆரம்பமான இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம் இன்று திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது. (ச)

# அல் - அர்ஹம் வித்திக்கு ஆங்கில ஆசிரியரில்லை

## பெற்றோர் விசனம்

மட்டக்களப்பு, செப்.30

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை அல் - அர்ஹம் வித்தியாலயத்துக்கு கடந்த நான்கு மாத காலமாக ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர் நியமிக்கப்படவில்லை என்று மாணவர்களும், பெற்றோர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

வலயக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட தற்காலிக ஆசிரியர் வலயக் கல்விப் பணிப்பாளரின் கடிதத்தை புறக்கணித்து அதே பாடசாலையில், கையொப்பமிட்டு கடமை புரிந்து வருகின்றார்.

இந்த வலயத்துக்குட்பட்ட சில பாடசாலைகளில் மேலதிகமான வகையில் ஆங்கில ஆசிரியர்கள் கடமை புரிந்துவரும் நிலையில், இந்தப் பாடசாலையில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சி பாதிப்படைந்துள்ளது.

இந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள். எனினும் இந்த மாணவர்கள் விளையாட்டிலும் சிறப்பாக முன்னேறிவரும் வேளையில், ஆங்கில ஆசிரியர் இல்லாமல் இருப்பது வருத்தமளிக்கும் செயல் என்று பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, பிள்ளைகளின் எதிர்காலம் பாதிப்படையாதிருக்க பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்துவதற்கு தயாராகி வருகின்றனர் என்று கூறப்படுகிறது. (ச)

# 'எனது அம்மாவை தேடித் தாருங்கள்'

திருகோணமலை, செப்.30

பெரியநீலாவணையிலுள்ள ஏழு வயதுச் சிறுவன் சவூதிக்கு பணிப்பெண்ணாகச் சென்ற தனது தாயைத் தேடித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளான்.

**அனுலக்ஷன் என்ற சிறுவனே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளான்.**

**இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-**

பெரியநீலாவணை சுனாமி வீட்டுத்திட்டத்தில் வசித்து வந்த 29 கணபதி சுகந்தினி (வயது-29) என்ற பெண் 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி சவூதி அரேபியாவுக்கு பணிப் பெண்ணாகச் சென்றுள்ளார்.

உள்நாட்டுப் போரில் கணவனை இழந்த இவர் பிள்ளையை வளர்க்கவே வெளிநாடு சென்றுள்ளார் என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

குழந்தையை உறவினர்களின் பராமரிப்பில் விட்டுச் சென்ற குறித்த பெண் இரு வருட காலம் தொடர்பில் இருந்துள்ளார். பின்னர் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது என்று உறவினர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, குறித்த பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த முகவரிடம் கேட்டு அந்தப் பெண் கடமையாற்றிய எஜமானைத் தொடர்பு கொண்டபோது சுகந்தினி இலங்கை வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த பெண்ணின் மகன், தாயை மீட்டுத்தர உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளான். (ச-10)

# ஆசிரியர்களுக்கு செயலமர்வு

போரதீவுப்பற்று பாடசாலைகளில் கற்பிக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு விசேட செயலமர்வு நடைபெற்றுள்ளது.

பட்டிருப்பு வயக் கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் வழிகாட்டலில் யுனிசெவ் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கில் 37 ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் பங்கு பற்றி பல்மட்டக் கற்பித்தல் அத்தியாவசிய கற்றல் தொடர்பில் பல விடயங்களை தெரிந்து கொண்டுள்ளனர். (ச-10)

# பயிற்சிப் பட்டறை இன்று ஆரம்பம்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகத்தின் ஏற்பாட்டில் நூலகத்தை கணினிமயப்படுத்துவதற்கான ஐந்து நாள் பயிற்சிப்பட்டறை நடத்தவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகப் பிரதான நூலகத்தில் இன்று தொடக்கம் ஒக்ரோபர் 4 ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு தேசிய பாடசாலை, பொது, கல்வி சார் மற்றும் விசேட நூலகங்களின் நூலகர்கள் உட்பட 25 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெறவுள்ளனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையின் வளவாளர்களாக நிமால் ஹெட்டியாராச்சி, சிரேஷ்ட உதவி நூலகர் எம்.எம். றிபா உத்தீன், எம்.சி. எம்.அஸ்வர், திருமதி எம்.எம். மஷ்றூபா ஹமீம் மற்றும் ஏ.எம் நஹ்பீஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (ச-30)

# உலக சுற்றுலா தினம் அம்பாறையில் அனுஷ்டிப்பு

## செவ்விளநீர் கொடுத்துக் கொண்டாட்டம்

அம்பாறை, செப்.30

உலக சுற்றுலாத்தினம் அம்பாறை மாவட்டத்தில் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

சுற்றுலா மற்றும் கைத்தொழில் சம்மேளனமும் பொத்துவில் பிரதேச சபையும் இணைந்து சுற்றுலா தின நிகழ்வை நடத்தியுள்ளன.

இந்த நிகழ்வு சுற்றுலா மற்றும் கைத்தொழில் சம்மேளனத் தலைவர் ஏ.எம்.ஜவ்பர் தலைமையில் கிழக்கின் பிரபல சுற்றுலாப் பிரதேசமான பொத்துவில், அறுகம்பையிலே இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பொத்துவில் பிரதேசசபைத் தவிசாளர் எம்.எஸ்.வாசித் உட்பட படைத்தரப்பு உயரதிகாரிகள் உட்பட வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் கலந்து கொண்டனர்.

**சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும் செவ்விளநீர் வழங்கப் பட்டதுடன் சுற்றுலா தின விழிப்பு ணர்வு நிகழ்வுகளும் இடம் பெற்றன.**

இந்த நிகழ்வில் சுற்றுலாப் பயணிகளுக்கும் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும் செவ்விளநீர் வழங்கப்பட்டதுடன் சுற்றுலா தின விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

சுற்றுலா மற்றும் கைத்தொழில் சம்மேளனத் தலைவர் ஏ.எம். ஜவ்பர், சுற்றுலாப் பயணிகளுக்கும் பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எம்.எம். இஸடீன், வைத்தியசாலை நோயாளர்களுக்கும் செவ்விளநீர் வழங்கியுள்ளார். (ச-30)



# இலங்கையில் நடந்தேறியது இன அழிப்பு நடவடிக்கையே

## பிரிட்டிஷ் தொழிற்கட்சி திட்டவட்டம்



"இலங்கையில் நடந்தேறியது இன அழிப்பு நடவடிக்கை தான். எனது பார்வையில் இதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. இலங்கை விவகாரங்கள் தொடர்பில் நாம் பிரிடிஷ் அரசுக்கு தொடர்ந் தும் அழுத்தங்களைக் கொடுத்து வருகிறறோம்."

இவ்வாறு பிரிட்டிஷ் தொழில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சருமான கரெத் தொமஸ் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஹரோவிற்கான தொழில் கட்சி எம்.பியான கரெத் தொமஸை அத்தொகுதித் தமிழ் மக்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். அந்தச் சந்திப் பின்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் கமரூன் மற்றும் இளவரசர் சார்ள்ஸ் ஆகியோரை கலந்து கொள்ள வேண்டாம் என்றும் இந்த மாநாட்டில் பிரிட்டன் சார்பில் எந்தவிதமான பிரதிநிதித்துவமும் இருக்கக் கூடாது என்றும் வலியுறுத்தி 300இற்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்ட மனு ஒன்று கரேத் தொமஸிடம் இதன் போது கையளிக்கப்பட்டது.

இலங்கை தொடர்பான பல பிரச்சினைகள் சந்திப்பில் கலந்துகொண்ட மக்களாலும், இச்சந்திப்பை ஏற்பாடு செய்த பிரிடிஷ் தமிழர் பேரவையினாலும் முன்வைக்கப்பட்டன.

இலங்கையில் இடம்பெற்றது ஒரு இன அழிப்பு நடவடிக்கை என்பதை ஆமோதிக்கிறீர்களா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், "எனது பார் வையிலும் இலங்கையில் நடந்தேறியது இன அழிப்புத் தான்" என்று உறுதியாகக் கூறினார்.

தொழிற்கட்சி ஆட்சியிலிருந்திருக்குமேயானால் பொதுநலவாய மாநாட்டை நிச்சயம் புறக்கணித்திருப்போம். எனது தலைமையாலும், தொழிற்கட்சி சகாக்களாலும் தொடர்ந்து இது சம் மந்தமான அழுத்தங்கள், பிரிட்டன் அரசின் மீது பிரயோகிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன" என்றும் அவர் உறுதியளித்தார்.

மேலும், தமிழ்மக்கள்செறிந்து வாழும், ஆளும் (conserva tive) கட்சியினரின் நாடாளுமன்றத் தொகுதிகளில் இந்தக் கையெழுத்து வேட்டையை முன்னெடுப்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# நீதிமன்ற உத்தரவை மீறினால் விக்னேஸ்வரனை கைது செய்க

## அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றியீட்டிய விக்னேஸ்வரன், நீதிமன்ற உத்தரவுகளுக்குப் புறம்பாக சர்வதேச தலையீட்டை நாடினால் உடன் கைது செய்ய வேண்டும்" என்று ஜாதிக ஹெல உறு மய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

"உள்விவகாரங்களில் சர்வதேச தலையீடுகளைக் கோருவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. நாட்டில் முரண்பாடுகளை தூண்டும் வகையில் விக் னேஸ்வரன் செயற்பட்டு வருகிறார்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் ஏனைய உலக நாடுகளை இலங்கைக்கு எதிராக திசை திருப்பும் முயற்சியில் விக்னேஸ்வரன் ஈடுபட்டுள்ளார். இவ்வாறான செயற் பாடுகளுக்கு எதிராக சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சம்பிக்க வலியுறுத்தியுள்ளார்.

# மாகாண உறுப்பினர்களுக்கான வாகன 'பெர்மிட்' இடைநிறுத்தம்

மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வாகன அனுமதிப் பத்திர முறைமை இடைநிறுத்தப்பட்டுள்ளது. அடுத்த இரண்டரை ஆண்டு காலத்திற்கு மாகாண சபை உறுப்பி னர்களுக்கு வரி விலக்குடன் கூடிய வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 145 மாகாண சபை உறுப்பினர்களுக்கும் அடுத்த இரண்டரை ஆண்டு காலப்பகுதிக்கு வாகன அனுமதிப்பத்திரம் கிடைக்காது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. வெற்றியீட்டிய சில மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வாகன அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்றுள் ளது.

மாகாணசபை உறுப்பினருக்கு 45,000 அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனமும், முதலமைச்சர்களுக்கு 55,000 அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனமும் இறக்குமதி செய்ய இந்த அனுமதிப்பத்திரத்தின் ஊடாகச் சந்தர்ப்பம் கிட்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# எதிர்வரும் 4ஆம் திகதிக்குள் புலமைப்பரீட்சை பெறுபெறு

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்காக சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலம் மூன்று லட்சத்து இருபத்து ஒன்பதாயிரம் மாணவர்கள் தோன்றியிருந்தனர்.

பரீட்சைப் பெறுபெறுகள் வெளியிடப்படும் அதே தினத்தில் இணையத்திலும் பரீட்சை பெறுபெறுகள் வெளியிடப்படவுள்ளன. www.doenets.lk என்ற இணைய முகவரியின் ஊடாக பெறுபேறுகளைப் பார்வையிட முடியும்.



காலஞ்சென்ற வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திஸ்ஸாநாயக்கவின் (வயது - 59) பூதவுடலுக்கு பிரதமர் டி.எம்.ஜயரட்ண அஞ்சலி செலுத்தினார். இதன் போது மத்திய மாகாணஆளுநர் கருணாரத்ன திவுல்சனே, சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, கல்விச்சேவைகள் அமைச்சர் துமிந்த திஸநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஐ.தே.கவின் தலைமையை நிராகரித்து விட்டனர் மக்கள்

## மைத்திரி குணரட்ண தாக்கு

கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந் தமையானது அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் நிராகரித்துள்ளனர் என்பதையே காட்டுகிறது என அந்தக் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே அவர் அதனைத் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலை மைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வலியுறுத்தி எதிர்வரும் 5 ஆம் திகதி தேவேந்திர முனையில் இருந்து கொழும்பு வரை பேரணி ஒன்றை நடத்த உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பண மோசடி அறுவர் கைது

தனியார் வங்கியொன்றில் 53 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்ய முயற்சித்த கொழும்பில் உள்ள பிரதான பாடசாலையில் பயின்ற இருவர், வர்த்தகர், கலாநிதி பட்டம் பெற்ற பெண், கண் வைத்திய நிபுணர் உட்பட 6 பேர் கொஹுவல பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மின்னஞ்சல் மூலம் குறித்த வங்கியில் இருந்து பணத்தை மோசடி செய்ய முயற்சித்துள்ளனர். சந்தேக நபர்கள் இந்த பண மோசடி திட்டத்திற்கு இந்தியாவின் மும்பாய் நகரில் உள்ள ஒருவரிடம் உதவியைப் பெற்றுள்ளனர் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் வங்கியின் வாடிக் கையாளர்களுக்கு மின்னஞ்சலை அனுப்பி, அவர்களின் தகவல்களை பெற்றுள்ளனர். இதன் மூலம் கொஹுவல பிரதேசத்தில் உள்ள வங்கிக் கிளையில் பணத்தை வைப்புச் செய்யவும் சந்தேக நபர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

தமது மின்னஞ்சல் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அறிந்து கொண்ட வங்கியின் நிர்வாகம் அது பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்தது. இதனடிப்படையில் விசாரணைகளை நடத்திய பொலிஸார் சந்தேக நபர்களை கடந்த சனிக்கிழமை கைதுசெய்தனர்.

# தங்கம், யூரோ கடத்த முயன்ற இந்தியர்கள் இருவர் சிக்கினர்

சுமார் 25 இலட்சம் பெறுமதியான 106 கிராம் தங்க கட்டியொன்றையும், 10 ஆயிரம் யூரோ தாள்களையும் உடலின் பின்புறம் மறைத்து இந் தியாவுக்கு கொண்டு செல்ல முயற்சித்த இரு இந்தியப் பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் 9 டபிள்யூ 255 என்ற விமானத்தில் கட்டுநாயக்கவில் இருந்து சென்னைக்குப் புறப்பட்டுச் செல்லவிருந்தனர். இவர்களின் நடத்தையில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் அவர்களைக் கைதுசெய்தனர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ஒருவர் மறைத்து வைத்திருந்த தங்கமும் மற்றைய நபர் மறைத்து வைத்திருந்த யூரோ தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்துடன் சேர்த்து இந்த மாதத்தில் மட்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தங்கத்தை இவ்வாறு உடலில் மறைத்து கடத்திச் செல்ல முயற்சித்த 9 சம்ப வங்கள் நடந்துள்ளன என்றும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் சிக்கியவர் விளக்கமறியலில்

ரத்கம பொலிஸ் பிரிவில் துப்பாக்கியுடன் கைதான ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரி 56 ரக துப்பாக்கி, 15 ரவைகள் மற்றும் ஒரு மெகசினுடன் குறித்த சந்தேகநபர் கடந்த சனிக்கிழமை கைதாகியிருந்தார்.

இவர் கந்துருபேபுஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 42 வயதான ஒருவர் எனத் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் கடந்த சனியன்று காலி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# முஸ்லிம்களைப் போல் தமிழரை இனியும் அரசு ஏமாற்ற முடியாது

## அதிகாரம் வழங்கியே தீரவேண்டும் என்கிறது மு.கா.



"வட மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபார வெற்றியைப் பெற்றுள்ள நிலையில், வடக்கிற்கு உரிய ஆட்சி அதிகாரங்களை அரசு வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும், முஸ்லிம்களையும் ஏமாற்ற நினைப்பதுபோன்று தமிழர்களை இனியும் அரசு ஏமாற்ற முடியாது."

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் எம்.ரி.ஹஸன் அலி எம்.பி. எச்சரிக்கை விடுத்துள்ளார்..

"தங்களது பிராந்தியத்துக்கு பிராந் திய ரீதியிலான அதிகாரங்கள் தேவை என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக உள்ளனர். அது தெளிவான அவர்களது ஆணை மூலம் வெளிக் காட்டப்பட்டுள்ளது. இவற்றை இலங்கை அரசு புரிந்து கொண்டு சட்டரீதியான அதிகாரங்களை வடமாகாண சபைக்கு வழங்குவதுடன் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"வடக்கிற்கு உரிய ஆட்சி அதிகாரங்களை அரசு வழங்காவிடின், சர்வதே ரீதியாக இலங்கை பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்விலும் கடுமையான விமர்சனங் களையும், பிரேரணைகளையும் இலங்கை அரசு எதிர் நோக்க வேண்டி வரும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது.

தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் தமிழ் மக்கள் ஆயுத அடக்கு முறைக்குள் வாழ்ந்து அவர்களின் விருப்பம்போல் செயற்பட்டார்கள் எனக் கூறுவோர் இன்றைய யாதார்த்த நிலைமைகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இதனை அவர்கள் தங்களது ஜன நாயக ரீதியிலான வாக்குப் பலத்தின் ஊடாக சர்வதேசத்துக்கு வெளிக்காட்டி விட்டனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸையும், முஸ்லிம்களையும் ஏமாற்ற நினைப்பது போன்று தமிழர்களை இனியும் அரசு ஏமாற்ற முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அது இன்று சர்வதேச ரீதியாகப் பேசப்படும் ஒன்றாக அமைந்துள்ளது. கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு தமிழ் மக்கள் இன்று அதிகப்படியான ஆணையை வழங்கிவிட்டனர்.

இப்படி அவர் தெரிவித்தார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை முட்டி மோதும் நிலை மாறவேண்டும்...!

இலங்கை - இந்தியா மீனவர் பிரச்சினை இலகுவில் தீர்வதற்கான அறிகுறி, அசுகை எதுவும் தென்படுவதாக இல்லை. ஒரு தரப்பு, மறுதரப்பு மீது மாறிமாறி குற்றஞ்சாட்டுவது அனுமார் வால் போன்று நீண்டு செல்கிறது.

முன்னர், இலங்கையின் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்படும்போது, அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட பின் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு வந்தனர். அவர்களது மீன்பிடிப் படகுகளும் அவர்களிடமே திரும்பவும் ஒப்படைக்கப்பட்டன.

ஆனால் இலங்கையின் கடற்பரப்புக்குள் அத்துமீறி, தடை செய்யப்பட்ட முறைமையைப் பயன்படுத்தும் இந்திய மீனவர்கள் ஏற்படுத்தும் பாரிய அழிவை அவர்கள் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமை பயன் படுத்தப்படும் போது அப்பகுதிகளில் மீண்டும் மீன்வளம் ஏற்பட பல தசாப்தங்கள் செல்லும். ஆகவே, மீன்பிடிப்படகு பறிமுதலை விட மிகவும் கடுமையான நட வடிக்கைகள் அவசியமாகும்.

கனடாவின் நியூபௌண்ட்லாந்துக் கடலில் இதே முறைமை யைப் பயன்படுத்தி 'கொட்' மீன்கள் ஒருகாலத்தில் பிடிக்கப்பட்டன. தற்பொழுது 'கொட்' மீன்கள் அங்கு முற்றாக அழிந்துவிட்டன. 30,40 வருடங்கள் கழிந்தும் அழிவு நிவர்த்திசெய்யப்படவில்லை. அத்துமீறல்களுக்கும் தடை செய்யப்பட்ட சட்டவிரோத மீன்பிடித்தலுக்கும் இடமளித்தால் இலங்கையின் கடல்வளத்துக்கும் அதேநிலை தான் உண்டாகும்.

ஆனால் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களில் எதுவித மாற்றத்தையும் அது ஏற்படுத்தவில்லை. கடற்படையினரால் பிடிக்கப்படும் மீனவர்கள் பின்பு அவர்களது படகுகளுடன் விடுவிக்கப்படுவதால் அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. தீர்வுக்கான மாற்றுவழியும் இலங்கைக்கு இருக்கவில்லை. மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இரு நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டுச் செயற்பாட்டுக் குழுவின் கூட்டத் துக்கு இந்தியா திகதி நிர்ணயிக்காத நிலையில் கூட்டப்படவில்லை.

ஆகப் பிந்தி, இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்யுமாறு, மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனநாயக்க புதிய உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட காரைக்கால், நாகபட்டினம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 34 இந்திய மீனவர்களின் ஐந்து படகுகள் பருத்தித்துறை நீதிவானின் உத்தரவுக்கமைய பறிமுதல் செய்யப்பட்டன. வடபகுதிக் கடலில் அத்துமீறி மீன்பிடித்த வேளை, ஜூலை 31ஆம் திகதி இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட இவர்கள் ஒரு மாதத்துக்கு மேல் தடுத்து வைக்கப்பட்ட பின்பு கடந்த ஆறாம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

ஆனால் அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படவேண்டும் என்று அரசதரப்பு வழக்கறிஞர் கோரியதை அடுத்து படகுகள் கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, மன்னார் கடற்பரப்பில் ஜூன் மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் ஐந்து படகுகளுடன் கைதுசெய்யப்பட்ட 41 மீனவர்கள் மன்னார் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டு விட்டனர். ஆனால், அவர்களது படகுகள் தொடர்பான விசாரணை டிசெம்பர் முதல்வாரத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகிறது. படகுகள் பறிமுதல் செய்யப்படுவதால் கோடிக்கணக்கான ரூபா இழப்பு தமிழக மீனவர்களுக்கு ஏற்படுவதாகவும், இலங்கையின் நடவடிக்கைகள் இந்திய இறையாண்மைக்கு சவால் விடுவதாக தமிழக அரசியல் கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

எதுவாயினும், இலங்கையின் மீன்வளத்தை வறித்தாக்கும் நிலைக்கு, இந்தியா செயற்படுவதற்கு முற்படக்கூடாது. இது விடயத்தில் - விவகாரத்தில், இரண்டு தரப்புகளும் பாதிப்புறாத நிலையை உருவாக்குவதற்கு விரைந்து செயற்பட வேண்டும். இலங்கை மீனவர்களதும், இந்திய மீனவர்களினதும் தொழில் பாதிப்புறாத வகையில் செயற்றிட்டம் ஒன்றை விரைந்து தயாரிக்க வேண்டும். முட்டி மோதும் நிலைமாறி சமரசச் சூழல் உருவாக்கப்படுவது அவசியமும் அவசரமாகும்.

# வடக்கில் மக்களின் மனங்களை வென்றெடுக்க தவறிவிட்டது அரசு

## ஜனாதிபதி தேர்தலின்போது அதன் தாக்கம் வெளிப்படும்

சண்டேடைரம்ஸ் கட்டுரையிலிருந்து

■ கோகுலன்

வடமாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட தண்டனையானது புதிய சில பிரச்சினைகளை ராஜபக்ஷ அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது. ஐ.தே.கவுக்கும் ஜே.வி. பியினருக்கும் கூட அதிக பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க. விரைவாக அதன் உள் விவகாரங்களைச் சீர் செய்து கொள்ள வேண்டும். வடக்கில் அரச சார்பில் நடத்தப்பட்டிருந்த ஆய்வின்படி 16 ஆசனங்கள் கிடைக்கும் என்று எதிர்வு கூறப்பட்டிருந்த நிலையில் அதில் அரைவாசி அல்லது 7 ஆசனங்கள் மட்டுமே அதனால் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மூன்றில் இரண்டு பங்கு வெற்றி கிடைக்காமல் செய்வது அதன் நோக்கமாக இருந்துள்ளபோதிலும் மூன்றில் இரண்டுக்கும் அதிகமாகவே அதன் வெற்றி அமைந்திருந்தது. போனஸ் ஆசனங்கள் இரண்டையும் சேர்த்து கூட்டமைப்புக்கு 30 ஆசனங்கள் கிடைத்துள்ளன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் ஆசனத்துடன் திருப்தியடைய நேர்ந்தது.

தேர்தல் முடிவுகள் ஆரூடக்காரர்களையும் பொய்யர்களாக்கியுள்ளன. உட்கட்டுமான அபிவிருத்திகள், புதிய வீதித்தடங்கள், ரயில் சேவைகளை மீள் அமைத்தல், புதிய வேலை வாய்ப்புகள், சொகுசு பொருள்களை அபரிமிதமாக கொண்டு வந்து குவித்தல், இன்னும் வடக்கின் வசந்தம் என்பவை எல்லாம் மக்கள் மனங்களையும் இதயங்களையும் வென்றெடுக்க உதவவில்லை. போர் ஓய்ந்து நான்கரை ஆண்டுகள் கடந்த நிலையில் இந்த நிலைமை. இது மீள் நல்லிணக்கம் தொடர்பான அரசின் செயற்பாடுகளை அது மீண்டும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாய் உள்ளது. இந்த நிலைமையை அரசு எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்பதை இப்போது எதிர்வு கூற முடியாதுதான். மீள் நல்லிணக்கத்துக்கும் சிங்கள தேசிய தீவிரவாதிகளின் நிலைப்பாட்டுக்கும் இடையில் ஒரு சமாந்திர நிலைப்பாட்டை அரசு வகுத்துக் கொண்டு செயற்படுவது சிரமமாகவே இருக்கப் போகின்றது.

### ஜனாதிபதி தேர்தலை பாதிக்குமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்துள்ள பெருந்தொகை வாக்கு எண்ணிக்கையைப் பார்க்கையில் இனி வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலின் போது மிகச் சிக்கலான பிரச்சினையொன்றை அது தோற்றுவிக்கும் என்று தோன்றுகின்றது.

தெற்கின் வாக்குப் பலம் பிரிவடையும் நிலையில் தெற்கிலிருந்து போட்டியிடும் உறுப்பினர் ஒருவர் வடக்கின் வாக்குப் பலத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். வேறு வகையில் சொல்வதானால் அவ்வாறான ஒரு நிலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குப் பலம் ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் கருவியாக அமையக் கூடும்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விதித்திருந்த வாக்களிப்புத் தடையின் காரணமாக ஐ.தே.கவின் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்கவிருந்த வாக்குத் தொகை கிடைக்காமல் போய்விட்டது. அவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் 175, 786 வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்டார்.

கடந்தவாரம் நடந்த தேர்தலில் த.தே. கூட்டமைப்புக்கு அதைவிட இரண்டு மடங்கு 353, 595 அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. வடக்கில் அரச தரப்பு அடைந்த பின்னடைவுக்கு அதன் தலைவர்கள் மேற்கொண்ட பிரசார உத்திகளும் காரணமாக அமைந்தன. இலங்கை குடிமக்கள் எவரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் குடியமரலாம் என்று அறிவித்திருந்த அரசுத் தலைவர்கள், தெற்கை வாழ்விடமாகக் கொண்ட ஒருவரை வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராகத் த.தே.கூட்டமைப்பு தெரிவு செய்திருப்பதாகக் குற்றஞ்சாட்டினார்கள். வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் அதுநாட்டின் பிரிவினைக்கு வழி கோலும் என்றும் அவர்கள் மாகாணத்துக்கு வெளியில் பிரசாரங்களில் ஈடுபட்டார்கள். ஒருகாலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவாளராக இருந்தவரும், பிரபாகரன் மறைந்த பின் அந்த இயக்கத்தின் தலைவர் தாமே என்று அறிவித்துக் கொண்டவரும் இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருப்பவருமான கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதனும் கூட 1976 ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டை தீர்மானத்தையும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீறிச் சென்றுவிட்டதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். இந்த மாதிரியான அரசின் நிலைப்பாடும் கூட மனக் குழப்பமின்றி இருந்த வடக்கு வாக்காளர்களின் உணர்ச்சி வேகத்தைக் கிளறிவிட்டிருக்க முடியும். வடக்கின் வாக்குச் சாவடிகள் பலவற்றிலும் வாக்காளர்கள் திரண்டு வந்து வாக்களித்தமையானது வடக்கின் வாக்காளர்கள் நியாயமான அளவு அரசியல் அறிவுடன் விளங்குகிறார்கள் என்பதைக் காட்டுவதாய் இருந்தது. இந்த நிலைமையை வைத்துப் பார்க்கையில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் தமிழ் வேட்பாளர் ஒருவர் மாகாணசபைத் தேர்தலில் த.தே.கூட்டமைப்புக்குக் கிடைத்த வாக்குகளில் 78.40 வீதத்தைப் பெற்றுக் கொள்ளுவாரானால் அது ஒரு பெரும் சவாலாக அமையக்கூடும். அதேபோல் தெற்கிலும் அவருக்கு ஆதரவு கிடைக்கும் நிலையில் சிங்கள வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறுவதற்கு 50+1 வாக்கைப் பெற்றுக் கொள்ளக்கூடியவராக இருப்பாரா என்பதும் ஒரு ஆழ்ந்த சிந்தனைக்குரிய விடயமாகும்.

### மத்திய மாகாண முதலமைச்சர்

ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றுள்ள ஜனாதிபதி ராஜபக்ஷ நியூயோர்க்கில் இருந்தபோது இலங்கையில் நடந்து முடிந்த மாகாண சபைகளின் தேர்தல் முடிவுகள் கிடைக்கப் பெற்றதும் மத்திய மாகாணத்தின் முதலமைச்சராக சரத் எக்கநாயக்காவை மீண்டும் நியமிக்குமாறு கேட்டுள்ளார். மத்திய அமைச்சரவையில் உள்ள ஒருவரின் நெருங்கிய இரத்த உறவினர் ஒருவர் முதலமைச்சராக இருக்கமுடியாது என்ற வகையிலேயே இந்த நடவடிக்கை. இது பிரதம மந்திரியைக் குறிப்பதாகும். ஒரு பத்திரிகை இதுபற்றிக் குறிப்பிடுகையில் "அப்பா பிரதம மந்திரி, மகன் முதலமைச்சர்" என்று தலைப்பிட்டிருந்தது.

இந்த ஏற்பாடு பிரதம மந்திரி டி.எம். ஜயரட்ணவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது மகன் அனுராதா ஜயரட்ண 107, 644 வாக்குகள் பெற்றிருந்த நிலையில் எக்கநாயக்காவுக்கு இரண்டாவது நிலையில் 70,171 வாக்குகளே கிடைத்திருந்தன. பிரதமர் தமது மகன் சார்பில் பகிரங்கமாகவே கருத்து வெளியிட்டிருந்தார்.

அமைச்சரவையிலுள்ள ஒருவரின் இரத்த உறவினர் ஒருவர் முதலமைச்சராக இருக்க முடி யாது என்றால் அதற்கு ஏற்கெனவே எடுத்துக்காட்டு ஒன்று இருப்பதாக அவர் எடுத்துக் காட்டினார்.

நாடாளுமன்ற சபாநாயகர் ச... ராஜபக்ஷவின் மகன் ஷசிந்திரா ஊ... மாகாணத்தின் முதலமைச்சராக இ... கிறார். எனவே ஜனாதிபதி நாடு திரும்... வரை இந்த விடயம் ஒத்திவைக்... பட்டுள்ளது. இது தொடர்பாக ஐ... சுதந்திரக் கூட்டமைப்பு வட்டாரங்க... கருத்து வெளியிடுகையில் அனுரா... ஜயரட்ணவுக்கு நாடாளுமன்ற உறு... பினர் பதவி ஒன்று வழங்கப்படு... அதற்காக தேசிய பட்டியலில் உள்... பெண் உறுப்பினர் ஒரு பதவியிலிருந்... விலகுவார். அவர் முன்னொருமுறை... பதவி இறக்கப்பட்டு பின்னர் அது ஒ... தவறான முடிவு என்று அறிவிக்கப்... டிருந்தது.

### தேர்தலில் ராணுவ தலையீடு

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்த... தொடர்பாக சுதந்திரமானதும், நீதியா... துமான தேர்தலுக்கான அமை... (Caffe) வெளியிட்டுள்ள தனது ப... அவதான குறிப்புக்களில் அதன் இறு... அறிக்கையில், வடமாகாண சபை... தேர்தலில் அங்கு நிலை கொண்டுள்... ராணுவத்தின் தலையீடு குறிப்பிடக்கூடி... அளவில் காணக்கூடியதாக இருந்த... என்று தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியி... வாக்குகளை விலைக்கு வாங்கு... செயல்கள் வடமேற்கு மற்றும் மத்தி... மாகாணப் பகுதிகளிலும் காணப்பட்ட... தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளி... தாராளமாக கறுப்புப் பணம் பய... படுத்தப்பட்டிருந்தது. மதுபான விநியோ... கம், உடுபுடைவைகள் வழங்கல், கை... தொலைபேசிகள் ஏன் மூன்று சக்க... வாகனங்கள் கூட வழங்கப்பட்டிருந்த... 'கபே' அமைப்பு தேர்தல் கண்காணிப்பி... ஈடுபட்டு வந்துள்ள கடந்த ஆறு வரு... காலத்தில் இந்த அளவில் மாகாண சபை... தேர்தலில் வேட்பாளர்கள் பணம் செல... விட்டிருப்பதைக் கண்டதில்லை. வடமே... மாகாண சபைத் தேர்தலில் ஒ... வேட்பாளரின் தேர்தல் செலவினத்தி... ஒரு சாதனையை நிலைநாட்டியிருந்த... என்று அந்த அறிக்கை கூறியது.

வடமாகாண சபைத் தேர்தல் வெற்றியை... அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி... தலைவர் இரா.சம்பந்தன் பத்திரிகை... யாளர் சந்திப்பொன்றில் பேசும்போது: ஐக்கியமான , பிரிக்கப்படாத ஒரு நாட்டி... தமிழ் மக்கள் பாதுகாப்போடும் தமது சு... கௌரவத்தை தற்காத்துக்கொண்டு கண... ணியமாகவும் போதுமான அளவு த... ஆட்சி அதிகாரத்தோடு வாழவே விரும்பு... கிறார்கள். அங்கே தமது சட்டபூர்வமான... அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள் என்றார். அவ... மேலும் தெரிவிக்கையில்: இந்த குறிக்கோள்களை அடைவதற்கு த.தே.கூட்டமைப்பு திட சங்கற்பம் கொண்டுள்ளது. இவைகளை அடைவதற்கு அரசும் ஒத்துழைக்கும் என்று நம்புகின்றோம். இந்த தேர்தல் அளித்துள்ள சந்தர்ப்பத்தை அனைவரும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் -என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகையில், அரசு எங்களுடன் பேசுவதற்கு முன்வருமானால் அதனை அர்த்தமுள்ளதாக்க விரும்புமானால் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொள்வது பற்றி நாம் ஆலோசிப்போம் என்றார். அரச தரப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சுமூகமான ஒரு நல்லுறவான சூழ்நிலை ஏற்படுவதற்கான சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளன.

இதேவேளை, வடக்குத் தேர்தல் முடிவுகளை வரவேற்றுள்ள இந்திய அரசு சர்வதேசத்துக்கு இலங்கை வழங்கிய 13 ஆவது திருத்தம் மற்றும் அதற்கு மேலாகவும் சென்று தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளது.

# இளம் மொட்டுக்களைக் கவனமாக பாதுகாப்பது காலத்தின் கட்டாயம்

திருமதி றொக்ஷினி அருள்ஞானரட்ணம்

'அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். அரிய மானிடப் பிறவியை எடுத்த மனிதன் இன்று பல்வேறு துறைகளிலே வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றான். இவ்வாறாகச் சிறந்த அறிவு மிக்கதான சமுதாயத்தினைப் படைப்பதிற் பெரும் பங்கினை வகிப்பவர்கள் சிறுவர்களே. இன்றைய சிறுவர்களே நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் சிற்பிகளாவர். எனவே அவர்களுடைய தேவைகள், ஆசைகள், எதிர்பார்ப்புக்களை மழுங்கடிக்காது அவர்களின் தேவைகளை நிறைவு செய்து அவர்கள் உரிமைகளை மதித்து நடத்தும் போதே நாளைய சந்ததி ஒளி மயமானதாக உருவாக முடியும்.

இலங்கையில் நாளாந்தம் வெளிவரும் செய்திப் பத்திரிகைகளில் சிறுவர்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் பற்றிய செய்திகள் அடிக்கடி இடம் பெறுகின்றன. யுனிசெவ் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இலங்கைப் பிள்ளைகளுள் 14-16 சதவீதத்துக்கு இடைப்பட்டோர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதாக அறியப்பட்டுள்ளது. எனவே பிள்ளைகளுக்கு எதிரான உடல் ரீதியான, மனவெழுச்சி ரீதியான துஷ்பிரயோகத்தின் சதவீதம் இதனை விட உயர்வாகக் காணப்படுகின்றது. இவ்வாறன துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகள் காரணமாக ஏற்படும் உடல் ரீதியான, உள ரீதியான, சமூக ரீதியான தீங்குகள் அளவிட முடியாதவை.

உடல் சார்ந்த துஷ்பிரயோகமானது யாதேனும் வகையில் வலிமையான நிலையில் இருக்கும் ஒருவர் அல்லது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் (உதாரணமாக பெற்றோர், உறவினர்கள், ஆசிரியர்கள், பாதுகாவலர்கள்......) வேண்டுமென்றே பிள்ளைகளுக்கு காயம் விளைவித்தல் அல்லது காயம் விளைவிக்கப் போவதாக அச்சுறுத்தலே உடல்சார்ந்த துஷ்பிரயோகம் ஆகும்.



> இலங்கைப் பிள்ளைகளுள் 14-16 சதவீதத்துக்கு இடைப்பட்டோர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவ தாக அறியப்பட்டுள்ளது. எனவே பிள்ளைகளுக்கு எதிரான உடல் ரீதி யான, மனவெழுச்சி ரீதியான துஷ்பிரயோகத் தின் சதவீதம் இதனை விட உயர்வாகக் காணப்படுகின்றது.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது வளர்ந்தவர் ஒருவரால் அல்லது கூடிய வலிமையுடைய ஒருவரால் பிள்ளையொன்று பாலியல் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுதலாகும். இது தொடுகையுடனோ, தொடுகை அற்ற வகையிலோ நிகழ இடமுண்டு. உதாரணமாக தகாப்புணர்ச்சி, வன்புணர்வு, விபச்சாரம், ஆபாசப் புகைப்படங்கள் என்பனவாகும். பின்வரும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் நிகழக்கூடிய ஏதுக்கள் காணப்படுகின்றன. பெற்றோர் இல்லாத பிள்ளைகள், தனித்து விடப்படும் பிள்ளைகள், தெருவோரப் பிள்ளைகள், வேலைக்கு அமர்த்தப்படும் சிறார்கள், பெற்றோர்களால் கண்காணிக்கப்படாத சிறார்கள் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

மனவெழுச்சி சார்ந்த துஷ்பிரயோகத்துக்கு ஒருவரை தூண்டுதல் மனவெழுச்சி சார்ந்த துஷ்பிரயோகம் எனப்படும். மனவெழுச்சி சார்ந்த துஷ்பிரயோகம் மூலம் பிள்ளையின் சுய மதிப்பு மீண்டும் மீண்டும் தாக்கப்படும். அது பிள்ளையின் சுய உணர்வை நசுக்கிவிடக் கூடியது. மனவெழுச்சி ரீதியான துஷ்பிரயோகம் ஆனது மறுத்தல், இழிவுபடுத்தல், தனிமைப்படுத்துதல், அச்சமூட்டுதல், கேடு செய்தல், கரிசனை காட்டாதிருத்தல், வளர்ந்தோர் போன்று நடத்துதல் போன்ற விதங்களில் நிகழுகின்றது.

ஹென்றி கெம்பி (Henry Kempi) என்பவர் தவிர்க்கக்கூடிய சாதாரண விருத்திப் போக்கு நிலைகுலைதல் சிறுவர் துஷ்பிரயோகம் எனக் கூறுகின்றார். (இங்கு சாதாரண விருத்தி என்பது உடல், உள, மனவெழுச்சிசார், நுண்மதி சார் விருத்திகள் அடங்கும்). எனவே இவற்றில் இருந்து பிள்ளைகளது பாதுகாப்புக் காக வளர்ந்தோர் செய்யக் கூடியவை.

1. பிள்ளைகள் பாதுகாப்புப் பெற வேண்டியவர்கள் என்பதை அவர்களுக்கு கற்பித்தல் வேண்டும்.
2. பிள்ளைகள் மனதுக்குத் தொல்லை தரும் விடயங்கள் தொடர்பாக பிள்ளைகள் உங்களுடன் கதைக்கும் போது அவர்கள் கூறுபவற்றைச் செவிமடுத்தல்.
3. அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கத்தக்க விதம் தொடர்பாக ஏனைய வளந்தோருடன் உரையாடுங்கள்.
4. பாதுகாப்பாக நடந்து கொள்ளும் விதத்தை உங்களது வாழ்க்கையூடாகப் பிள்ளைகளுக்கு எடுத்துக் கர்ட்டுங்கள்.
5. பிள்ளைகளுக்கு அவர்களது சொந்தப் பாதுகாப்புத் தொடர்பாக கற்பியுங்கள். எவரேனுமொருவர் பிள்ளையொன்றுக்குத் தொல்லை கொடுக்கவோ, அப் பிள்ளையைத் தவறான வகையில் தொடவோ முயற்சி செய்வாராயின் செய்ய வேண்டியவற்றைப் பிள்ளைகளுக்குக் கற்பியுங்கள்.

* வேண்டாம் எனச் சொல்லுங்கள்.
* ங்களுக்கு நம்பிக்கையான ஒருவரிடம் சொல்லுங்கள்.
* வரேனும் ஒருவர் உதவி செய்யும் வரை அது குறித்து தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருங்கள் என அவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

நாட்டின் எதிர்காலத்தை ஏற்றுக் கொள்ளவிருக்கும் சிறுவர் சந்ததியை இவ்வாறான தீங்கான நிலைமைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளாவிட்டால் எமது நாட்டின் எதிர்காலம் இருளடைய இடமுண்டு. சிறுவர்கள் வயதில் குறைந்தவர்கள், மென்மையானவர்கள், களங்கமற்றவர்கள் எனவே அந்த மென்மையான மனதினை உடைய மலர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பெற்றோருக்கும் சமூகத்தில் அதிகாரத்தில் உடையோருக்கும் உரியதே ஆகும்.

# உப்பு நீரில் பரிகரணம் செய்து தரமான விதை நெல்லைப் பயன்படுத்துவோம்



திருமதி. ச.கி.நி.கமலராஜன
அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம் யாழ்ப்பாணம்



யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் கால போகத்தில் சராசரியாக 11,900 ஹெக்கரில் நெல் மானாவாரியாக செய்கை பண்ணப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த விஸ்தீரண நெற் செய்கைக்கு 70,800 புசல் விதை நெல் தேவைப்படுகின்றது. பொதுவாக விதை நெல் தேவையின் 70 வீதமானது கடந்த கால போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லைச் சேமித்து வைத்து விவசாயிகளால் பயன்படுத்தப்படுகின்றது. தேவைப்படும் மிகுதி விதை நெல்லானது விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் நிலையம், தனியார் விவசாய உள்ளீடுகள் விற்பனை செய்யும் நிறுவனங்கள், ஒப்பந்த விதை நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் இருந்து விவசாயிகளால் கொள்வனவு செய்யப்பட்டு விதைக்கப்படுகின்றது. துரதிஷ்டமாக கடந்த கால நெல் அறுவடையின்போது பெய்த மழை காரணமாக பெரும்பாலான விவசாயிகளது அறுவடை செய்யப்பட்ட நெல் மழை நீரில் நனைந்தது. இவ்வாறு நனைந்த நெல்லையே காய வைத்த பின் விதைத் தேவைக்காக விவசாயிகள் சேமித்து வைத்துள்ளனர்.

தரமான விதை நெல் பாவனையானது வீரியமான பயிர் வளர்ச்சிக்கும் அதிக விளைச்சலுக்கும் வழிவகுக்கும். விவசாயிகள் விதை நெல்லை எந்த இடத்திலிருந்து பெற்றாலும் அதிலுள்ள அரைவயிறன், சப்பி, பீடைத் தாக்கத்துக்குட்பட்ட, பௌதிக தாக்கத்துக்கு உட்பட்டு சேதமாகிய நெல் போன்றவற்றை அகற்றி பயன்படுத்துவது சிறந்தது. இதற்கு விதை நெல்லை உப்பு நீரில் பரிகரணம் செய்து தரமான விதை நெல்லைப் பெற்றுக் கொள்ளலாம்.

உப்புநீர் பரிகரணம் செய்வதற்கு 40 லீற்றர் கொள்ளளவுடைய பரல் அல்லது வாளி, பழுதடையாத முட்டை , உப்பு என்பன தேவையாகவுள்ளன. 40 லீற்றர் பரலினுள் 15 லீற்றர் சுத்தமான நீரை உற்றிப் பின்னர் நீரினுள் முட்டையொன்றினை இடும் போது முட்டை நீரினுள் அமிழ்ந்து போவதை அவதானிக்கலாம். பின் முட்டையின் நான்கிலொரு பாகம் நீரின் மேல் மிதக்கும் வரை தேவையானளவு கறி உப்பு இட்டு கரைத்தல் வேண்டும். பொதுவாக இந்தச் செயன்முறைக்கு 15 லீற்றர் நீருக்கு 1 கிலோ உப்பு போதுமாகவிருக்கும். விதை நெல்லை இந்தக் கரைசலில் இடும்பொது அரைவயிறன், சப்பி, பீடை மற்றும் பௌதிக தாக்கத்துக் குட்பட்ட நெல் போன்றன மிதக்கும். நிரம்பிய நெல் மணிகள் கரைசலில் அமிழ்ந்து விடும். மிதக்கும் அரைவயிறன் ,சப்பி என்பவற்றை முதலில் அகற்றி நீரில் கழுவி காயவைத்த பின்னர் அவற்றை உணவுத் தேவைக்குப் பயன்படுத்தலாம்.

> துரதிஷ்டமாக கடந்த கால நெல் அறுவடையின்போது பெய்த மழை காரணமாக பெரும்பாலான விவசாயிகளது அறுவடை செய்யப்பட்ட நெல் மழை நீரில் நனைந்தது. இவ்வாறு நனைந்த நெல்லையே காயவைத்த பின் விதைத் தேவைக்காக விவசாயிகள் சேமித்து வைத்துள்ளனர்.

உப்புக் கரைசலினுள் அமிழ்ந்திருக்கும் நெல்லை வடித்தெடுத்த உப்புத் தன்மை நீங்கும் வரை இரண்டு தடவைகள் சுத்தமான நீரில் கழுவிய பின்னர் நிழலான இடத்தில் உலரவிட்டு வயல்களில் விதைக்க முடியும். இந்தக் கரைசலினுள் மேலும் விதை நெல்லை இட்டு மேற்குறிப்பிட்ட முறைபோல சுத்திகரிக்கலாம்.

இந்தப் பரிகரணமானது செலவு குறைந்ததும், குறைந்த விஸ்தீரணத்தில் நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளினால் செய்யக்கூடிய இலகுவான முறையாகும். இந்தப் பரிகரணம் மூலம் விதை நெல்லின் தரம் மேம்படுவதுடன் வீரியமான பயிரையும் உருவாக்க முடிகின்றது.

எனவே விவசாயிகளே ! உப்பு நீர் பரிகரணம் மூலம் நீங்கள் கையிருப்பில் வைத்திருக்கும் விதை நெல்லின் தரத்தை மேம்படுத்தி நோய்த்தாக்கமற்ற நெற் செய்கையை மேற்கொண்டு செலவைக் குறைப்பதுடன் அதிகரித்த விளைச்சலையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

# பெண்ணிலை வாதம்



Feminism என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக வழங்குவது, பெண்ணியம் என்ற சொல்லாகும். இதனையே சிலர், பெண்ணிலை வாதம்' என்றும் சொல்லுவர். பெண்ணின் நிலையில் இருந்து கருத்துக்கள் அல்லது வாதங்கள் எழுவது, பெண்ணிய வாதம் ஆகும். ஆண்டாண்டுக் காலமாக உலகின் பல்வேறு பகுதிகளிலும் பெண் அடிமைப்பட்டே இருந்தாள். குடும்ப நிர்வாகம் முதற்கொண்டு பல கடமைகளைச் செய்தாலும், இனவிருத்தி செய்து குடும்பத்தைப் பெருக்கினாலும், அன்பு, பாசம் முதலிய பல நல்ல பண்புகளைப் பெற்றிருந்தாலும் பெண், தொடர்ந்து அடிமையாகவே இருக்கிறாள். இந்தச் சமுதாயம் ஆண்களை மையமிட்டது; எல்லாக் கருத்துக்களும் செயல்களும் ஆண்களை மையமாக் கொண்டே நடக்கின்றன. இவ்வாறு பெண்ணியம் தீவிரமான கருத்துக்களை முன்வைக்கிறது. இத்தகைய சமுதாயச் சூழ்நிலையை மாற்றவேண்டும்; பெண், விடுதலை பெற வேண்டும் என்று பெண்ணியம் கூறுகிறது. ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆளுமை உண்டு; அந்த ஆளுமை காப்பாற்றப்பட வேண்டும்; வளர்க்கப்பட வேண்டும்; வெளிக் கொண்டு வர வேண்டும் - என்று பெண்ணியம் கூறுகின்றது. பெண் விடுதலை என்பது, சமூக - பொருளாதார அரசியல் - பண்பாட்டுத் தளங்களில், பெண் சுயமாக இயங்குவதற்கு வேண்டிய உரிமைகளைப் பெறுவது - அதனைப் போராடியாவது பெறுவது- ஆகும்.

■ சு.சாரங்கி

## இன்னும் என்ன உறக்கம்



பெண்ணடிமையை ஒழித்திடுவோம் என்று பாரதி சொன்ன புதுமைப் பெண்கள் எங்கே? பெண்களுக்கு வழங்கப்படும் சமவுரிமை வெறும் வார்த்தையால் மட்டுமே அன்றி வாழ்க்கையில் இல்லை. பெண்களின் அறிவை அடக்கி அடிமைகளாய் நடத்தும் ஆண்கள் இன்றும் இல்லாமல் இல்லை. பெண்களின் கண் சிறைக்குள் சிக்கிய ஆண்களை காட்டிய கவிகள் ஆண்களின் கல் நெஞ்சறைக்குள் சிக்குண்ட பெண்களைத் தவறவிட்டு விட்டனர். விதியின் விடுதலையை எதிர்பார்ப்பது பேதமை. கட்டுக்களை களைத்தெறிந்து உலகை அளந்திட எழுந்திடு பெண்ணே. குடும்பம் எனும் குருவிக் கூட்டினுள்ளேயும் ஜனநாயக நாட்டிலும் சர்வாதிகாரம் தளைத்தோங்கி இருக்கிறது. குடும்பத் தலைவி எனும் பாத்திரத்தை காத்திரமாக அரங்கேற்றிடும் நடிகைகளாகிவிட்டோம். எவ்வளவு தான் பெண்கள் கடமை புரிந்தாலும் ஆணினம் அதை அலட்சியம் செய்து ஆதிக்கம் செலுத்துகிறது.பெண்களே நாம் எதிலும் சளைத்தவர்களில்லை என்பதை வெளிக்காட்ட விழித்திடுவோம். அறிவுசார் வேலைத்தளங்களாயினும் சரி, போர்க் களங்களாயினும் சரி இன்று பெண்மையின் வலிமை இல்லாத இடங்களே இல்லை. உலகமே எம்மைத் திரும்பிப் பார்க்க வைத்திடும் காலம் எம் கைகளிலேயே. முன்னைய காலங்களில் வீட்டுப் பணிகளை மட்டுமே கவனித்து வந்த பெண்கள் இன்று சமூக ரீதியில் முன்னேற வேலைத் தளங்களிலும் காலடி எடுத்து வைத்துள்ளனர்.இதை எண்ணி பெருமையடைவதா ? வருத்தப்படுவதா? உண்மையைக் கூறப்போனால் பெண்களின் வேலைச் சுமையே மேலும் அதிகரித்துள்ளது. உண்மையில் சமத்துவம் வழங்க எண்ணும் ஆண்கள் பெண்களுக்கு வீட்டுப் பணிகளிலாவது உதவ முன்வர வேண்டும். இதுவரை கூறியவை அனைத்துமே பொதுவான கருத்துள்ள அனைத்துக்கும் விதிவிலக்குகளும் இருக்கத்தான் செய்கின்றன. அனைத்து ஆண்களும் ஒரே மாதிரி இல்லை.ஒரு பெண் நினைத்தால் முடியாதது எதுவுமில்லை. அனைத்தும் எம் கைகளிலேயே. தலைகுனிந்து நடந்தது போதும். கரம் சேர்த்திடுவோம் தலை நிமிர்ந்திட...எழுந்திரு பெண்ணே.

■ இரா.ஜெயறா

## பெண்ணிலைவாதத்தில் மாற்றம் ஒன்று அவசியம்



■ பி.விபிஷனா

மனித இனம் என்பதற்கு அப்பால் ஆண்-பெண் என்ற பாகுபாடு அம்மனித இனம் தோன்றிய காலத்தில்இருந்தே பார்க்கப்பட்டு வருகிறது. காலத்துக்குக் காலம் நோக்குகைகள் வித்தியாசப்பட்டாலும் ஆணுக்கும் பெண்ணுக்குமான வேறுபாடு பேணப்பட்டு வருகின்றது. இவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பண்புகள், குணாதிசயங்கள் இருபாலாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகவே நடைமுறைச் சமூகங்களில் காண முடிகிறது. இதற்கான காரணம் என்ன என நோக்குவது அறிவுபூர்வமானதாகும். ஒரு குழந்தை பிறந்து அது தான் பிறந்த சமூகத்திற்குரியதாக மாறுவது அவசியமானதாகும். அப்பிள்ளையை அச்சமூகத்திற்குரியதாக மாற்றுவது அதாவது சமூகமயமாக்குவது குடும்பத்தின் கடமையாகிறது. இவ்வாறான சமூகமயமாக்கல் செயற்பாட்டின் போதுதான் ஆண், பெண் பாத்திரங்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆண் பாத்திரம் என வரையறுத்து வழங்கப்படுபவை பெண் பாத்தரங்களோடு ஒப்பிடுகையில் உயர்வானவை எனக் கருதப்படுவதானது பெண்ணிலைவாதச் சிந்தனைக்கு வழிசமைத்துக் கொடுக்கிறது. ஆயினும், உலகில் எல்லாச் சமூகங்களிலும் இவ்வாறுதான் இடம்பெறுகிறது என்றும் கூறிவிட முடியாது. இவ்வாறான சமூகமயமாக்கல் இயல்புகளிடையே பண்பாட்டுக்குப் பண்பாடு காணப்படும் வேறுபாடுகளை ஆரம்பகால மானிடவியல் ஆய்வுகள் விளக்குகின்றன. நியூகினிப் பழங்குடியினரான Arapesh மக்களின் சமூகமயமாக்கலில் ஆண் பெண் இருபாலாரும் மெல்லியல்புகளுடன் வளர்க்கப்படுகின்றனர். கூட்டுவாழ்வும் உதவும் பண்பும் இயல்பாய் வழங்கப்படுகின்றன. Mundugamore மக்களிடையே ஆண்களும் பெண்களும் வல்லியல்புகளுடன் வளர்க்கப்படுகின்றார்கள். Tschambuli பண்பாட்டில் ஆண்களைவிட பெண்கள் ஆதிக்கம் செலுத்துபவர்களாக, ஆண்களைவிடப் பொறுப்பும் முகாமைத்துவத் திறனும் கொண்டவர்களாகச் சமூகமயப்படுத்தப்படுகிறார்கள். இவ்வாறு சமூகமயமாக்கலின் ஊடாகவே ஆண்-பெண் பால்நிலை வேறுபாடுகள் புகுத்தப்படுகின்றன.

பால்நிலை பாத்திரவகைப்பாட்டுக்கான ஏற்பாடுகள் ஒரு பிள்ளை பிறந்தது முதற்கொண்டு நடைபெறுகின்றன. ஆண் உறுதியானவன், பெண் மென்மையானவள் என்ற எண்ணங்கள் பதியவைக்கப்படுகின்றன. ஆண் குழந்தையின் விளையாட்டுப் பொருள்களாக இராணுவ பொம்மைகள், வாகனங்களும் பெண் குழந்தைகளுக்குப் பாவைப் பிள்ளைகளும், சமையல் விளையாட்டுப் பாத்திரங்களும் வழங்கப்பட்டு பால்நிலை வேறுபாடுகள் தெளிவாக வரையறுத்து வழங்கப்படுகின்றன.மேலும் மனவெழுச்சிகளை வெளிப்படுத்துவதிலும் வேறுபாடுகள் வரையறுக்கப்படுகின்றன. ஆண் பிள்ளை அழக்கூடாது, கோபம் ஆணுக்குரியது என்றும் பெண்பிள்ளை பொறுமையாகவும் அதிகம் சிரிக்காமலும் இருக்க வேண்டும் என்றும் அழுகை பெண்களுக்குரியதென்றும் கருத்தேற்றங்கள் செய்யப்படுகின்றன. இவை அப்பிள்ளையின் வாழ்நாள் பூராகவும் தொடர்ந்துவிடுகிறது. குடும்பத்தில் தனக்கு மூத்தவரோ, இளையவரோ ஆண்களுக்குப் பணிந்து நடக்கும் பண்பை அக்குழந்தை இயல்பாகவே தன்னுள் பெற்றுக்கொள்கிறது. இதுவே பெண் அடக்குமுறையாக உருவெடுக்கிறது. பெண்ணிலைவாதம் என்ற கருத்துநிலையில் தோற்றத்திற்கு இதுவே முக்கிய அடிப்படைக் காரணமாகும். இத்தகைய மரபு ரீதியாக சமூகமயமாக்கல் அவர்களது வளர்ந்தோர் பருவத்தில் மீள்வலியுறுத்தப்படுகின்றது. பெண்கள் குடும்பத்திலுள்ள ஆண்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதைத் தமது இயல்பாக்கிக் கொள்கின்றனர். பாடசாலைக் காலத்தில் பொறியியல் துறை ஆண்களுக்குத்தான் சரி பெண் பிள்ளைக்கு ஆசிரியர் தொழில் தான் பொருத்தம் என்ற கருத்து ஊட்டப்படுகிறது. திருமணமானபின் பெண்ணின் உரிமைகள் கணவனின் கைக்கு மாறுகிறது. கணவனின் சொற்களுக்குக் கட்டுப்படாவிடின் சமூகம் தன்னை மதிக்காது என்பதால் என்பதால் ஒரு பெண் அதற்கும் கட்டுப்பட்டு வாழ்கிறாள். இவ்விடயத்தில் எல்லா ஆண்களையும் குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவது சரியாகாது. எந்தவொரு விதிக்கும் விதிவிலக்கு உண்டு என்பது இதற்கும் பொருந்தும். பால்நிலை வேறுபாடுகளுக்கு ஆண் பெண் உயிரியல் நிலையும் காரணமா என்பது சிந்திக்கற்பாலது. ஆண் -பெண் என இரு இனம் வரும் போதே அங்கு ஏதோ வித்தியாசம் இருக்கும் என்பது தெளிவு. அண்மைக்கால ஆய்வொன்றில் பெண்களைவிட ஆண்கள் கணிதவியல் நுண்ணறிவு கூடியவர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது அதற்காகப் பெண்கள் ஆண்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்ற முடிவுக்கு வருவதுதான் பிழையானது. எல்லா ஆண்களும் நுண்ணறிவு கூடியவர்களாக இருந்துவிடுவதில்லை. கணிதத்துறையில் ஆண்களைவிடச் சிறந்து விளங்கும் மாணவிகளையும் நாம் சாதாரணமாகக் காண்கின்றோம். உயிரியல் ரீதியில் ஆண்கள் நுண்ணறிவு கூடியவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர் என ஒரு வாதத்திற்கு எடுத்துக்கொண்டால். பெண்களும் பிள்ளைப்பேறு எனும் ஆண்களால் முடியாத காரியத்தைச் செய்கிறார்கள்தானே! இவ்வாறு பார்த்தால் உயிரியல் ரீதியில் ஆண்களும் பெண்களும் சமமானவர்களே.

# முல்லைத்தீவு பாடசாலைகளில் மதிய உணவு நிறுத்தப்படுமா?

## மரக்கறிகளுக்கான கொடுப்பனவு நிறுத்தப்பட்டதால்

புதுக்குடியிருப்பு, செப்.30
முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளில் மதிய உணவு வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட மரக்கறிகளுக்கான கொடுப்பனவுகள் கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் வழங்கப்படாமையால் பாடசாலைகளின் மதிய உணவு வழங்கும் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.
பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் நடவடிக்கை தற்போது நடைமுறையில் உள்ளது. மதிய உணவு தயாரிப்பதற்குத் தேவைப்படும் மரக்கறிகளுக்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது.
அந்த நிதி கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இன்று வரை வழங்கப்படாமையால் மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதில் பாடசாலை அதிபர்கள் பெரும் இடர்களைஎதிர்கொண்டு வருகின்றனர். இதனால் மதிய உணவு வழங்குவதை இடைநிறுத்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு 10 லட்சத்துக்கு மேற்பட்ட தொகை வழங்கப்படாது நிலுவையாக உள்ளதாக அந்தப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த நிலுவைப் பணத்தை உடன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-406)

> முல்லைத்தீவு மாவட் டம் கரைதுறைப்பற்று கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு 10 லட்சத்துக்கு மேற்பட்ட தொகை வழங்கப்படாது நிலுவையாக உள்ளதான அந்தப் பகுதியைச் சேர்ந்த அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# தேனீ வளர்ப்பின் மூலமாக நெடுங்கேணியில் பயன்

நெடுங்கேணி, செப்.30
நெடுங்கேணியில் தேனீ வளர்ப்பு மூலம் பல குடும்பங்கள் பயன் பெற்று வருவதை அறிய முடிகின்றது.
வீடுகளில் தேனீயை வளர்த்து தேனைச் சேகரித்து பதனிட்டுப் போத்தல்களில் அடைத்து போத்தலொன்று 800 ரூபாவுக்கு விற்பனை செய்வதன் மூலம் பல குடும்பங்கள் பயன் பெற்று வருகின்றன. போருக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சுய தொழில் முயற்சிகளில் இதில் அதிக வருமானம் கிடைப்பதாகவும் தெரிய வருகின்றது.
மேலும், மெழுகுதிரி தயாரித்தல், தேன் பெட்டி தயாரித்தல் ஆகிய முயற்சிகளிலும் நெடுங்கேணியிலுள்ள பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் பலர் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் அடங்குகின்றனர். இவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு போதிய சந்தை வாய்ப்பு இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. (க-402)

> மெழுகுதிரி தயாரித்தல், தேன் பெட்டி தயாரித்தல் ஆகிய முயற்சிகளிலும் நெடுங்கேணியிலுள்ள பெண்கள் ஈடு பட்டு வருகின்றனர்.

## கிளிநொச்சியில் சிறுவர் தின நிகழ்வுகள்

அக்கராயன், செப்.30
கிளிநொச்சியில் சிறுவர் தினம் நாளை சிறப்பாக இடம்பெறவுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
இதனையொட்டி நாளை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து காலை 8 மணிக்கு ஆரம்பிக்கும் சிறுவர் பேரணி கிளிநொச்சி அரச செயலகத்தை வந்தடைந்ததும் உரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.
சிறுவர் தினத்தைச் சிறப்பாக கொண்டாடுவது தொடர்பான கூட்டம் கிளிநொச்சி அரச செயலகத்தில் ஏற்கனவே நடைபெற்றுள்ளது.
மீள்குடியமர்வின் பின்னர் சிறுவர் நலன் தொடர்பில் கிளிநொச்சி அரச செயலகம் கூடிய கவனம் செலுத்துவதுடன் யுனிசெவ் போன்ற பல நிறுவனங்கள் பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தெரிய வருகின்றது. (க-18)



ஏ-35 பிரதான வீதியிலிருந்து பிரிந்து செல்லும் வட்டக்கச்சி கிராமத்துக்கான பிரதான வீதி புனரமைப்பு எதுவுமின்றி மோசமான நிலையில் காணப்படுகின்றது. (க-6)


## இயற்கை உரங்களைப் பயன்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம்

அக்கராயன், செப்.30
துணுக்காய் கல்விளான் கிராமத்தில் இயற்கை உரங்களை நெற்செய்கையின் போது பயன்படுத்துவது தொடர்பான கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது.
பயிர்ச்செய்கையில் இரசாயன உரங்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதன் காரணமாகப் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள நிலையில் இயற்கை உரங்களைப் பயன்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இந்தக் கிராம விவசாயிகள் மத்தியில் இடம்பெற்று வருகின்றன.
சேவாலங்கா நிறுவனம் இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டை ஏற்பாடு செய்திருந்தது.
கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் செயற்கைப் பசளை பிரயோகத்தால் வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறி வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-18)

# 3 லட்சம் ரூபா பெறுமதியான பலகைகளுடன் பிடிபட்டது லொறி

### ஒட்டுசுட்டான் பொலிஸ் சோதனை

முல்லைத்தீவு, செப்.30
சுமார் 3 லட்சம் பெறுமதியான பலகை மற்றும் மரங்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றை ஏற்றி வந்த லொறி ஒட்டுசுட்டான் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டது.
கருவேலன் கண்டல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றை ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான, பொலிஸ் பரிசோதகர் தசநாயக்கா தலைமையில் சென்ற வனசிங்க, தனசிறி ஆகியோரைக் கொண்ட குழுவினரால் தடுத்து நிறுத்திச் சோதனை மேற்கொண்டபோது முதிரை மற்றும் பாலை மரப் பலகை கள் மற்றும் மரங்கள் என்பன எரு மூடைகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். இதனையடுத்து லொறி பொருள்களுடன் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. பொலிஸாரின் விசாரணை முடிவில் லொறியில் வந்தவர்கள் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (க-500)



## தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு

# குடிதண்ணீரை வழங்குவதற்கு இரண்டு மில்லியன் நிதியுதவி

### கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

அக்கராயன், செப்.30
கிளிநொச்சி மாவட்டத்தின் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு அதனை வழங்குவதற்கென இரண்டு மில்லியன் ரூபா நிதி கிடைத்திருப்பதாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
வறட்சி காரணமாகப் பல பகுதிகளில் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளுக்கு குடிதண்ணீரை வழங்கும் பொறுப்பு பிரதேச சபைகளுக்குரியது. குடிதண்ணீர் வழங்கும் வாகனங்களுக்குப் பயன்படும் வழங்கலுக்கான எரிபொருள் செலவை அரச செயலகமே வழங்கி வருகின்றது.
இந்த ஆண்டும் இச் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் உமையாள்புரம் கண்டாவளை, பூநகரியின் பல கிராமங்கள் அக்கராயன் மத்தி கெங்காதரன் குடியிருப்பு இம்மாஸ் நகர், 50 வீட்டுத்திட்டம் உட்பட பல இடங்களில் தற்போது கடுமையான குடிதண்ணீர் நெருக்கடி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

> வறட்சி காரணமாகப் பல பகுதிகளில் குடிதண் ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்தப் பகுதி களுக்கு குடிதண்ணீரை வழங்கும் பொறுப்பு பிரதேச சபைகளுக்குரியது.

## வவுனியாவில் இடம்பெற்றது போஷாக்குக் கண்காட்சி

வவுனியா பிரமண்டு மகா வித்தியாலயத்தில் பிரமாண்டமான வகையிலான போஷாக்குக் கண்காட்சியொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.
வவுனியா சுகாதாரப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கண்காட்சியை குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள், தாய்மார் கழகத்தினர் சுகாதார திணைக்களத்தினர் ஆகியோர் இணைந்து நடத்தினர்.
தாய்மாருக்கு போஷாக்குள்ள உணவுகளை வழங்குவதன் அவசியம் மற்றும் போஷாக்கு உணவுகளை விலக்கி வைத்தால் ஏற்படும் நோய்த் தாக்கங்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கான உணவுத் தொழில்நுட்பம் குழந்தைப் பராமரிப்பில் உள்ளடக்கப்படும் உணவுகள் என்பன தொடர்பான அறிவுரைகள் இங்கு வழங்கப்பட்டதுடன் உணவு வகைகள் அடங்கிய கண்காட்சியும் இடம்பெற்றது.
இதில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டார்.
பல தாவரங்கள் இந்தக் கண்காட்சியின் போது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## ஒட்டுசுட்டானில் நாளை இருவேறு விழாக்கள்

மாங்குளம், செப்.30
சிறுவர், முதியோர் தின விழாவும், கட்டடத் திறப்பு விழாவும் நாளை ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் இ.பாஸ்கரன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லை மாவட்ட அதிபர் நா.வேதநாயகம் கலந்து கொள்வார்.
5 ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையில் அமைக்கப்பட்ட 50 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட கட்டடத் தொகுதியே திறந்து வைக்கப்படவுள்ளதுடன், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க-422)

## வவுனியா பஸ் நிலையத்தில் பகலில் உறங்குபவர்களை தடுத்து நிறுத்துக

### மதுவெறியில் அவர்கள் அட்டகாசம்

வவுனியா நகரில் பஸ் நிலையத்தில் பகல்வேளையில் உறங்கும் ஆண்களை அப்புறப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வவுனியா பஸ் நிலையம் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு வரும் ஆண்கள் சிலர் மதுபோதையில் அங்குமிங்கும் சென்றுவிட்டு போதை தலைக்கேறியதும் பஸ் தரிப்பிடத்தை அண்மித்துள்ள கட்டடத் தொகுதியில் கலாசாரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் படுத்துறங்குகின்றனர். இதனால் பஸ் நிலையத்துக்கும் வர்த்தக நிலையங்களுக்கும் வரும் பெண்கள் அருவருப்புடன் முகத்தைச் சுளித்தவாறு திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. மேலும் இந்த ஆண்கள் மதுபோதையில் சத்தமிடுவதுடன் கூடாத வார்த்தைப் பிரயோகங்களையும் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் இவர்களில் சிலர் நடைபாதையில் படுத்திருப்பதால் பெண்கள் உட்படப் பலரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இது தொடர்பாக பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்த போதிலும் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.
எனவே இத்தகைய ஆண்களின் செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு பாதிக்கப்பட்டு வரும் பெண்கள் உட்படப் பலரும் தெரிவித்துள்ளனர். (க-402)

## கல்விச் சுற்றுலா

இறம்பைக்குளம் மகளிர் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டுள்ளனர். நேற்றுமுன்தினம் காலை புறப்பட்ட இவர்கள் மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரசித்திபெற்ற திருக்கோணேஸ்வரம் ஆலயம், பாலாவி, மடுத் திருத்தல தேவாலயம், தொங்கு பாலம், மன்னார் கோட்டை, மன்னார் கடற்கரை ஆகியவற்றைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ளனர்.
பாடப்பரப்புடன் கூடிய பல்வேறு விடயங்களைப் பொது அறிவாகப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் இந்தக் கல்விச் சுற்றுலா மூலம் பயன் பெற்றுள்ளதாக மாணவர்களும் ஆசிரியர்களும் தெரிவித்துள்ளனர். (க-402)

## கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில்

### தமிழர் 4 பேர் சித்தி

யாழ்ப்பாணம், செப்.30
கடந்த வருடம் திறந்த நிலைப் போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு சேர்த்துக்கொள்ளப் பட்ட 52 பேரில் 4 பேர் தமிழர். 2 பேர் முஸ்லிம்கள். மிகுதி 46 பேரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஒரு வருட பயிற்சியின் பின்னர் உதவிக் கல்விப் பணிப் பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த தமிழர் மற்றும் முஸ்லிம் ஆறுபேரும் கடமைப் பொறுப்பை ஏற்றுள்ள நிலையங்களின் விவரம் வருமாறு:
வடக்கு மாகாணத்துக்கு நியமிக்கப்பட்ட மூன்று பேரும் இன்று தமது கடமை நிலையங்களில் பதவி ஏற்றுக்கொள்கின்றனர்.
கிளிநொச்சி கல்வி வலயம்- திருமதி அபிராமி கலை விநோதன்(உதவிக் கல்விப் பணிப்பாளர்), முல்லைத்தீவு கல்வி வலயம்-ஞானலிங்கம் ஆதவன் (உதவிக் கல்விப் பணிப் பாளர்), துணுக்காய் கல்வி வலயம்-குகதாசன் விக்கின ரூபன்- (உதவிக் கல்விப் பணிப்பாளர்) ஏனையவர்களின் விவரம் வருமாறு:
பேரின்பம் காத்தீபன்-பிரதி அதிபர், கொழும்பு றோயல் கல்லூரி, ஏ.முகம்மது நௌசாத்- உதவிக் கல்விப் பணிப் பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மத்திய மாகாணம், ஏ.எம்.பாத்திமா நஸ்ரியா- உதவிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம்- மேல் மாகாணம். (வ-11)

# போரால் பாதிக்கப்பட்ட 22 சிறுவருக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்.செப்.30
வலி காமம் மேற்குப் பிரதேசத்தில் போரால் பாதிக்கப்பட்ட 22 சிறுவர்களுக்கு யாழ்.சர்வோதயம் பல்வேறு வகையான உதவிகளை வழங் கியுள்ளது.
வலி.மேற்கு பிரதேச சபையால் ஒருங்கிணைக்கப்பட்ட 'உதவியின் உதவித் திட்டத்தின்' மூலம் 5 பேருக்கு மருத்துவத்துக்கான நிதியுதவியும், 17 பேருக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உதவிப் பொருள்களும் வழங்கப்பட்டன.
வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் கோண்டாவில் சிவபூமி மண்டபத்தில் வைத்து உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.
இதில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வைத்தியர் இனோஸ் பாத்திலோபியா, காளிய சைற்மன், சட்டத்தரணி கே.கேமமாலினி,சர்வோதய மாவட்ட இணைப் பாளர் எஸ்.சத்தியகுமார் மற்றும் பிரதேச சபைச் செயலாளர் திருமதி சா.உருத்திர சம்பவன் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.
அன்ரன் அற்புதராசா தர்சிகா (சங்கானை), கணேசலிங்கம் நிரோஜா (சங்கானை), ரவீந்திரன் கிருஷாந்தன் (சங்கானை), மயூரன் மதுசன் (சுழிபுரம்), லோகேஸ்பரன் நிலோஜினி (சுழிபுரம்), தர்மசீலன் சுலைக்ஷன் (சங்கானை), இரட்சகன் நிவேதா (சுழிபுரம்), தயாபரன் இந்துஜன் (சுழிபுரம்), மகேந்திரன் ஜயுசன் (அராலி).
தங்கவேலு மைதிலி (சங்கானை), மோகனராசா சோபிதா (வட்டுக் கோட்டை), நவவிஜிதரன் நவதினி (சுழிபுரம்), தங்கவேலு ஜயந்தினி (அராலி மத்தி), நேசராசா லக்ஷன் (அராலி மத்தி), ஜெகதீஸ்வரன் மீனலோஜினி (தொல்புரம் கிழக்கு), ஜெகதீஸ்வரன் ஹஜீபனா (சுழிபுரம் கிழக்கு), அம்பிகைபாகன் நேதா பாபுஜி (அராலி கிழக்கு) ஆகியோருக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. (வ-400-50)

## ஆளுநர் விருது



முல்லைத்தீவு மாவட்ட வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் இலக்கிய பெரு விழாவில் துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல், கலாபூஷணம் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்த ஓதுவார்மூர்த்திக்கு 2013 ஆளுநர் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது. (ஒ)

## முதியோர், சிறுவர் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.30
யாழ்.நகர் ஜே/101 பிரிவு சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உதவியாளர், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர், சிறுவர் கௌரவிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி சைவபரிபாலனசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி எ.இ.ஞானசோதி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, ஆணையாளர் செ.பிரணவநாதன், யாழ்.சுகாதார சேவைகள் பணிமனையின் மாகாண பிரதிப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன், தாய்சேய் நல வைத்திய அதிகாரி எஸ்.திருமகள், யாழ்.மாவட்ட தொற்று நோயியல் வைத்திய அதிகாரி எஸ்.சிவகணேசன், சைவபரிபாலன சபைத் தலைவர் ந.வித்தியாதரன் உட்படப் பலர் கலந்துகொள்வர். (வ-14)

## விபத்தில் காயம்

அளவெட்டி, செப்.30
காங்கேசன்துறை வீதியில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய முன் வாசலில் ஒட்டோ மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதால் ஒட்டோ வீதியை விட்டு தடம் புரண்டது. அதன் சாரதியான அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த நாகேஸ்வரன் ஜேம்ஸ் (வயது-27) படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.
இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது. அவர் ஒட்டோவில் பாண், பணிஸ் போன்ற உணவுப் பொருள்களை விற்பனை செய்து வருபவர். சம்பவ தினம் குறித்த உணவுப் பண்டங்களை எடுப்பதற்காகச் சென்ற வேளை ஆஞ்சநேயர் ஆலயத்தினுள் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர். வேகமாக வீதியை மேவி சுன்னாகம் நோக்கித் திருப்பும்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ-36)

## கரைச்சி பிரதேச செயலக சிறுவர்தின விழா நாளை

கிளிநொச்சி, செப்.30
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக சர்வதேச சிறுவர் தின விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடை பெறும்.
விழாவுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசனும் சிறப்பு விருந்தினராக மாவட்ட உதவி சமுர்த்தி ஆணையாளர் திருமதி ஜெயராணி பரமோதயனும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன்,மாவட்ட சிறுவர் பாதுகாப்புச் சபை இணைப்பாளர் கி.செந்தூரன் மாவட்டச் செயலக சமுர்த்தி ஒருங்கிணைப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.
சர்வதேச சிறுவர் தினத்தை யொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில் வழங்கலும் பாடசாலை மாண வர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (வ-9)

## இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிர்ப்புக்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். .



**இடபம்:** வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உறவுகள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்க்ள். உத்தியோகத்தில் உங்களின் புது முயற்சியை அதிகாரி பாராட்டுவார்.



**மிதுனம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.



**கடகம்** : வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். சிலரின் நயவஞ்சகச் செயலை நினைத்து வருந்துவீர்கள். உத்தியோகத்தில் தானுண்டு தன் வேலை யுண்டு என்றிருக்கப்பாருங்கள்.



**சிங்கம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்துப் போகும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் மிகுதிகளை நயமாகப் பேசி பெற்றுக்கொள்ளுங்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்



**கன்னி:** கடந்தகால இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். வெளி வட்டாரத்தில் அந்தஸ்து உயரும். சகோதரி உதவுவார். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**நாளை**

புரட்டாதி-15 செவ்வாய்க்கிழமை 01.10.2013
திதி: துவாதசி பி.இ. 05.56 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப.01.28 வரை
சுபநேரம்: 10.32 - 12.02 வரை
இராகுகாலம்: 03.02 - 04.32 வரை



**துலாம்:** உணர்ச்சிப்பூர்வமாகப் பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாக செயற்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புக்களை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள்.



**விருச்சிகம்:** கடந்த இரண்டு தினங்ளாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும்.



**தனுசு:** மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். நெருங்கியவரிடம் உங்களின் மனக் குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.



**மகரம்:** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள்.



**கும்பம்:** அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள்.



**மீனம்:** புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் மட்டத்துக்கு செல்வாக்கு உயரும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | | 9 | | | |
| | | | 7 | | | 1 | 4 | |
| 4 | 3 | | | 5 | | | | 2 |
| | 7 | | | | 6 | 4 | 9 | 1 |
| 9 | 2 | 8 | 5 | | 4 | 6 | 7 | 3 |
| 6 | 4 | 1 | 3 | | | | 8 | |
| 1 | | | | 3 | | | 2 | 7 |
| | 6 | 5 | | | 1 | | | |
| | | | 4 | | | 5 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 2 | 1 | 4 | 5 | 3 | 6 | 8 |
| 1 | 3 | 6 | 8 | 9 | 7 | 2 | 5 | 4 |
| 8 | 4 | 5 | 2 | 3 | 6 | 1 | 9 | 7 |
| 5 | 1 | 8 | 4 | 6 | 2 | 9 | 7 | 3 |
| 9 | 6 | 3 | 5 | 7 | 8 | 4 | 1 | 2 |
| 4 | 2 | 7 | 3 | 1 | 9 | 5 | 8 | 2 |
| 6 | 5 | 1 | 7 | 2 | 4 | 8 | 3 | 9 |
| 3 | 7 | 4 | 9 | 8 | 1 | 6 | 2 | 5 |
| 2 | 8 | 9 | 6 | 5 | 3 | 7 | 4 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

கிளிநொச்சி மக்கள் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில்

# இரணைமடுக் குளத்திலிருந்து குடாநாட்டுக்கு குடிதண்ணீர்

கிளிநொச்சி, செப். 30

கிளிநொச்சி மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்.குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டம் செயற்படுத்தப்படும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினுடைய விரிவுரையாளர் எஸ்.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்.குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல்கள் பல தரப்புக்களுக்கிடையே நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் இதற்கான ஒப்பந்தங்கள் செய்து கொள்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்கள், விவசாயிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராஜா, சு.பசுபதிப்பிள்ளை மற்றும் கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் நாவை. குகராஜா மற்றும் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்ட அவசர கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் தலைவர் நாவை. குகராஜா தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் மன்னார் மாவட்ட முன்னாள் அரச அதிபரும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகருமான குரூஸ், பல்கலைக்கழக விரிவுரையாளர் நந்தகுமார் ஆகியோர் இந்தத் திட்டம் பற்றிய விளக்கங்களை வழங்கியிருந்தனர். இதன்போது விவசாயிகள் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

குறித்த குடிதண்ணீர் விநியோகத்திட்டம் எதிர்காலத்தில் எந்தவித பிரச்சினைகளையும் ஏற்படுத்தாமலும், பாதிப்புக்களை ஏற்படுத்தாமலும் அமைய வேண்டும். என்றும் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (வ-6)

## முதியோருக்கு நுளம்பு வலைகள்

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 50 வயது முதிர்ந்த வயோதிபர்களுக்கு திருநெல்வேலி அரிமாக் கழகத்தின் அனுசரணையுடன் நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளன.

வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளரின் ஏற்பாட்டின் வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மிகவும் நலிவுற்ற நோயாளிகள், நடக்க முடியாதவர்கள், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பார்வையற்றவர்கள் என்ற வகையில் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கே முதற்கட்டமாக நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளன. நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு பிரதேச சபை தலைமை மண்டபத்தில் வைத்து இந்த உதவித் திட்டம் வழங்கப்படவுள்ளது. (ந-41)

## சங்கானை சந்தைப் பகுதியில் வர்த்தக ஒலிபரப்புச் சேவை

யாழ்ப்பாணம்,செப்.30

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சங்கானை சந்தை மத்திய பிரதேசத்தில் வர்த்தக ஒலிபரப்பு சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய வர்த்தக ஒலிபரப்பு சேவை என்ற பெயருடன் சேவை வழங்குவதற்கான அனுமதியை வலி.மேற்கு பிரதேச சபை வழங்கியுள்ளது என நிர்வாக இயக்குநர் சிவஞானம் சிறிகணேசன் தெரிவித்தார்.

இந்த வர்த்தக சேவை விரைவில் விஸ்தரிக்கப்பட்டு வலி.மேற்கு நகரம் முழுவதும் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ந-50)

# கட்டுரைப் போட்டி முடிவுகள்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தியடிகளின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. இந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கத்தின் யாழ்.மாவட்ட பணிமனையில் நடைபெறவுள்ளது. பரிசில்களைப் பெறும் மாணவர் விவரம் வருமாறு:

**ஆரம்பப் பிரிவு**

முதலாம் இடம்- அம்பிகை சண்முகலிங்கம் (தரம்-4)-யா/புனித பொஸ்கோ வித்தியாலயம், இரண்டாம் இடம்-கு.மாதங்கி(தரம்-5)-யா/இணுவில் இந்துக் கல்லூரி, மூன்றாம் இடம் மதுரா அருந்தவம்(தரம்-4)- யா/இந்து ஆரம்பப் பாடசாலை.

**கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம்- அஷாரிஹா அசோகன்(தரம்-7) -யா/வேம்படி மகளிர், இரண்டாம் இடம்-ஸ்ரீஸ் கந்தராசா ஜெயவைஷாலி(தரம்-8)-யா/வேம்படி மகளிர், மூன்றாம் இடம்-முஹம்மத் அஸ்மி பாத்திமா ஸகியா(தரம்-7)-கேகாலை முஸ்லிம் ம.வி.

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம்- கமலநாதன் நிரஞ்சன் (தரம்-10)-யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம்-சண்முகநாதன் மதுசன்(தரம்-9)-ஹைலன்ஸ் கல்லூரி, நுவரெலியா, மூன்றாம் இடம்-கு.மீரா(தரம்-11)-யா/இணுவில் இந்துக் கல்லூரி

**அதிசிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம்- செ.சேந்தன்(தரம்-12)-யா/இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம்-டர்சிகா சிவம்(க.பொ.த.உயர்தரம்)-சுண்டுக்குளி மகளிர், மூன்றாம் இடம்- ரஜனி யோகேஸ்வரன் (தரம்-13)-கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

## கிளி-இந்துக் கல்லூரியில் சிறுவர் முதியோர் தின நிகழ்வு

சர்வதேச சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. இதில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெறும் சிறுவர் முதியோர் தின நிகழ்வுநாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் அதிபர் சி.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறுவர்கள் கௌரவிக்கப்பட்டு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. மேற்படி நிகழ்வு கல்லூரிச் சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. (ந-6)

## விசேட தேவை சார் டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தினால் விசேட தேவைசார் பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை கொக்குவிலில் அமைந்துள்ள பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ந)

## நிறுவுநர் தினமும் பரிசில் நாளும்

தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலய நிறுவுநர் தினமும், பரிசில் நாளும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ.கணேசானந்தன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் வயைக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். தொழில் நுட்பவியல் நிறுவனப் பதிவாளர் சி.சிவநாதனும் சுழிபுரம் தபாலதிபர் திருமதி சி.மந்தாயினியும் கலந்து கொள்வர். (ந)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி வேலாயுதபிள்ளை (கபோ)



அளவெட்டி மேற்கு, தம்பளாவத்தையைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தினை வாழ்விடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலாயுதபிள்ளை 27.09.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைகுந்தமலரின் அன்புக் கணவரும், கிருத்திகா (சுவிஸ்), பிருந்திகா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காண்டீபன் (சுவிஸ்), சிறீகுலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2013) திங்கள் முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
மைத்துனர் மா.தாரநலிங்கம்(அரசேக)
மகன்மார் - சிறீகுலன் பிருந்திகா,
காண்டீபன் கிருத்திகா

அளவெட்டி மேற்கு,
தம்பளாவத்தை.

(32147) (7.6.3)

### சின்னத்துரை ரவீந்திரன்

(சோதி R.V.G. பீடிக் கம்பனி)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ரவீந்திரன் 23.09.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், அமிர்தநாதன் -காணிக்கைமேரி தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தசாந்தியின் அன்புக் கணவரும், சர்மிளா (கனடா), பிறேமிலா (கிராம அபிவிருத்தித் திணைக்களம்), கோமிலா (முன்பள்ளி ஆசிரியை, ஐக்கிய சனசமூக நிலையம்), கனிஸ்ரன் (R.G.TRADERS), கிளின்ரன் (TOPOAZ), கிறிஸ்ரலா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானபொபி(கனடா), றமேஸ்(தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை), ஜெஸ்வந்சிங் (R.V.G) ஆகியோ ரின் அன்பு மாமனும், அபிசாந் (கனடா), அனுஷ்கா (கனடா), றம்ஜா ஆகியோரின் அன்புப் பேரனும், வவா (பிரான்ஸ்), லீலாவதி (டென்மார்க்), காலஞ்சென்ற மங்களேஸ்வரன் (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அமிர்தசுரபி, அமிர்தறமணி, அமிர்தராசா(ஜேர்மனி), காலஞ்சென்ற அமிர்தசுபசிறி, அமிர்தபுவீந்திரன், காலஞ்சென்ற அமிர்தகுமாரி, அமிர்தராணி(லண்டன்), அமிர்தவதனி (ஜேர்மனி), காணிக்கைநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.09.2013) திங்கட் கிழமை பி.ப 3 மணியளவில் ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(32128)(6.3.11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 18★08★1934



விண்ணில் 01★09★2013

அமரர்

### கைலாயபிள்ளை சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்- (G.P.S.)நெல்சந்தைப்படுத்தும் திணைக்களம்)

கடந்த 01.09.2013 சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அஞ்சலி, ஆறுதல், தெரிவித்த மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த, கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத் தலைவரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (01.10.2013) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00மணிக்கு அன்னாரின் கதிரிப்பாய் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள்,அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

கதிரிப்பாய், அச்சுவேலி.
021 320 9442, 077 588 0162

மனைவி,பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி அன்னராசா



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி அன்னராசா நேற்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாந்தன் -சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும், அன்னராசாவின் அன்பு மனைவியும், விஜயரஜனி, விமல்ராசா, மஞ்சுளாரஜனி, அஞ்சலாரஜனி, அனிற்றாரஜனி (பிரான்ஸ்), எமில்ராசா ஆகியோரின் அன்புத் தாயும், ரவீந்திரதாஸ் (லண்டன்), இந்திரா(முகாமைத்துவ உதவியாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), சிவமூர்த்தி(வீடியோ கலாமினி), தங்கத்தாமரைச்செல்வன் (வைத்தியர்), ஜெயக்காந்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், தர்சன் (ஜேர்மனி), நிருஜன் (பிரான்ஸ்), கலைவாசன்(லண்டன்), ஜனகன் (லண்டன்), தமிழ்ச்செல்வன், கலைவாணி, நதீஸன், கலைவரதன்,முகிர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(30.09.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வண்ணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நி.மு.: அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

த.மு.: கைத்தொழிற் பேட்டை,
அச்சுவேலி மேற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
021 373 5759

(32148) (5.8.3)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27-09-1940 மறைவு 30-09-2011

திருமதி
**தவதேவி வேலாயுதம்**



ஆண்டு இரண்டு ஆனதுவோ
அம்மா நீங்கள் மறைந்து
ஆறவில்லை எங்கள் துயரம்
தீரவில்லை எங்கள் சோகம்
மீண்டும் காண முடியாதது தெரிந்தும்
பார்த்த மனம் தவிக்கிறது
உயிர் தந்து உடல் தந்து
பாசத்துடன் வளர்த்த அன்னையே!
பாரினில் உள்ளவரை மறக்க முடியுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

ID 55B, நீர்ப்பாசன விடுதி,
சந்தை சுற்று வட்ட வீதி, வவுனியா.

குடும்பத்தினர்.

(32527)(6.3.7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
**கமலநாயகி விவேகானந்தா**

மண்ணுலகில் 10 . 06 . 1940
விண்ணுலகில் 31 . 08 . 2013



தாயாகித் தரணியில் தயவுடன் தவமிருந்து
அன்பென்னும் ஒளி விளக்காய் எம் உயர்விற்காய் ஒளிதந்து
தம் கடமை தான் முடித்து விண்ணுலகம் தனையடைந்த
தாயே நீன் கழல் பணிகின்றோம் தயவுடனே நின்னருள்
வேண்டிநின்றோம் நீன் நினைவுடனே வாழ்ந்திருப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தாயென்ற ஓர் தெய்வம் இவ்வுலகில் வாழும் வரை எத் தெய்வமும்நிகராகார் பூவுலகில் அவர் தமக்கே.
கடந்த 31.08.2013 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவியின் இறுதிக் கிரியைகளில் பங்கேற்ற உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (30.09.2013) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 03.06.1945
இறப்பு 10.10.2004

**சின்னத்தம்பி காராளசிங்கம்**
**(யப்பான்)**

(ரவி ரயர் வேக்ஸ் சொப் உரிமையாளர்)

30.09.2013 (திங்கட்கிழமை)

எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தியாக
தீபமாக இருந்து தன்னையே அர்ப்பணித்து
ஒளியூட்டிய எங்கள் அன்புத் தெய்வமே!
உம் நினைவுகள் எம் நெஞ்சில் சுமந்த
வண்ணம் இருக்கின்றன
இந் நினைவுப் பொய்கையை எம் தந்தை தம்
பாதக்கமலத்தில் பணிந்து எங்கணமும்
வணங்குகின்றோம்.

25, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(32074) (45.6.3)

## 'மாணவர்களுக்கு சிரமம் இல்லை'

கொக்குவில், செப்.30

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) வடக்கு வீதி, ஆலயத்துக்குச் சொந்தமானது. தற்போது ஆலய புனருத்தாபன வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதனால்தான் கற்கள், மரம் தடிகள் வீதியில் போடப்பட்டுள்ளன.

- இவ்வாறு மேற்படி ஆலய நிர்வாகத்தினர் உதயனுக்கு கடிதம் மூலம் அறியத் தந்துள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதிய உதயனில் "கொக்குவில் வீதியில் கற்கள், மரத்தடிகள்; கல்லூரிக்குச் செல்வோர் சிரமம்" என்ற தலைப்பில் செய்தி வெளியாகி இருந்தது.

இது குறித்து ஆலய நிர்வாகத்தினர் அனுப்பி வைத்துள்ள விளக்கக் குறிப்பில்-

"கல்லூரிக்குச் செல்லும் பிரதான வாசல் கே.கே.எஸ். வீதியில், பாடசாலை மைதானத்துக்குச் செல்லும் பகுதியில் கல்லூரியின் பெயரில் இரு வளைவுப் பகுதிகளைக் கொண்டு அமைந்துள்ளது. அப்பகுதியே மாணவர்கள் செல்லும் பிரதான நுழைவாயில். அந்தப் பகுதியூடாகவே மாணவர்கள் செல்வது வழமை. அதனால் அவர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ எந்தவித சிரமங்களும் இல்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## மூட்டைப் பூச்சி ஒழிப்பும் சிரமதானமும்

அளவெட்டி, செப்.30

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உளநல சிகிச்சைப் பிரிவில் மூட்டைப் பூச்சிகளின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டிருந்தது. இது தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

அதனைத் தொடர்ந்து சுகாதாரப் பகுதியினர் சனிக்கிழமை மூட்டைப்பூச்சி ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஊழியர்களினால் மலத்தியோன் திரவம் விசிறப்பட்டது.

அத்துடன் குறித்த விடுதி மாவை கலட்டி வாலிபர் சங்க இளைஞர்களால் சிரமதானம் மூலம் துப்புரவும் செய்யப்பட்டது. (ந-36)

## சட்டவிரோத மின் இணைப்பு குற்றச்சாட்டில் 5 பேர் கைது

உடுவிலில் இரவு நேரங்களில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடுவில் புதுமடத்தடிப் பகுதியில் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது மின்சார சபை உத்தியோகத்தர்களும், பொலி ஸாரும் இணைந்து நடத்திய திடீர் சோதனையில் சட்டவிரோதமாக மின் இணைப்பைப் பயன்படுத்தி மின்சாரம் பெற்று வந்த 5 வீடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இன்றைய தினம் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பல இடங்களில் இவ்வாறு சட்டவிரோத மின் இணைப்பைப் பெற்று வரும் நிலையில் 5 பேர் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## விண்ணப்பிக்கலாம்

வடக்கு மாகாணத்திலுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முகாமை உதவியாளர்கள் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணினித் திறமையை சோதிக்கும் எழுத்துப் பரீட்சையும் வினைத் திறமை காண் தடைப் பரீட்சையும் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைகளில் தோற்றவிரும்பும் உத்தியோகத்தர்கள் தமது திணைக்களத் தலைவர்களின் பரிந்துரையுடன் திணைக்களத் தலைவரூடாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலர் க.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (ந-288)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட செயலகத்தின் கிராம அபிவிருத்தி அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி பிறேமிலா ரமேஸ் அவர்களின் அன்புத் தந்தையார்

**சி.ரவீந்திரன்**

அவர்கள் 23.09.2013 அன்று இறைபதம் அடைந்ததனையிட்டு அன்னாரின் குடும்பதினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலக ஊழியர் நலன்புரி சங்கம்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(32103) (45.3.6)

## கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில் அபிவிருத்தி
உதவியாளராகக் கடமைபுரியும்
திருமதி வனஜா சிவகுமார்
அவர்களின் பாசமிகு மாமனாராகிய

**ஆழ்வாப்பிள்ளை சங்கரப்பிள்ளை**

அவர்கள் கடந்த 26.09.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளமையையிட்டு அன்னாரது குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொள்வதுடன், ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
உதவித்திட்டமிடல் பணிப்பாளரும்,
திட்டமிடல் கிளை உத்தியோகத்தர்களும்.

**பிரதேச செயலகம், கரவெட்டி.**

(29538) (4.6.3)

## பிதிரு லோகத்திலிருந்து ஆசிகள்

சபிண்டீகரணம் நிறைவெய்தி
வைதரினி நதியைக் கடந்து
பிதிரு லோகப் பிராப்தி
அடைந்திருக்கும்
திருமதி இராசம்மா அவர்கள்
தம் கணவர்
சிவஸ்ரீ இராமநாதக்குருக்களுடன்



ஒன்றிணைந்து இணுவிலில் இன்று நடைபெறும்
கிரக சாந்தி வைபவத்தில் தம் குடும்பத்தினரை
ஆசீர்வதிக்கும் காட்சியை
மனக் கண்ணால் சிந்திப்போமாக.

**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**

(32118)(7.6.3)

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07*02*1973
மறைவு 30*09*1996



**சண்முகநாதன் சிவகுமார்**
(வெள்ளை)


வருடங்கள் ஓடி மறைந்தாலும் நீ எங்களைவிட்டு மறைந்தாலும்
எங்கள் இதயங்களில் என்றும் உன் நினைவுகள்
உன் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கிறோம்.

சபாபதிப்பிள்ளை வீதி.
உடுவில் கிழக்கு.
சுன்னாகம்,

அம்மா, அக்கா, அத்தான்,
மச்சான், தங்கை, மருமக்கள்

(32146) (7.6.3)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



தோற்றம் 24.10.1916 மறைவு 18.09.2013

நிகழும் விஜய வருஷம் புரட்டாதித் திங்கள்
2ஆம் நாள் (18.09.2013) புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி
இணுவில் கந்தசுவாமி கோயில் பரம்பரைப் பூசகர்,
பிரதம குருவின் துணைவி

அமரர் **ஸ்ரீமதி இராசம்மா இராமநாதக்குருக்கள்**

நினைவாக நாளை (01.10.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கந்தசுவாமி கோயிலடி, இணுவில் மேற்கு,
இணுவில். தொ.பே:021 373 4453

குடும்பத்தினர்.

(32022) (7.6.3)

# கூட்டமைப்புடன் பேச அரசு முன்வர வேண்டும்

**செல்வராசா எம்.பி. வேண்டுகோள்**



மட்டக்களப்பு,செப்.30

வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவை கவனத்தில் கொண்டு அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதற்கு முன்வர வேண்டும் . அதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய நிரந்தர தீர்வு காணப்படல் வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடமாகாணத் தேர்தல் முடிவை சர்வதேசம் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் வடக்கு வாழ் மக்கள் சர்வதேச சமூகத்துக்கு தெளிவான கருத்தை முன்வைத்துள்ளனர்.

அபிவிருத்தியை விட அரசியல் தீர்வுதான் மிக முக்கியம் என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளது. வடக்கு மக்களை அரசு அடக்குமுறைக்கு உட்படுத்தி அடிமைகளாக வைத்திருந்தது. இந்தத் தேர்தலை நடத்த வேண்டாம் என்று தென்னிலங்கை பேரினவாதக் கட்சிகள் போர்க்கொடி தூக்கின.

மாகாணசபைக்குரிய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கிவிட்டாவது தேர்தலை நடத்துவதற்கு பகீரதப் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் சர்வதேச சமூகம் அதற்கு செவி சாய்க்கவில்லை. மாறாக தேர்தலை நடத்துமாறு அச்சமூகம் அழுத்தம் கொடுத்தது.

இந்தத் தேர்தலில் வடக்கு மக்கள் தமது வாக்குகளை சரியான முறையில் பயன்படுத்தியுள்ளனர். அதன் மூலம் கிடைத்துள்ள வெற்றி எழுச்சியாகும். இது கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மத்தியிலும் உணர்ச்சியை ஊட்டியுள்ளது.

எமது அடுத்த கட்டம் வடக்கு, கிழக்கு இணைப்பாகும். அதற்கு வடக்கு மக்களுடன் இணைந்து பூரண ஆதரவை கிழக்கு மக்களும் தரவேண்டும். இந்தக் கனவு பலிக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒரு திட்டமாக மாகாண சபை முறையை ஒருபோதும் கருதவில்லை. அப்படி கருதியிருந்தால் கிழக்கு மாகாண சபைக்குரிய முதலாவது தேர்தலில் நாம் போட்டியிட்டிருப்போம்.

2ஆவது தேர்தலில் போட்டியிட்டோம். அந்தத் தேர்தலில் வெற்றியீட்டிய தமிழர்களில் ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் எமது கட்சியினராவர்.

வடக்கில் வெற்றியீட்டியுள்ள 14 பேரும் எமது கட்சியைச் சேர்ந்தவர்களேயாவர்.

2010 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகள் நூற்றுக்கு நூறு வீதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராவர்.

இந்த முடிவு கிழக்கு வாழ் தமிழர் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் என்பதை புடம்போட்டுக் காட்டியது.எனவே வடக்கு மக்களின் வெற்றிக் களிப்பில் கிழக்கு மக்களும் பங்கு கொண்டுள்ளனர்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### விழிப்புணர்வாளர்கள்

வாக்களிப்பு முறை குறித்த விழிப்புணர்வு மக்களிடமில்லை- மாகாண சபைகளுக்கான- தேர்தலில் செல்லுபடியற்ற 1,70615 வாக்குகள் தொடர்பில் தெற்காசியத் தேர்தல்கள் கண்காணிப்புக்குழு இவ்வாறு தெரிவித்திருப்பது ஓர் இடத்தில் நெருடுகிறது.

இத் தேர்தலில் தபால் மூலமான வாக்களிப்பிலும் 4,459 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. தபால் மூலம் வாக்களித்தோர் கல்வியறிவு குறைந்தவர்கள் எனக் கொள்ள முடியாது. அப்படியாயின் இவர்களுக்கு விழிப்புணர்வு இல்லையா அல்லது அது இருந்தும்... வேகார வெய்யிலில் வாக்களித்துவிட்டு வந்த இரண்டு முதியவர்களின் உரையாடல் இது: "அட கடவுளே 20 சின்னங்கள் அச்சடித்த பென்னம்பெரிய வாக்குச்சீட்டு. 9 சுயேச்சைக்குழுக்கள்.

சனங்கள்தான் பாவம். ஏன்தான் உப்பிடிச் சிப்பிலியாட்டுறாங்களோ" என்றவருக்கு, "இதுக்கு ஒரு வழிதான் அண்ணை இருக்கு..."

"உந்தச் சுயேச்சைக்குழுக்களில் பலவும் எவராலோ ஏவப்பட்ட கைக்கூலிகள் தானே....! அவர்களை எங்கடை சனங்கள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. பாவம் அவர்கள். அவர்களின் சொந்தங்கள் கூட தூக்கியெறிந்து விட்டன. நினைக்கச் சிரிப்புத்தான் வருகுது - என்றார்.

இவர்கள் அரசியல் விழிப்புணர்வுள்ளவர்களா, சமூக விழிப்புணர்வுள்ளவர்களா அல்லது இரண்டுமா? ஆனால் ஒன்று மட்டும் தெளிவு. இவர்கள் மனநோயாளர்களாக இருக்கமுடியாதென்பது.

# கிளிநொச்சி ரயிலுக்கு இரு வேறு கட்டணங்கள்

கொழும்பு.செப்.30


கொழும்பு-கோட்டையில் இருந்து கிளிநொச்சி வரையிலான ரயிலில் மூன்றாம் வகுப்புக்கான பயணச் சீட்டை கொள்ளுப்பிட்டி ரயில் நிலையத்திலோ அல்லது கொம்பனித் தெரு ரயில் நிலையத்திலோ பெறும்போது ரூபா 225 செலுத்திப் பெற்றுக்கொள்ள முடிகிறது.

எனினும் கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து கிளிநொச்சிக்கான பயணச் சீட்டுக்கு 300 ரூபா அறவிடப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, கோட்டையிலுள்ள ரயில் நிலையத்தின் அனுமதி சிட்டைகளை வழங்கும் கருமபீடத்தில் கிளிநொச்சி வரையிலான அனுமதிச் சிட்டைக்கு அறவிடப்படும் கட்டணம் எவ்வளவு என்று வினவப்பட்டபோது 300 ரூபா என்று தெரிவிக்கப்பட்டதாக பயணியொருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், கொம்பனித் தெரு மற்றும் கொள்ளுப்பிட்டி ரயில் நிலையங்களில் அனுமதிச் சிட்டைகளை வழங்கும் கரும பீடங்களில் வினவப் பட்டபோது அனுமதிச் சிட்டை ஒன்றுக்கான கட்டணம் 225 ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு- கோட்டை ரயில் நிலையத்தில் மாத்திரம் அதிகரித்த கட்டணம் அறவிடப்படுவது ஏன்? என்று பயணிகள் கேள்வி எழுப்புகின்றனர். (ச-22)




## மனமார்ந்த நன்றிகள்



கடந்த வடமாகாணசபைத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினை எழுச்சியுடன் அமோக வெற்றிபெறவைத்த மன்னார் மாவட்ட மக்களிற்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட எனக்கு 12153 விருப்பு வாக்குகளை அளித்து பேராதரவு நல்கிய என் அன்புக்குரிய மக்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு 107 வாக்குகள் வித்தியாசத்தில் எனக்கு ஆசனம் கிடைக்காதபோதும் தமிழ்த்தேசியத்தின் பால் பற்றுறுதி கொண்ட எனது மாவட்ட மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கும்,மாவட்ட அபிவிருத்திக்கும் எனது பங்களிப்பினை எப்போதும் வழங்குவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இ.சாள்ஸ் நிர்மலநாதன்
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – மன்னார் மாவட்டம்)

(32151)(4.3.6)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால், பொன்னாங்காணித் தைலம் வாங்கும் போது வர்ணமூடியில் **'சித்தாரா டிஸ்பென்சரி' 'வைத்திய முத்திரைக் குறியீடு'** என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் **'ஒறிஜினல்'** என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப் பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228

*யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:*
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

(c/11040)(5.6.3)

**ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களின் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2014 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| --- | --- |
| அன்பொளி கல்வியகம்<br>யாழ்.இந்துக் கல்லூரி வீதி,<br>யாழ்ப்பாணம். | அன்பொளி கல்வி நிலையம்<br>தபாற்கந்தோர் வீதி,<br>பெருங்குளம் சந்தி,<br>சாவகச்சேரி. |

அனுமதிகளை 28.09.2013 சனிக்கிழமையிலிருந்து 01.10.2013 செவ்வாய்க்கிழமை வரை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு:பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன விழி அசைத்து சிரித்து வரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடன் ஊட்டிடுவோம்.

இயக்குநர்கள்.

(சி/12178) (6.4.3)

**விற்பனைக்கு**

ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 805 1916 (32044) (7.6.3)

**ஓகன் விற்பனைக்கு**

KORK TRITION
Music Work Station Sampler
ஓகன் (நல்ல நிலையில் உள்ளது) விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கப்படும்
தொடர்பு: 077 698 0573 (32095) (8.311)

உ

சின்மயா மிஷன் – யாழ்ப்பாணம்
சின்மய யுவகேந்திரா
நடத்தும்



## நம்மால் முடியும்

(இளைஞர் ஆன்மிக வதிவிட முகாம்)

இடம்: யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
காலம்: 17-10-2013 பி.ப 4.00 மணி தொடக்கம்
20-10-2013 பி.ப 4.00 மணி வரை
நடத்துபவர்கள் : பிரம்மச்சாரி தர்சன் சைதன்யா
பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா
துறைசார் நிபுணர்கள்
நிகழ்வுகள் : கருத்துரைகள், தியானம், யோகா, பயிற்சிப் பட்டறைகள், விளையாட்டுக்கள், பஜனை, கலை நிகழ்வுகள், முகாம் தீ.
வயதெல்லை : 16 முதல் 24 வரை (இருபாலாரும்)
பதிவுக் கட்டணம் : 450/=

**முடிவு திகதி : 10-10-2013**

குறிப்பு : சான்றிதழ், முகாம் கையேடு, உணவு,தங்குமிடம் ஆகியன வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
சின்மயா மிஷன் இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3447, 0774939785
மின்னஞ்சல் : jaffnachyks@gmail.com

(93566)(5.6.3)



இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள சவூதி அபிவிருத்தி நிதியத்தின் உயர் மட்ட தூதுக்குழுவினர் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமை வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.
இந்தக் கலந்துரையாடலில் பிரஸ்தாப நிதியத்தின் இலங்கைக்கான நடப்பு நிதி ஆண்டுக்கான செயற்றிட்ட யோசனைகள் குறித்தும், இங்கு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பிலும் இரு தரப்பு பேச்சு இடம்பெற்றது. (ச-10)

# வெருகல் பிரதேசசபை தலைவருக்குப் பிணை

நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட வெருகல் பிரதேச சபையின் தலைவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
ஐந்து லட்சம் ரூபாவுக்காக செல்லுபடியற்ற காசோலைகளை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் அவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
பாடசாலையொன்றின் மைதானத்தை அமைப்பதற்காக கடந்த வருடம் மண் விநியோகித்த டிப்பர் உரிமையாளருக்கு இந்தக் காசோலைகள் வழங்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வெருகல் பிரதேச சபைத் தலைவர் மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
இது தொடர்பிலான வழக்கு விசாரணை ஒக்ரோபர் 10 ஆம் திகதிக்கு முன் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# உணவு நிலையங்கள் 21 முதல் பரிசோதனை

■ உணவுக் கட்டுப்பாட்டுக் குழு தீர்மானம்



கொழும்பு.செப்.30
நாடு முழுவதிலும் உள்ள உணவு, பானங்களைத் தயாரிக்கும் நிலையங்கள் மற்றும் விற்பனைச்சாலைகள் எதிர்வரும் 21 ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பரிசோதிப்பதற்கு சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுக் குழு தீர்மானித்துள்ளது.
உணவுப் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டே இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
உணவுகள், குடிபான வகைகளைத் தயாரித்தல், அவற்றைக் களஞ்சியப்படுத்தல், அந்த நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் சுகாதார நிலைப்பாடு சம்பந்தமாக இந்தப் பரிசோதனைகளின்போது கண்டறிவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் பிரதம உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி பாலித்த மஹிபாலவின் தலைமையில் கூடியுள்ள உணவுக் கட்டுப்பாட்டுக் குழுவே இந்தத் தீர்மானங்களை எடுத்துள்ளது.
இலங்கையைப் போன்றே உலக நாடுகள் அனைத்திலும் உணவுகள் விஷமான சம்பவங்கள் கடந்த ஆண்டில் இடம்பெற்றுள்ளன.
சீனாவில் மாத்திரம் 300 மில்லியன் பேரும், அமெரிக்காவில் 110 மில்லியன்கள் வரையிலும் உணவுகள் விஷமானதால் உயிரிழந்துள்ளனர்.
இலங்கையிலும் கூட உணவுகள் விஷமானதால் பலர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் பிரதம உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி சுட்டிக்காட்டினார்.(ச-22)

# வாக்குகளை எண்ண வருகிறது புதிய முறை

■ கவனம் செலுத்துகிறார் மஹிந்த தேசப்பிரிய



கொழும்பு.செப்.30
அரசியல் கட்சிகளுக்குக் கிடைத்துள்ள வாக்குகள் மற்றும் வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளை எண்ணிக் கணக்கிடுவதற்கு இரு குழுக்கள் அமர்த்தப்பட்டு வெவ்வேறாக மேற்கொள்ளப்படுவதற்கான புதிய முறைமை யொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
இந்த முறைமை அடுத்து இடம்பெறவுள்ள மேல் மாகாண சபைக்கான வாக்களிப்பின் போது அறிமுகப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
அதற்கமைய,கட்சிகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள வாக்குகள் எண்ணப்படுவதை வழமை போன்று வாக்குப் பெட்டிகள் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களுக்கு எடுத்துவரப்பட்டதன் பின்னர் மேற்கொள்வதற்கும், அவை எண்ணிக் கணக்கிடப்பட்டதன் பின்னர், வேறும் குழுவொன்றை அமர்த்தி விருப்பு வாக்குகள் எண்ணப்படுவதை

**புதிய முறைமை அடுத்து இடம் பெறவுள்ள மேல்மாகாண சபைக்கான வாக்களிப்பின் போது கடைப் பிடிக்கப்படும்.**

அதற்கு அடுத்த தினத்தில் காலையில் ஆரம்பிப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, வாக்குகள் எண்ணப்படுவதைக் கண்காணிப்பதற்கு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் மூலமாக அமர்த்தப்படும் பிரதிநிதிகள் குழுக்கள் இரண்டை அமர்த்தி விடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
இத்தகைய செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் பெரிதும் ஊடுருவித் தெரியத்தக்கதான வாக்குகளை எண்ணிக் கணக்கிடும் செயற்பாடொன்றை மேற்கொள்ள முடியும் என்று தேர்தல் ஆணையாளர் கூறினார்.
எனினும், எப்போதுமே தேர்தல்கள் பற்றி நிலவும் நம்பிக்கையீனம், இத்தகைய முறைமையொன்றின் போதும் அரசியல் கட்சிகளிடமிருந்து நீங்காதிருக்கக் கூடும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

# ஏறாவூரில் இந்திய நபர் கைது

மட்டக்களப்பு, ஏறாவூர் முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் விசா அனுமதியின்றி வர்த்தகத்தில் ஈடுபட்ட இந்திய நபர் ஒருவரை ஏறாவூர் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
சந்தேகநபர் சனிக்கிழமை ஏறாவூர் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
இந்திய நபரை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும்வரை மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச)

# கடற்றொழிலாளருக்கு இடர் நிவாரண நிதியம்

கொழும்பு,செப்.30
கடற்றொழிலாளர்களின் நலன் கருதி இடர் நிவாரண நிதியம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது
இடர்களை எதிர்நோக்கும் கடற்றொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதே இதன் நோக்கமாகும்
கடந்த ஜூன் மாதம் 8 திகதி நிலவிய சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட விபத்துக்களில் 59 மீனவர்கள் உயிரிழந்தனர்.
அதனைத் தொடர்ந்து மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நிதியமொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது என்று தேசிய கடற்றொழில் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.
இந்த நிதியத்தை நிறுவ கடற்றொழில் அமைச்சரும், பிரதி அமைச்சரும் மாதச் சம்பளத்தை அன்பளிப்பு செய்துள்ளனர் என்று சம்மேளனத்தின் பொதுச் செயலர் பிரேமசிறி பெரேரா தெரிவித்தார். (ச)

# பாலம் சேதம் மக்கள் அச்சம்

திருகோணமலை, செப்.30
குறிஞ்சாமுனை, கன்னன்குடா வீதியில் அமைந்துள்ள கன்னன்குடாப்பாலம் சேதமடைந்துள்ளதால் வாகனப் போக்குவரத்தின் போது விபத்து ஏற்படுகிறது என்று சாரதிகளும் பயணிகளும் தெரிவித்துள்ளனர்.
நீண்ட காலத்துக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பாலம் பல தடவைகள் சேதமடைந்த நிலையில், மேற்பரப்புக்கு கொங் கிறீட் இட்டு செப்பனிடப்பட்டது.
தற்போது மீண்டும் இந்தப் பாலம் சேதமடைந்துள்ளது. அதனால் கன்னன் குடா, மண்டபத்தடி, கரையாக்கந்தீவு போன்ற கிராமங்களுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.
இதனால் அந்தப் பகுதி மக்கள் போக்குவரத்து நெரிசலை எதிர் கொண்டுள்ளதுடன், பாலத்தினை புனரமைத்துத் தருமாறு சம்மந்தப்பட்ட தரப்பினரிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-10)

# வருட இறுதிக்குள் யாழ்ப்பாணக் கோட்டை மக்கள் பாவனைக்கு

தேசிய உரிமைகள் அமைச்சு தகவல்

கொழும்பு, செப்.30
போர் இடம் பெற்றிருந்த காலகட்டத்தில் தாக்குதல்களுக்கு உள்ளாகி சிதைவுற்ற யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கையின் இரண்டாவது கோட்டையாகக் கருதப்படும் யாழ்ப்பாணக் கோட்டை இந்த ஆண்டுக்குள் புனரமைத்து மக்களின் பாவனைக்குக் கையளிக்கப்படும்.
இந்தத் தகவலை தேசிய உரிமைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.
ஒல்லாந்தரால் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணக் கோட்டையில் அமைந்திருந்த பழைமை வாய்ந்த நினைவுச் சின்னங்கள் பலவும் கடந்த காலப் போருக்கு உள்ளாகி அழிந்து போயின.
இந்தக் கோட்டை புனரமைப்புச் செய்வது தொடர்பான செயற்றிட்டமொன்று நெதர்லாந்து ஸ்ரீலங்கா கலாசார ஒத்துழைப்புக்கள் வேலைத்திட்டத்தின் கீழ் கடந்த 2010 ஆண்டில் நெதர்லாந்து அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தற்போது யாழ்ப்பாணக்



கோட்டையின் புனரமைப்புப் பணிகளின் பெரும்பகுதி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

நுழைவாயிலும் புனரமைக்கப்பட்டு தகவல் மையமொன்றினை நிறுவுவதற்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்தப் புனரமைப்பின் ஊடாக வடமாகாணத்தில் சுற்றுலாத்துறையில் அபிவிருத்தி ஏற்படும் என்று தேசிய உரிமைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.(ச-22)

# பஸ் இறக்குமதிக்கு கிடைத்தது அனுமதி

கொழும்பு, செப்.30
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குப் புதிதாக 2,000 பஸ்களையும், பொதுநலவாய மாநாட்டுக்காக 100 சொகுசு பஸ்ஸையும் இறக்குமதி செய்வதற்கு இலங்கைப் போக்குவரத்து சபைக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.
அதற்கமைய, பொதுநலவாய மாநாட்டுக்காக சீனாவிடமிருந்து 100 பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. அது சம்பந்தமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. (ச-22)



## இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

சென்னை, செப்.30

தமிழகத்தில் உள்ள இலங்கையர்கள் தங்களுக்கு ஐக்கிய நாடுகளின் அகதி அந்தஸ்த்து கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி யுள்ளனர்.

தமிழகத்தில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகள் ஆணையகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

தமிழக அரசின் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அகதி அந்தஸ்த்து முக்கியமானதாகக் காணப்படுகிறது. எனினும், தமிழகத்தில் உள்ள இலங்கையைச் சேர்ந்த அகதிகளுள் பலருக்கு இந்த அந்தஸ்த்து இல்லாத நிலையில், அரசிடம் இருந்து உதவிகளைப் பெற முடியாதிருப்பதாக அகதிகள் தெரிவித்துள்ளனர்.

## ஈழத் தமிழர் பிரச்சினைக்கு முதல்வர் ஜெயலலிதாவின் அழுத்தம் அவசியம்

### அன்புமணி ராமதாஸ் வேண்டுகோள்

சென்னை, செப்.30

தமிழக முதல்வர் ஜெயலலிதா அழுத்தம் கொடுத்தால் மட்டுமே ஈழத் தமிழர் பிரச்சினை தீரும் என்று பாட்டாளி மக்கள் கட்சி இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா.மனிதஉரிமைகள் ஆணையக் கூட்டத்தில் பங்கேற்று விட்டு சென்னை திரும்பிய அவர் மீனம் பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசினார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய கூட்டத்தில் பசுமை தாயகம் அமைப்பின் சார்பில் கலந்து கொண்டு பேசினேன். சர்வதேச விசாரணை மூலம் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என அப்போது வலியுறுத்தினேன்.

இலங்கைக்கு நேரில் சென்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அளித்துள்ள அறிக்கையில், இலங்கை இராணுவத்தின் அத்துமீறல்கள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள், தமிழர் பகுதிகளில் சிங்களவர்கள் குடியேற்றம் ஆகியவற்றை சுட்டிக்காட்டியுள்ளார். இந்த அறிக்கையின் அடிப்படையில் இலங்கை மீது ஐ.நா.சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈழத் தமிழர்களின் பிரச் சினை தீர இலங்கைக்கு இந்திய அரசு



அழுத்தம் கொடுக்க வேண் டும் என வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர். முதல்வர் ஜெயலலிதா அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள் குழுவு டன் பிரதமரைச் சந்தித்து மத்திய அரசுக்கு அழுத்தம் தந்தால் மட்டுமே ஈழத் தமிழர் பிரச்சினை தீரும்-என்றார். (வ)

## இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை வீழ்ச்சி

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தியாவுக்கு அகதிகளாக சென்ற பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நாடு திரும்ப நாட்டம் காட்டுவதில்லை என தெரிவித்துள்ளது. 102000 இலங்கை அகதிகள் இந்தியாவில் தங்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நாடு திரும்ப விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 110 முகாம்களில் 67,435 இலங்கைக் குடும்பங்களும், உறவினர் வீடுகளில் 34,757 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்ற னர்.

அதிகமான இலங்கை அகதிகள் இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக இந்தியாவுக்குச் சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள 110 முகாம்களில் 67,435 இலங்கைக் குடும்பங்களும், உறவினர் வீடுகளில் 34,757 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர்.

போர் இடம்பெற்ற காலத்தில் இவர்கள் இந்தியாவுக்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக் கது. கடந்த இரண்டரை ஆண்டு காலப்பகுதியில் 3,476 இலங்கை அகதிக் குடும்பங்களே ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவியுடன் நாடு திரும்பியுள்ளன. (வ)

## இலங்கைப் பிரதிநிதிக்கு புதுச்சேரியில் எதிர்ப்பு

புதுச்சேரி, செப்.30

வர்த்தக சபை கூட்டத்தில் பங்கேற்க, புதுச்சேரி சென்ற இலங்கைப் பிரதிநிதிக்கு தமிழ் அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையில் நடைபெறவுள்ள உலக அளவிலான வர்த்தகக் கண்காட்சிக்கான அழைப்பை விடுப்பதற்காக இலங்கை யைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் காலை புதுச்சேரி சென்றுள்ளார்.

புதுச்சேரி வர்த்தக சபை பிரதிநிதிகளை, விடுதி ஒன்றில் காலையில் சந்திக்கவும், மாலை தொழில் கூட்டமைப்பினர் நடத்தும் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவும் ஏற்பாடு நடந்தது. ஆனால், வர்த்தக சபை நிர்வாகிகள் பலர் பின் வாங்கியதால் கூட்டம் நடைபெறவில்லை. இந்நிலையில், இலங்கை வர்த்தகர் சென்றி ருக்கும் தகவல் கசிய துவங் கியதால் தமிழ் அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து விடுதி முன்பாகத் திரண்டனர். நிலைமை சிக்கலானதைத் தொடர்ந்து, சென்னையிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகளுக்கு, இலங்கை வர்த்தகர் தகவல் தெரிவித்தார்.

அதன்பின்னர் எந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ள வேண்டாம். உடனடியாக நாடு திரும்புமாறு இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதன்படி நிகழ்ச்சிகளை நிறுத்திவிட்டு பிற்பகல் 2.10 மணிக்கு இலங்கை வர்த்தக பிரதிநிதி சென்னைக்கு புறப்பட்டுச் சென்றார்.

இந்நிலையில் இந்திய தொழில் கூட்டமைப்பு கூட்டத்தில் இலங்கை பிரதிநிதி கலந்து கொண்டுள்ளதாக, தமிழர் அமைப்புகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் விடுதி நுழைவாயில் முன்பாக பெரியார் திராவிடர் கழகம், நாம் தமிழர் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, திராவிடர் விடுதலை இயக்கம், இந்திய பூரான்கள் இயக்கம், தமிழர் களம், மனித உரிமைகள் அமைப்பு நிர்வாகிகள் திரண்டு வந்து கூட்டத்தில் பங்கேற்க வந்துள்ள இலங்கை பிரதிநிதியை வெளியேற்றக் கோரினர். அப்போது, விடுதி பெயர் பலகையை கல்வீசி தாக்கினர். அதையடுத்து, பொலிஸார் அவர்களிடம் பேச்சு நடத்தினர்.

இதற்கிடையில் விடுதியில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கை பிரதிநிதி கலந்துகொள்ளவில்லையென தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து சென்றனர். (வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நவிப்பிள்ளை

தொடரில் விவாதத்தில் எடுத்து ஆராய்ப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கட்டம் கட்டமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. எனவே இலங்கை விவகாரத்தில் நவநீதம்பிள்ளை காலக்கெடு எதனையும் விதிக்கமுடியாது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் சில குறைபாடுகள் காணப்பட்டாலும் அவற்றை நிவர்த்தி செய்து முன்னேற்றம் காண நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் எதுவும் கிடையாது - என்றார். (ஐ)

### போரால்

னங்கள் அங்கு பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்தே இயங்கவேண்டும். இது வெளிப்படையாகவே ஜனாதிபதியின் அதிகாரத்தை கையிலெடுக்கும் செயல். ஒரு ஜனநாயக நடைமுறைக்கு இது முற்றிலும் மாறானது.

உள்நாட்டு பொறிமுறையான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக்கூட அரசு நடைமுறைப்படுத்த தவறியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இலங்கை அரசுக்கு போதுமான காலப்பகுதி வழங்கப்பட்டபோதும் இந்த சந்தர்ப்பத்தை சரியாகப்பயன்படுத்தவில்லை என்றே கூற வேண்டும்.

2014 மார்ச் மாதத்திற்கு இடையில் இலங்கை அரசு தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால், சர்வதேச விசாரணைக்கான நட வடிக்கைகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் எடுக்க வேண்டும். இது தவிர்க்கமுடியாதது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் ஆஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் இலங்கையின் வடக்குக்கு நேரில் சென்று திரும்பியபோது, அங்குள்ள மக்கள் பயத்தினாலன்றி தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் வேலை வாய்ப்புகளுக்குமாகவே பெரும்பாலும் அரசியல் தஞ்சம் கோருவதாகத் தெரிவித்துள்ளார். இப்போது நீங்கள் கூறுவதைப்பார்த்தால் இருவரதும் அறிக்கைகளும் முரண்படுகின்றதே? என்ற கேள்விக்குப் பதில் அளித்த அவர்,

நான் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்துள்ளேன், அவர்கள் மிகவும் பயந்த சூழலில் வாழ்கின்றனர் என்பதை அறியமுடிந்தது. குறிப்பாக அண்மையில் வடக்கு மாகாணத்தில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் மிகவும் கடுமையாக அச்சுறுத்தப்பட்டார். இப்போதுஅவர் வெற்றியீட்டியுள்ளார். இவ்வாறாக சமூகத்தில் முக்கியமானவர்களே பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது சாதாரண மக்களைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள். பொதுமக்கள், ஊடகவியலாளர், சமூக செயற்பாட்டாளார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என்போர் தொடர்ச்சியாக நெருக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் என்னால் அறியமுடிந்தது.

இதை வைத்துக்கொண்டு ஆஸ்ரேலிய குடிவரவு அமைச்சு, ஒவ்வொரு புகலிடக் கோரிக்கையாளரின் பிரச்சினைகளையும் தனித்தனியே முக்கியத்துவம் கொடுத்து ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் .வெறுமனே அரசின் அறிக்கைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆஸ்ரேலிய அரசால் 1000க்கும் மேற்பட்ட இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறானவர்கள் இனரீதியாக துன்புறுத்தப்படுவதற்கான போதியளவு ஆதாரங்களைக்காட்டாமையே காரணமாக காட்டப்பட்டது. இதிலிருந்து கடந்த நான்காண்டுகளில் இலங்கையில் நிலமை மேம்பட்டிருக்கின்றது எனக் கருதலாமா? அல்லது இலங்கை அரசு தவறான பிரசாரங்களை செய்கின்றது என விளங்கிக் கொள்ளலாமா? என அவரிடம் கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த நவிப் பிள்ளை,

ஆஸ்திரேலி யாவின் அகதிகள் தொடர்பான உடன்படிக்கையின் 1951வது சரத்தின்படி, ஒவ்வொருவரது கோரிக்கைகளையும் தனித்தனியாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். நான் 2011இன் ஆஸ்ரேலியாவின் தடுப்பு முகாம்களுக்கு சென்றிருந்த சமயம் பெருமெண்ணிக்கையான இலங்கையை சேர்ந்த அகதிகள் நீண்ட நாள்களாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதை அவதானித்தேன். இவர்கள் உடனடியாக விடுவுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்-என்றார். (ஐ)

### மாவட்டத்துக்கு

யா எருக்கு அறிவிப் பதற்கு இன்று இறுதி நாள் என் பதனால், முக்கிய முடிவுகள் எட்டுவதற்காக தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் அங்கத்து வக் கட்சித் தலைவர்கள் மற் றும் முதலமைச்சர் வேட்பாளர் ஆகியோருக்கு இடையில் முக் கிய கலந்துரையாடல் நேற்று மாலை யாழ். நகரிலுள்ள விடுதி யொன்றில் இடம்பெற்றது.

போனஸ் ஆசனங்களில் ஒன்றை மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட அ.அஸ்மினுக்கும் மற்றைய ஆசனத்தை முல்லைத் தீவு மாவட்டத்தில் போட்டியிட்ட திருமதி மேரிகமலா குணசீலனுக்கும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் கட்சியின் செயலாளரினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு இன்று அறிவிக்கப்படவுள்ளது.

இதேவேளை, 4 அமைச்சுப் பதவிகளையும் இலங்கை தமிழரசுக் கட்சி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய 4 கட்சிகளுக்கும் ஒவ்வொரு அமைச்சுக்கள் வழங்குவதென்றும் என்றும் அவை 5 மாவட்டங் களையும் பிரதிநிதித்துவம் செய்யவேண்டும் எனவும் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

4 அமைச்சுக்களுக்கும் யார் யாரை நியமிப்பது என்பது குறித்து நாளை மறுதினம் புதன் கிழமை கொழும்பில் கூடி முடிவு எடுக்கப்படவுள்ளது. இந்தக் கலந்துரையாடலிலேயே யார் முன்பாக பதவியேற்பது, எப்போது பதவியேற்பது என்பது தொடர்பிலும் தீர்மானிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது. (ங-5)

### நல்லூர்

சுகாதாரத் தொழிலாளர்கள் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது திடீரென இலக்கத் தகடுகள் அற்ற நான்கு மோட்டார் சைக்கிள்களில் முகங்களைத் துணியால் கட்டியபடி வந்த இனந்தெரியாத 6 நபர்கள் சுகாதாரத் தொழிலாளர்களை சரமாரியாகத் தாக்கிவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் நல்லூர் பிரதேச சபைச் சுகாதார தொழிலாளர்களான தம்பிராசா-குணரட்ணம் (வயது-45, திருநெல்வேலி), எஸ்.ஜெகதீபன் (வயது- 45, கைதடி), குணரட்ணம்- சுவிந்தன் (வயது-27, கோண்டாவில்) ஆகிய மூவரும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை சுகாதாரத் தொழிலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை தாம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாகவும், தாக்குதலில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் திரு. ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (ங-400-14)

### ஒன்றரை

புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் ரணில், 2002 ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந் தத்தைக் குழப்பிய டித்ததே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அமைச்சர் விமல் வீரவன்ஸவும்தான்.

பிரபாகரன் தனி அரசு கோருகிறார் என குறிப்பிட்டு அவ்வொப்பந்தத் தையே இவர்கள் குழப்பியடித்து துடைத்தெறிந்துள்ளார்கள். பிரபாகரன் உண்மையில் தனி அரசைக் கேட்கவில்லை. அவர் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பாது காக்க ஒரு சுய ஆட்சி முறை யையே கோரினார்.

அதற்கு பின்னரான சுனாமி கட்டமைப்பை எதிர்த்தும் நீதிமன் றில் வழக்குத் தாக்கல் செய்து அதை இல் லாதொழித்தார்கள். இது போன்ற சமாதான ஒப்பந்தங்களை மஹிந்தவும், விமலும் குழப்பியடித்ததனாலேயே ஒன்றரை இலட்சம் தமிழர்களும், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இரா ணுவத்தினரும் அநியாயமாக போருக்குக் காவு கொடுக்கப்பட்டுள்ளனர்.

அன்று பிரபாகரன் சமாதான ஒப்பந்தத்தில் முன்வைத்த 26 கோரிக் கைகளைப் போன்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த விஞ்ஞாப னமும் காணப்படுகிறது.ஆனால், இதனையும் எதிர்த்து, இனவாதிகள் நாட்டில் மென்மேலும் துவேஷத்தையே அதிகரிக்கிறார்கள்" என்றார்.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் குமரகுருபரன் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக இன்று இனவாதக் கருத்து களை முன்வைக்கும் சம்பிக்க ரண வக்க, உதய கம்பன்பில மற்றும் விமல் வீரவன்ஸ போன்றோரை அரசு ஏன் இன்னமும் கண்டு கொள்ளாமல் உள்ளது?

இதேபோன்ற ஒரு இனவாதக் கருத்தை தமிழ் அரசியல் வாதியாரா வது பேசியிருப்பின் இந்நேரம் என்ன வாயிருக்கும். இப்படியான நிலையில் அரசு மௌனம் காப்பதுதான் புரியாமல் உள்ளது. 'ஒருவேளை அரசே இவ்வாறான கருத்துகளைத் தூண்டி விட்டிருக்குமோ?' என்ற சந்தேகமும் ஏற்படுகிறது.

இவர்களின் செயற்பாடுகளை அரசு கண்டு கொள்ளாவிடின் சர்வதேச ரீதியிலான பாரிய பிரச்சினைக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஒரு சிறந்த மனிதர். வித்தியாசமான அணு குமுறையைக் கொண்டவர். இதை அரசும் உணர்ந்து, அவருடன் ஒன்றிணைந்து செயற்பட்டால் நிச்சயமாக நாட்டில் நல்லிணக்கம் உரு வாகும்" என்

உதயன்
30/09/2013



யாழ். சதுரங்க சங்கம் நடத்திய பகிரங்க சதுரங்கச் சுற்றுப்போட்டியில் பங்கு கொண்ட வீர, வீராங்கனைகள்.

# கலைமதி அணி வெற்றி

யாழ்ப்பாணம், செப்.30

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50ஆவதுஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட தொடரில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணி வெற்றி பெற்றுள்ளது.



இதில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பொற்பதி 'ஏ' அணி மோதியது. ஆட்டம் தொடங்கியதிலிருந்தே பந்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கலைமதி அணியினர் வைத்திருந்தனர். கலைமதி அணி வீரரான சிந்துஜன் ஆட்டத்தின் 4 ஆவது , 12 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு அசத்தினார். இதனால் இடைவேளைக்கு முன்னர் 2:0 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் பொற்பதி 'ஏ' அணியினர் பந்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதும் கலைமதி அணியின் பின்கள வீரர்களின் அபார ஆட்டத்தால் பொற்பதி 'ஏ' அணி வீரர்களால் முன்னேறிச் செல்லும் முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டன. அதன் பின்னர் அதிரடியில் இறங்கினர் கலைமதி அணி வீரர்கள். அந்த அணியின் சந்துரு 33 ஆவது , 39 ஆவது நிமிடங்களிலும், சத்தியசீலன் 43 ஆவது நிமிடத்திலும், மீண்டும் சந்துரு 50 ஆவது நிமிடத்திலும் கோல்களை அடித்து அதிர்ச்சி வைத்தியம் அளித்தனர். இறுதியில் நவிண்டில் கலைமதி அணி 5:0 என்ற கோல் கணக்கில் பொற்பதி அணியை தோற்கடித்தது. (ங-422)

## சமபோஷ கிண்ண மகளிர் உதைபந்து இறுதியில் இளவாலை கன்னியர்மடம்

யாழ்ப்பாணம், செப். 30

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் சமபோஷ வெற்றிக்கிண்ணத்திற்காக பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப்பிரிவு அணிகளுக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ். மாவட்ட பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் இளவாலை கன்னியர்மடம் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

இளவாலை கன்னியர்மடம் அணிக்கும் குருநகர் சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அணிக்கும் இடையிலான இந்த அரையிறுதியாட்டத்தில் இளவாலை கன்னியர்மடம் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு நுழைந்தது. (ங-23)



# சமபோஷ உதைபந்து காலிறுதி முடிவுகள்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத் தினால் சமபோஷ வெற்றிக்கிண்ணத்திற்காக பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப்பிரிவு அணிகளுக்கான காலிறுதியில் யாழ். மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி வெற்றி பெற்றன.

யாழ்ப்பாணம், செப். 30

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினல் சமபோஷ வெற்றிக்கிண்ணத்திற்காக பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப்பிரிவு அணிகளுக்காக நடத்தப்படும்உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ். மாவட்ட ஆண்களுக்கான காலிறுதியாட்டங்கள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன. இந்தக் காலிறுதி ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு-

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யாழ் .மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

* * *

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணிக்கும் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலையே பெற்றதால் .வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில்சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

* * *


வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி அணிக்கும்வேலணை மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றதினால், வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

# மன்னிப்பு கேட்டார் பலோடெல்லி

நபோலி அணிக்கெதிரான போட்டியில் வாக்குவாதம் செய்ததற்கு மிலன் அணி வீரர் பலோடெல்லி மன்னிப்பு கேட் டார்.

இத்தாலி உதைபந்து அணியின் நட்சத்திர வீரர் மரியோ பலோடெல்லி. 23 வயதான இவர் மிலன் அணிக்காகவும் விளையாடி வருகிறார்.



கடந்த 22ஆம் திகதி நடந்த இத்தாலி லீக் போட்டியில் நபோலி அணி, மிலன் அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தியது.

இந்தப்போட்டி முடிந்தபின், பலோடெல்லி நடுவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதற்காக அவருக்கு அடுத்த மூன்று போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. தற்போது இந்தச் சம்பவத்துக்காகப் பலோடெல்லி மன்னிப்பு கேட்டுள்ளார்.

இது குறித்து பலோடெல்லி கூறுகையில், நடந்த சம்பவத்துக் காக சகவீரர்களிடமும், நடுவரிடமும் முதலில் மன்[illegible]ப்பு கேட்டுக்கொள்கிறேன். [illegible]யில்லாத தூண்டுதல்களால் தவறுதலாக நடந்து விட் டேன்.

நபோலி அணிக்கெதிரான போட்டியில் தவறு செய்யாமலேயே என் மீது வரிசையாக தவறுகள் அடுக் கப்பட்டன என்றும் அதை எப்படி வெளிக் காட்டுவது என்று தெரியாமல் தான் இந்த தவறு நடந்தது எ[illegible] கூறினார். (கு)

"இத்தாலி உதைபந்து அணியின் நட்சத்திர வீரர் மரியோ பலோடெலி. 23 வயதான இவர் மிலன் அணிக்காகவும் விளையாடி வருகிறார்.


# கிவிட்டோவா, சானியா ஜோடி சம்பியன்

பான் பசிபிக் ரென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் கிவிட்டோவா சம்பியன் பட்டம் வென்றார்.

ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரில் பான் பசிபிக் ஓபன் பெண்கள் ஒற்றையர் பிரிவுக்கான இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது.

இந்தப் போட்டியில் செக் குடியரசு நாட்டின் பெட்ரா கிவிடோவா மற்றும் ஜேர்மனி நாட்டின் ஏஞ்சலிக் கெர்பர் ஆகியோர் மோதினர்.

இதில் கிவிட்டோவா 6-2, 0-6, 6-3 என்ற செட் கணக்கில் போராடி கெர்பரை வீழ்த்திப் பட்டத்தை வென்றார். (கு)



## இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தமது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்ட வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று பிற்பகல் 4 மணிக்கு வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனீஸ் அணி மோதவுள்ளது. (422)

## உதைபந்து தொடர் இன்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், செப். 30

யாழ் உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது என்று போட்டி ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ங-23)

# அரையிறுதிக்குச் சென்னை



பிரிஸ்பேன் அணிக்கெதிரான சாம்பியன்ஸ் லீக் தொடரில் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற சென்னை அணி அரையிறுதிக்கு முதல் அணியாக முன்னேறியது.
ராஞ்சியில் நேற்று முன்தினம் நடந்த சாம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் 'பி' பிரிவு லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் ஹீட் அணிகள் மோதின.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணித் தலைவர் டோனி களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பிரிஸ்பேன் அணி 20 ஓவர் முடிவில் 7விக்கெட் இழப்பிற்கு 137 ஓட்டங்கள் எடுத்தது.
அணித்தலைவர் ஜேம்ஸ் ஹோப்ஸ் 20 ஓட்டங்களும், கிறிஸ் லின் 29 ஓட்டங்களும், ஹார்ட்லி 35 ஓட்டங்களும், கட்டிங் 42 ஓட்டங்களும் எடுத்தனர்.
இதனையடுத்து 138 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி 15.5 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்கள் எடுத்து சுலப வெற்றி பெற்றது. முரளி விஜய் 42 ஓட்டங்களும், ரெய்னா 23 ஓட்டங்களும், ஆட்டமிழக்காமல் மைக் ஹசி அரைசதம் கடந்து 57 ஓட்டங்களும் எடுத்தனர்.
ஏற்கனவே டைட்டன்ஸ், ஐதராபாத்தை வீழ்த்திய சென்னை அணி ஹட்ரிக் வெற்றியுடன் அரையிறுதிக்கு தகுதி பெற்றது. பிரிஸ்பேன் அணி வெளியேறியது. ஆட்ட நாயகன் விருதை மைக்கேல் ஹசி வென்றார். (கு)

# சீனிவாசனுக்கு புதிய சிக்கல்



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் பதவிக்கு போட்டியிட சீனிவாச னுக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி கொடுத் தது. இருப்பினும், தேர்தலில் வெற்றி பெற்றாலும் இறுதி தீர்ப்பு வரும் வரை தலை வராக பதவி ஏற்க முடியாது என்று செக் வைத்தது.
இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவராக 2011 முதல் சீனிவாசன் உள்ளார். ஐ.பி.எல் சூதாட்டத்தில், இவரது மருமகன், குருநாத் மெய்யப்பன் சிக்கியதால் கடந்த ஜூன் மாதம் தலைவர் பதவியில் இருந்து ஒதுங்க நேர்ந்தது.
சூதாட்டம் குறித்து விசாரித்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நியமித்த இரு நபர் குழு செல்லாது என்று மும்பை உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. இதனால், கடந்த ஒகஸ்ட் 2இல் டில்லியில் நடந்த செயற்குழு கூட்டத்தில் தலைவராக வர இருந்த சீனிவாசனுக்கு சிக்கல் ஏற்பட்டது.
இதனிடையே, சீனிவாசனின் 2 ஆண்டு பதவி இம்மாதத்துடன் முடிகிறது. வழக்கமாக, மேலும் ஒரு ஆண்டுக்கு தேர்தல் மூலம் பதவி நீடிக்கப்படும். ஆனால், குருநாத் பிரச்சினையால், சீனிவாசனுக்கு எதிர்ப்பு நிலவுகிறது.
இருப்பினும், தெற்கு மண்டலத்தில் உள்ள 6 கிரிக்கெட் சங்க உறுப்பினர்களின் ஆதரவுடன் வரும் செப்ரெம்பர் 29இல் சென்னையில் நடக்கவுள்ள ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் மீண்டும் போட்டியிட முடிவு செய்தார்.
இதற்கு தடை விதிக்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அனுமதி பெறாத பீகார் கிரிக்கெட் சங்க (சி.ஏ.பி..) செயலர் ஆதித்ய வர்மா சார்பில், உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.
இது, நீதிபதி ஏ.கே.பட்னாயக் தலைமையிலான ஆயம் முன்பு விசாரணைக்கு வந்தது.
முடிவில், நீதிபதி அளித்த தீர்ப்பில், சென்னை பொதுக்குழு கூட்டத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை திட்டமிட்டபடி நடத்தலாம். இதில் தலைவர் பதவிக்கு சீனிவாசன் போட்டியிட நீதிமன்றம் அனுமதிக்கிறது.
ஒருவேளை இவர் தேர்தலில் வெற்றி பெற்றால், இந்த வழக்கு தொடர்பான இறுதி தீர்ப்பு வரும் வரை, தலைவர் பொறுப்பேற்க முடியாது. இது தொடர்பான வழக்கு, வரும் 30ஆம் திகதி தொடர்ந்து நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

# பெண்கள் இரட்டையர் பிரிவு



பெண்கள் இரட்டையர் பிரிவுக்கான இறுதிச் சுற்றில் சானியா, காரா பிளாக் ஜோடி- சீனதைபேயின் ஹியோ, அமெரிக்காவின் ஹியுபர் ஜோடியை எதிர்கொண்டது.
இதில் முதல் செட்டை 4-6 என இழந்த சானியா ஜோடி, இரண்டாவது செற்றை 6-0 எனக் கைப்பற்றியது.
வெற்றியாளரை நிர்ணயிக்க சூப்பர் ரை-பிரேக்கருக்கு சென்றது. இதில் அசத்திய சானியா ஜோடி 11-9 என தன்வசப்படுத்தியது.
முடிவில் சானியா, காரா பிளாக் ஜோடி 4-6, 6-0, 11-9 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை வென்றது. (கு)

# வில்லாரியல் அணி வெற்றி




லா லிகா உதைபந்தாட்டத் தொடரின் லீக் போட்டியில் வில்லாரியல் அணி வெற்றி பெற்றது.
ஸ்பெயினில் லாலிகா உதை பந்தாட்டத் தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் வில்லா ரியல், ஸ்பானியால் அணிகள் மோதின. இதில் போட்டி தொடங்கிய முதல் நிமிடத்திலேயே வில்லாரியல் வீரர் ஜெரீமி முதல் கோல் அடித் தார். இதற்கு ஸ்பானியால் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.
பின் இரண்டாவது பாதியிலும் தொடர்ந்து அசத்திய வில்லா ரியல் அணிக்கு ஜொனாதன் (67வது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ஸ்பானியால் அணியின் சொர்ஜியோ (80ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார்.
முடிவில், வில்லாரியல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மற்றொரு போட்டியில் அத்
பில்பாவோ, ரியல் பெடிஸ்
2-1 என்ற கோல் கண
தியது. மற்றொரு
விகோ அண
0-2 என

உதயன்
30/09/2013

# வென்றது ராஜஸ்தான் வெளியேறியது பேர்த்



அதிரடியாக துடுப்பெடுத்தாடும் ரஹானே



ஆட்டநாயகன் விருது

சம்பியன்ஸ் லீக் தொடரின் அரையிறுதிக்கு ராஜஸ்தான் அணி முன்னேறியது. நேற்று நடந்த லீக் போட்டியில் பேர்த் அணியை 9 இலக்குகள் வித்தியாசத்தில் மிகச் சுலபமாக வீழ்த்தியது. இரண்டு போட்டிகளில் தோல்வியடைந்த பேர்த் அணியின் அரையிறுதி வாய்ப்பு முடிவுக்கு வந்தது.

ஜெய்ப்பூரில், நேற்று இரவு நடந்த 5ஆவது சம்பியன்ஸ் லீக் 20/20' தொடருக்கான ஏ' பிரிவு லீக் போட்டியில் ராஜஸ்தான் (இந்தியா), பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் (ஆஸ்திரேலியா) அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித்தலைவர் ராகுல் டிராவிட், களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

பேர்த் அணிக்கு லியாம் டேவிட்ஸ் (18), ஆஷ்டன் ஏகார் (10) ஓரளவுக்குநின்று பிடித்து ஓட்டங்கள் சேர்த்தனர். அணித்தலைவர் சைமன் கடிச் (12), ஹில்டன் கார்ட்ரைட் (5) ஏமாற்றினர். மெனேரியா பந்தில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரி அடித்த அடம் வோஜஸ் (2%) நிலைக்கவில்லை. அடுத்து வந்த ரொம் டிரிப்பிட் (2), ஜோயல் பாரிஸ் (2), ஜோ மெனியே (2) ஆகியோர் சொற்ப ஓட்டங்களோடு வெளியேறினர். அஸ்ரன் டர்னர் (11) சோபிக்கவில்லை. மைக்கேல் பியர் (3) ரன்-அவுட்' ஆனார். பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது. ஜாசன் பெரென்டார்ப் (12) ஆட்டமிழக்காமல் இருந்தார். ராஜஸ்தான் சார்பில் கெவின் கூப்பர் 4, பர்விண் டாம்பே, ஜேம்ஸ் போல்க்னர் தலா 2, ஷேன் வொட்சன் ஆகியோர் ஒரு இலக்கை வீழ்த்தினர்.

சுலப இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு முதல் பந்துப்பரிமாற்றத்தில் அதிர்ச்சி காத்திருந்தது. ஜாசன் பெரென்டார்ப் வேகத்தில்' டிராவிட் (0) போல்டானார். பின்னர் இணைந்த அஜின் கியாரகானே, சஞ்சு சாம்சன் இணை அபாரமாக ஆடியது. மைக்கேல் பியர் பந்தை சிக்ஸருக்கு அனுப்பிய ரகானே, அரை சதத்தை பதிவு செய்தார். இவருக்கு ஒத்துழைப்பு சாம்சன், தன் பங்கிற்கும் அரைசதம் அடித்தார். பொறுப்பாக ஆடிய இவர்கள், அணியை வெற்றிக்கு அழைத்து சென்றனர்.

ராஜஸ்தான் அணி 16.3 பந்துப் பரி மாற்றங்களில் ஒரு இலக்கை மாத்திரம் வெற்றி பெற்றது. ரகானே (62 ஓட்டங்கள்), சாம்சன் (50 ஓட்டங்கள்) ஆட்டமிழக்காது இருந்தனர். ஆட்டநாயகன் விருதை ராஜஸ்தான் வீரர் கெவின் கூப்பர் வென்றார். ஏற்கனவே மும்பை, லயன்ஸ் அணிகளை வீழ்த்திய ராஜஸ்தான் அணி, ஹாட்ரிக்' வெற்றியுடன் அரையிறுதிக்கு முன்னேறியது. தொடர்ந்து இரண்டாவது தோல்வி கண்ட பேர்த் அணியின் அரையிறுதிக் கனவு தகர்ந்தது.

**11ஆவது வெற்றி**

ராஜஸ்தான் அணியை சொந்த மண்ணில்(ஜெய்ப்பூர், சவாய் மான்சிங் மைதானம்) அசைக்க முடியவில்லை. இங்கு, கடந்த பிரிமியர் தொடரில் 8 மற்றும் தற்போதைய சம்பியன்ஸ் லீக்கில் 3(எதிர், மும்பை, லயன்ஸ், பெர்த்) என்று தொடர்ந்து 11 வெற்றிகளை பதிவு செய்து, ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

**கல்வி**

கணினி, சிங்களம், ஆங்கிலம்

-அடிப்படையிலிருந்து
-15 வருட அனுபவ ஆசிரியர்
-6 மாத காலம் 3000/= மட்டுமே
-9.00A.M -6.00P.M வரை
-A.K. MOORTHY(பட்டதாரிஆசிரியர்),KOLIN
-நிறுவனம் 14 வருட பூர்த்தி
-அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

SKY COMPUTER (PVT) Ltd.
89, கண்டி வீதி,
யாழ் கச்சேரி அருகில்
021 222 1417
(#/12160)
(4.6.3)

**வேலையாள் தேவை**

Computer Type Setting தெரிந்த பெண் பிள்ளை தேவை.
தொடர்பு:- 0772236027 யாழ்ப்பாணம்.

**வீடு வாடகைக்கு**

உரும்பிராய் சந்தியில் 100m தூரத்தில் மருதனார்மடம் றோட்டில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
(#/12194)
(4.6.3)
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு: 071 493 3276

## பத்துக்கோடியா? பதற வைத்த டோனி

பிரபல சூட் நிறுவனம் ஒன்று தங்கள் விளம்பரத்தில் நடிக்க, விளம்பரத்தூதராக இருக்குமாறு கேட்டு இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் டோனியை அணுகியுள்ளது.

அவரோ 10 கோடி ரூபாசம்பளம் கேட்கவே இது மிகப்பெரியதொகை என கூறி அங்கிருந்து கிளம்பிவிட்டார்கள் நிறுவன அதிகாரிகள். இதையடுத்து பாலிவுட் நடிகர் சைஃப் அலி கானை அணுகியபோது அவரோ டோனி கேட்டதில் மூன்றில் ஒரு பங்கு தொகையையே அதாவது 3 கோடி ரூபாவையே சம்பளமாகக் கேட்டுள்ளார். இதனால் மகிழ்ச்சி அடைந்த அந்த நிறுவனம் சைஃப் அலி கானை தங்கள் விளம்பரத்தூதராக நியமித்து ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டது.

## மரண அறிவித்தல்

### சந்திரோதயமலர்



தோட்டத்து வளவு,வதிரி,கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட சந்திரோதயமலர் அவர்கள் 29-09-2013 ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னார், வைரமுத்து,மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், தம்பிராசா, கற்பகம் தம்பதிகளின் மருமகளும், நவரட் ணம் அவர்களின் அன்பு மனைவியும், விஜிதா, விஜிதன், நவநீதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசமணி, செல்வ மணி,ஜெயமணி அவர்களின் அன்புச் சகோதரியும், கனகரட்ணம்,இரவீந்திரன் அவர்களின் அன்பு மைத்துனியும், தியாகேஸ்வரன், சிவகணேசன், சாந்தகுமாரன், புனிதமலர், குமுதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுசூயா, ரேணுகா, சரவணபவன், கிருஷ்ண பவன், அபர்ணா,நிர்மல்,சதீஸ்,ஆர்த்தி அவர்களின் அன்புச் சிறிய தாயும், யக்சனா, அனந்திகன், சாதுரியன்,சந்தனா அவர்களின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2013) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இல.60,திருமால்வீதி, திருகோணமலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். [illegible] அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு [illegible]ங்கொள்கின்றோம்.

[illegible]டர்புகளுக்கு
[illegible]2220953

தகவல்
கிருஷ்ணபவன்
(சிங்கப்பூர்)

## மரண அறிவித்தல்

### நாகமணி இலட்சுமிப்பிள்ளை



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மதவடிலேன், கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி இலட்சுமிப்பிள்ளை நேற்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற விஸ்வகுலத்திலகர் கணபதிப்பிள்ளை- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகமணியின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, நாகதேவி, நகுலேஸ்வரி, நாகரத்தினேஸ்வரன் (சிட்டு) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற நானசுந்தரம் மற்றும் விபுலானந்தசாமி காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் தங்கேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2013) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காகப் பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

555/6, மதவடி லேன்,
வண்ணார்பண்ணை,
(நாச்சிமார்கோயிலடி) யாழ்ப்பாணம்.
(32155-23-14)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர்,தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.

சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.10.2013 சனிக்கிழமை

1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 1.00-03.00
4. மாலை 3.00-05.00

எமது 3 மாத பயிற்சி நிறைவில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.

SAAMSON 2[illegible], ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

[illegible]யன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.09.2013 இல்